he "Bharati." Reg. No. 2456.

ஆங்கீரஸ சித்திரை
1932-ம் ௵ ஏப்ரல்—மே ௴




மாலை 4. மணி 1.

# ஓர் செந்தமிழ்
# மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

2 ஐ11,N29 BH
N32.4.1
197879

# போஷகர்கள்.

1. Messrs. மர்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ்,
சென்னை.

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர்,
தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள்,
சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ்
ராஜா எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள், சொந்தக்காரர்,
ஆனந்த விலாஸ் எஸ்டேட், தேவாரம்

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், தேவாரம்.

6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள்,
ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள், மிராஸ்தார்,
சித்தயங்கோட்டை.

9. ,, ஜான் அந்தோனி ஆஜு அவர்கள்,
பைசன்வாலி, தேவிகுளம், திருவிதாங்கூர்.



# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர்
அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன்,
போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர்
அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு
விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டாரர் அவர்கள், மானேஜர், T. C. P. A.
ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd.,
பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார்,
உத்தமபாளையம்.

16. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார்
அவர்கள், மிராஸ்தார் & மெம்பர், ராமேஸ்வரம்
தேவஸ்தானக் கமிட்டி, போடிநாயக்கனூர்.

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.


---


## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| பக்கம் 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. 10—0—0 |
| ,, ½-க்கு | | ,, 5—8—0 |
| ,, ¼-க்கு | ,, | ,, 3—0—0 |

¼-பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களுக்கு இடமில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர், "பாரதி."



படங்களுடன் வெளிவந் துலாவும் தேசீய மாவிகை.

மாலை 2. மணி 4.

OF THE ... 9 MAY 1930 ... MADRAS

# பொருள் அடக்கம்.


| தொடர் எண் | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஆசியாவின் இருந்தவக் கதிரோன்—சங்கைக்குரிய (H. A. Popley) பாப்லி அவர்கள் | 241 |
| 2. | அழகும் ஆரோக்கியமும்—ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் ... | 247 |
| 3. | கல்வியும் நம் நிலைமையும்—ஸ்ரீமான் கு. கொ. கிருஷ்ணன் அவர்கள், B. A., B. Sc. (Hons.) | 253 |
| 4. | எனது ஐரோப்பா யாத்திரை—ஸ்ரீமான் M. கிருஷ்ண பாரதியார் அவர்கள், M. A., B. L. ... | 258 |
| 5. | பண்டைக் காலப் பெண் கல்வி—பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மாள் அவர்கள் ... | 267 |
| 6. | சுதந்தரப் பாசறை—ஜனாப் கான் முகமது அவர்கள் ... | 270 |
| 7. | ஜான்ஸி மஹா ராணி லக்ஷ்மீ பாய்—ஸ்ரீமான் என். வேங்கடரமணன் அவர்கள் ... | 273 |
| 8. | இந்தியாவின் விடுதலை—ஸ்ரீமான் ராமசுப்பிரமணிய காவலர் அவர்கள் ... | 292 |
| 9. | இந்தியாவின் ஏக்கம்—ஜனாப் K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள் ... | 298 |
| 10. | உப்பு வரி சத்தியாக்கிரகம்—ஆசிரியர், "பாரதி." ... | 300 |
| 11. | ஆசிரியர் குறிப்புகள் ... | 312 |

1. எம்மைப்பற்றி, 2. படிப்பாளிகளுக்கு, 3. இந்திய வைத்தியப் பட்டங்கள், 4. பிரிட்டனுக்கு அமெரிக்காவின் அறிக்கை, 5. உப்பு வரிப் போர், 6. அடக்குமுறை, 7. தஞ்சை ஜில்லாக் கலெக்டர் காரனுக்கு அபஜெயம், 8. சுயராஜ்ய பவனம், 9. ஸ்திரீ தொண்டர்கள், 10. மகாத்மா காந்தி அவர்களின் பொன்னுரைகள், 11. காந்தி நிலையம், சிராவயல், 12. வளையல் சங்கம், 13. முஸ்லீம் சகோதரர்களுக்கு.


## படம்.


1. ஜான்ஸி மஹா ராணி லக்ஷ்மீ பாய்.



ஜான்ஸி ராணி.


# பாரதி

ஓர் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ஆசிரியர்: ரா. நாராயணசுவாமி.

| மாலை | உத்தமபாளையம் | மணி |
|---|---|---|
| 2 | 1930-ஆம் ஏப்ரல்மீ | 4 |


MADRAS
MAY 1930

# ‘ஆசியாவின் இருந்தவக் கதிரோன்’

சங்கைக்குரிய **H. A.** பாப்லி அவர்கள்.*

***(Rev. H. A. Popley)***

*‘அருந்தவத் தான்மசக்தி யாணுருப் பூண்ட தன்னான்*
*பெருந்தவத் தொளியால் ஞானம் பிறங்குறும் ஆசியாவின்*
*இருந்தவக் கதிரோன்; கீழே யெழுந்து மேற் றிசையுமெங்கும்*
*பொருந்திய சான்றோ ரெங்கள் பூசனைக் குரிய நாதன்’!*

—சுவாமி சுத்தானந்த பாரதியார்.

யான் இப்பொழுது ‘பாரதி’யின் பத்திராதிபர் வேண்டுகோட்கிணங்கி ‘ஆசியாவின் இருந்தவக் கதிரோன்’ என்ற கிறிஸ்து பெருமானது சரிதையை சுருங்க எழுதத் துணிவுள்ளேன். இம் மகானது

---

* சங். **H. A.** பாப்லி ஒரு ஐரோப்பிய கிறிஸ்தவப் பாதிரியார். அவர் ஐரோப்பியரா யிருந்தும் எவ்வளவோ அழகாயும் நன்றாயும் அர்த்த புஷ்டியுடனும் தமிழில் எழுதுகிறார். தமிழர்களுக்குத் தமிழ் பாஷையில் இப்பொழுது எவ்வளவு பற்று இருக்கிறது.

ஆசிரியர், “பாரதி.”

சரிதையைப் பூரணமாய் எழுத எண்ணினால் கழிந்த இரண்டாயிர வருடங்களுக்குப் பூலோக சரித்திர முழுவதையும் ஆராய்ந்து அதை எழுதவேண்டியது. ஆதலால் அந்த நோக்கம் ஒழித்து கிறிஸ்து பெருமான் திருவவதாரப் புருஷராய் பலஸ்தீனா நாட்டில் வசித்து விளங்கின சரிதையை மட்டிலும் எழுதத் துணிந்தேன்.

முற் காலத்தில் இந்தியாவில் கிறிஸ்து பெருமானைப்பற்றி சில தப்புக் கோட்பாடுகள் பரம்பின. அவர் ஒரு சமயத்தாருக்குப் பிரத்தியேகத் தெய்வமென்றும் ஹிந்து பௌத்த முஸ்லிம் மார்க்கங்களுக்கு விரோதி என்றும் ஜனங்கள் பொதுவாய் எண்ணிக்கொண்டார்கள். இந்தத் தப்பெண்ணத்திற்கு கிறிஸ்து நாதரின் சீஷர்களும் விளம்பின மொழியே ஓர் காரணம். இக்காலத்திலோ கிறிஸ்தவர்களும் அவ்வாறு மொழியாமல் யூதேயா மதத்தின் உயர்தர நோக்கங்களை நிறைவேற்ற எப்படி உரைத்தனரோ அப்படியே எல்லா மதங்களையும் நிறைவேற்றும் கர்த்தாவா யிருக்கிறாரென்றே விளங்கினராய் எம் மதத்திற்கும் விரோதியாகாமல் உலக முழுவதிற்கும் நன்னெறி நிரூபியா யிருக்கிறாரென்று ஒப்புக்கொள்ளப்பட்டனர். அவ்வாறிருக்கவே அவரது சரிதையை எழுதல் இக்காலத்தில் பிற மதத்தார் மனதில் வெறுப்பு உண்டாக்காமல் நன்னெறி விரும்புவோர் யாவரும் அகமகிழ்ந்து வாசிக்கத் தக்கதாயிருக்கும் என்று உத்தேசிக்கலாம். யான் ஒரு மதத்தைச் சிறப்பித்து மற்ற மதங்களைக் குறைத்துச் சொல்ல எண்ணாமல் இயேசு மகானது சரிதையை சமரசமாய் எழுத விரும்பிப் பத்திராதிபர் கருத்தை நிறைவேற்ற ஆரம்பிக்கிறேன்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே மத்ய கடலைச் சுற்றிலுமுள்ள தேசங்கள் யெல்லாவற்றிலும் ஜெர்மனி பிரிட்டன் முதலிய வட தேசங்களிலும் ரோம ராஜ்யத்தின் அரசு நிலை நின்றுகொண்டிருந்தது. சூரியா நாடு இத் தேசங்களில் ஒன்று. சூரியா நாட்டில் பலஸ்தினா நாடு ஓர் சிறு பங்கு இந் நாடானது ஓர் சிறு நாடாகி ஆசியா ஐரோப்பா ஆப்பிரிக்கா கண்டங்களின் நடுவில் நின்றது. அதின் அகலமும் நீளமும் ஏறக்குறைய மலையாள நாட்டிற்குச் சமானமா யிருந்தது. அதின் ஜனத் தொகையோ மலையாள நாட்டின்



ஜனத் தொகையிலும் குறைந்தது ஒரு வேளை அக் காலத்தில் பத்து லட்சம் பெயர் இருந்திருக்கலாம். இந் நாடு நான்கு ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் ஓர் அதிகாரியைப் பெற்றது.

ஆகுஸ்தன் ராயன் ரோம சக்கரவர்த்தியாக அரசு புரிந்த காலத்தில் பலஸ்தினா நாட்டின் வடபாகத்தில் நாசரேத்தூரிலே ஓர் ஆசாரிக் குடும்பம் வசித்தது. புருஷன் பெயர் யோசேப்பு; அவன் மனைவி மரியாள். முதற் பிள்ளை பிறக்கும் சமயத்திலே ரோம ராஜ்ய முழுவதிலும் ஜனத் தொகை எடுக்கும்படியாக யாவரும் பிறந்த ஊர்களுக்குப் போக வேண்டுமென்று உத்தரவு வந்தது ஆதலால் யோசேப்பும் மரியாளும் யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் ஊருக்குப் போய்ச் சேரப் புறப்பட்டார்கள். நாசரேத்தூர் பலஸ்தினாவின் வடபாகத்திலிருந்தது. பெத்லகேம் தென் பாகத்தில் எருசலேம் பக்கத்தில் இருந்தது. இருவரும் பெத்லகேமூரைச் சேர்ந்து தங்க இடம் கிடைக்காமல் அலைந்து திரிந்து கடைசியாக ஓர் மாட்டுத் தொழுவத்தில் இடம் பெற்றனர். அவ் விடத்திலே முதற் பிள்ளை பிறந்தது. அப் பிள்ளைக்கு இயேசு என்று பெயரிட்டார்கள் வீரமா முனிவர் அதைப் பற்றி பாடினதாவது:

'மாதம் மார்கழி வைகலை யைந்தாய்
ஏதிலா நிசிக் கிருத்தை மூவைந்தாய்
ஆதி நானென வாதி நாதனைக்
காத ணயகிக் களிப்பி னல்கினாள்.'

சுத்தானந்த பாரதியாரும் பின் வருமாறு:

'வையகம் மகிழ்வாற் பொள்க வானகம் புதுமீன்காட்ட
உய்யுமென் றுவகை தாண்ட யூதரின் கலிதீர்ந்தன்ன
செய்யுமா வுணர்ச்சி சேரச் செருவெலாம் அமைதியாக
ஐயனும் அகட்டை நீத்தே யம்புவிக் கவதரித்தான்.'

அவரது பிறப்பைக் குறித்து அநேக அதிசய செய்கைகள் நடந்ததாகச் சொல்லுகிறது; எனினும் இச் சுருக்கத்தில் அவைகளை எழுத இடமின்று. யோசேப்பும் மரியாளும் குழந்தையை எடுத்துக்கொண்டு நாசரேத்தூருக்குச் சென்று அவ்விடத்தில் வசித்து வந்தார்கள்.

இயேசுவின் பாலியப் பருவத்தைக் குறித்து ஒரு சம்பவ மாத்திரம் தெரிய வந்தது. அவர் பன்னிரண்டு வயதுள்ள போது பெற்றோருடன் எருசலேம் நகரின் தேவாலயத்திற்கு பஸ்கா பண்டிகை சமயத்தில் போனார். காரியமெல்லாம் முடிந்தபின் யோசேப்பும் மரியாளும் திரும்பிப் போனார்கள். அவரோ மற்றெல்லாம் மறந்து தேவாலயத்தில் நின்று யாவரும் வியக்கத்தக்கதாய் வேத ஞானிகளுடன் வைதீக சம்பாஷணை செய்து கொண்டார். எல்லாவற்றிலும் கடவுளறிவு சிறப்புளதென்றெண்ணி உலக சம்பிரதாயங்களை நினையாமல் தெய்வ தியானத்தில் பூரணமாய் அமர்ந்து போனார். பெற்றோர் பையனைக் காணாமல் திரும்பிச் சென்று தேவாலயத்தில் அவரைக் கண்டவுடன் 'ஏன் எங்களை வருத்தினாய்?' என்று கேட்க அவர், 'நான் என் தகப்பன் வேலையில் அமர்ந்திருக்க வேண்டுமென்று உங்களுக்குத் தெரியவில்லையா?' என்று வினவிக் கொண்டு அவர்களோடு திரும்பிப் போய் நாசரேத்தூரில் பெற்றோர்க்குக் கீழ்ப்படிந்து தகப்பனுடன் வேலை செய்து கொண்டு வந்தார். தகப்பன் இறந்துபோக இயேசுவே தச்சு வேலையை நடத்திக் குடும்பத்தைப் பாதுகாத்துக் கொண்டார்.

இக் காலத்தைப் பற்றி சுத்தானந்த பாரதியார் எழுதினதாவது:

'யோசப்பங்கொரு தச்சனா யொழுக்குடன் உழைத்தான்,
நாசரேனெனும் பெயருடன் நலத்தினில் திகழும்;
எசுநாதனும் இளந்தொழி லாளியாய்ப் பயின்றான்;
தேசுடன் பிறந் தேயினுங் கற்றனன் சிறிதே.'

அவ்வாறு 'பொறையும் வாய்மையும் அன்பொடும் பொருந்திடப் பொலிந்து' வளர்ந்தார்.

அவர் முப்பது வயதான போது அவரது பந்துவான யோவான் சந்நியாசம் புகுந்து யூதேயா நாட்டின் மணல் தரைகளில் வசித்து 'தேவ ராஜ்யம் சீக்கிரத்தில் உலகில் வரும்' என்றும் 'மனிதர் யாவரும் பிழை யுணர்ந்து மனந் திரும்பி நன்னெறியில் நடந்து வரவேண்டும்' என்றும் உரை சாற்றி வந்தான். அநேக ஜனங்கள் அவனிடம் போய்ச் சேர்ந்து சிலர் அவன் சிஷரானார்கள். யார் புது வழியில் வந்து சேர்ந்தார்களோ அவர்களுக்கு அவன் ஆற்றிலே ஜலதீட்சை கொடுத்தான்.



முப்பது வருஷமாக இயேசு தச்ச வேலை செய்து கொண்டு ஆத்மீக விஷயங்களை எண்ணிக் கொண்டுவந்து கடவுளறிவு பெற முயன்று வந்தார். யோவான் வந்து இவ்வாறு உரை சாற்றின போது இது தெய்வ வார்த்தை யென்றறிந்து யோவானிடம் ஜலதீட்சை பெற்றார். அப்போது வீட்டை விட்டுவிட்டு பரதேசிப் போதகராய் சீஷர்களைச் சேர்த்து கலிலேயா யூதேயா முதலிய பலஸ்தீனா நாடுகளில் எங்கும் திரிந்து புது உபதேசம் பண்ணினார். அவரது உபதேசம் அன்பின் உபதேசம் என்று சுருங்கச் சொல்லலாம். 'கடவுள் எல்லா மனிதர் பேரிலும் அன்பு வைப்பவர்; அவரை மனிதரும் நேசித்து நம்பவேண்டும்; மனிதர்களும் எப்போதும் அன்பின் வழியில் நடந்து செல்லவேண்டும்;' என்பதே அவரது உபதேசம். மதக் கோட்பாடுகளும் பிரமாணங்களும் ஆசாரங்களும் பெருமைப் படுத்தி அன்பையும் பக்தியையும் சிறுமைப்படுத்திக் கொள்ளுதல் பெருந் தப்பு என்றும் மதத்தின் முக்கிய சாராம்சம் சடங்காசாரங்களிலில்லை என்றும் போதித்து மத மான்மியர்களின் கள்ள மனதையும் மாயமாலத்தையும் கடிந்து பேசினார். அவர் பூரணமாய் உண்மையுள்ளவர். கடவுளை உள்ளறிவினால் அறிந்து பொது ஜனங்களுக்கு நாடோடிய உதாரணங்களுடன் அவ்வறிவை விளக்கிக் காட்டினார். தேவாலயத்தின் அதிகாரிகளும் வேதாச்சாரியர்களும் தங்கள் அதிகாரத்துக்குள் அடங்காத இப் புதிய போதகருடைய இயக்கத்தைக் கண்டு கோப மூண்டு அவரைக் கொலை செய்ய முயன்றார்கள். அவர் வெளிப்படுத்தின பக்தி ஆசாரங்களையும் பாரம்பரைகளையும் மதிக்காமல் இருதயத்தின் உண்மையை மாத்திரம் கவனித்து மேன்மைப் படுத்தினது. ஜனங்கள் யாவரும் இவர் வார்த்தைகளைக் கேட்டு அகமகிழ்ந்து பின் தொடர்ந்தார்கள். 'சில காலங் கழிந்து நமது மேன்மை யெல்லாம் ஒழிந்து போகு மென்றும், தேவாலயத்தின் அர்ச்சனை நீங்கி விடும்' என்றும் நினைத்து சீக்கிரத்தில் இவரை ஒழிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அதோடு நன்னெறியின் மாட்சிமையை வெளிப்படுத்திக் கொண்டு இதற்கு மாறுபாடான பல வழக்க பழக்கங்களையும் லாப சம்பிரதாயங்களையும் கடிந்து கொண்டார். ஆதலால் அவர்களுடைய தீர்மானம் இன்னும் அதிக உறுதி பெற்று பல ஏற்பாடுகளை யோசித்தார்கள்.

'மனிதனே யென மாசறு பற்பலர்;
புனிதரென் றனர் புண்ணிய நெஞ்சினர்;
சனிய னென்றனர் பாரகர் தாமதர்;
இனிய னென்றனர் எண்ணுறும் அன்பரே.'

பொது ஜனங்கள் அவரை இன்னும் அதிகமாய் வாழ்த்திப் போற்றினார்கள்.

அப்போது அவர் ஒன்றைத் தெளிந்துணர்ந்தனர். அதாவது அன்பின் மதத்தை நிலைநிறுத்த அன்பின் வழியில் நடப்பது அவசியம். ஆத்ம தியாகமே அன்பின் வழி. ஆதலால் வேதாச்சாரியர்களுக்கு விலகாமல் அவர்களுடைய கைக்குள் தம்மை ஒப்பிவித்தனர். கடவுளது பூரண அன்பை விலக்கத் தாம் உயிர் விடவேண்டும் என்பது மெய் என்று கண்டு சிலுவை மரணத்தின் பாதையில் பிரவேசித்தனர்.

'கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை
உள்ளமுவப் புறுதேனை உயிர்க்குயிரை யுலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே.'

என்று வித்வான் கிருஷ்ண பிள்ளை இச் சம்பவத்தைப் பற்றி எழுதியுள்ளார். இக் காலத்திலே அன்பின் மிருதிமை கையில் நெல்லிக் கனியைப் போலக் காட்ட விரும்பின் உலகத்தோர் கிறிஸ்துவின் சிலுவையைக் காண்பிக்கிறார்கள்.

பின்பு சிலுவையின்மேல் மரித்து மூன்றுநாளில் உயிர்த்தெழுந்து சீஷர்களுடனிருந்து அவர்களது பக்தியை எழுப்பி அன்பின் நெறியை உலகமெங்கும் பிரசித்தம் பண்ணும்படி தேவருள் சக்தி தந்து அவர்களை ஏவி யனுப்பினர். இதுவே அவரது சரிதையின் சுருக்கம். கிறிஸ்து சபை அடிக்கடி அவரது போதனையை மறுத்து நடந்திருந்தும் உண்மை சீஷர்களின் மன வாக்குக் காயங்களிலும் அவரது மேன்மை அதிகமதிகமாய் விளங்கி இக் காலத்தில் கிறிஸ்திய சபை என்னப்பட்ட சங்கத்தில் சேராத அனேகர் அவரை மேன்மைப்படுத்தி அவரது வழியில் நடக்கப் பிரயாசைப்படுகிறார்கள்.

'வாழி அன்புடன் அருட்பணி வாய்மையும் பொறையும்!
வாழி நல்லற மாண்புடை வானவர் மொழியே!
வாழி மன்பதைக் கொளிதரும் வாழ்வுடை அமரர்!
வாழி தூய்மையும் தூயரும் மனத்தொறும் வாழி!'

---



# அழகும் ஆரோக்கியமும்.

திருவாளர். வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்.

## III

### முகத்திருத்த மர்மங்கள்.

பெரிய ஆசைகளோடு பல தொழில்களைச் செய்ய ஆரம்பித்து அவ்வாசைகள் நிறைவேறப் பெறாது வருந்துகின்ற புருஷர்களுடையவும் ஸ்திரீகளுடையவும் ஆசாபங்க முகங்களையும் நம்பிக்கை யிழந்த முகங்களையும் ஒவ்வொரு கூட்டத்திலும் ஏராளமாகக் காண்கிறோம். ஒவ்வொரு ஆசாபங்கமும் முகத்தில் ஒவ்வொரு வரையை உண்டு பண்ணி யிருப்பதாகத் தெரிகிறது. இவ் வரைகளை நீக்குவது கஷ்டமா யிருக்கலாம். ஆனால், அது முடியாத காரியம் அன்று. அவற்றை நீக்குவதற்கு மிக நல்ல மார்க்கம் சென்ற காலத்து நம்பிக்கைகளை வருங்காலத்து நம்பிக்கைகளால் மறந்து, சென்ற காலத்துக் காரியங்களை இக் காலத்து வேலைகளில் புதைத்து விடுவதே. நாம் செல்லும் இடங்களி லெல்லாம் அதிருப்தியடைந்துள்ள முகங்களையும் பார்க்கிறோம், அம் முகங்களை யுடையவர்கள் தங்களிடத்தில் இல்லாத பொருள்களை அடையக் கருதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டும் தாங்கள் ஒருபோதும் செய்து முடிக்க முடியாத காரியங்களைச் செய்து முடிக்க விரும்பிக் கொண்டும் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய தற்கால நிலைமைகளை உயர்ந்தனவாக மதிப்பதற்கும், திருப்தியான ஒரு மனம் நல்லதொரு விருந்து என்பதை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கும் முயற்சிப்பார்களாக. மற்றைய முகங்களுள் வியசனமும் வியாகூலமு முள்ளவற்றையும், எரிச்சலும் கோபமு முள்ளவற்றையும், உலோபமும் பேராசையு முள்ளவற்றையும், சூதும் வஞ்சகமு முள்ளவற்றை

யும், தற்பெருமையும் பிறரிகழ்வு முள்ளவற்றையும் காண்கிறோம். முகத்தில் தெளிவாக எழுதப்பட்டுள்ள இவ்வவலக்ஷணமான குறிகளெல்லாம் மனத்திலிருந்து வெளிவந்திருக்கின்றன. எவர்களுடைய மனங்களில் அக்குற்றங்கள் இருக்கின்றனவோ, அவர்களுடைய முகங்களில் ஒருபோதும் அழகு வசிக்கமாட்டாது. "அகத்திலுள்ள தெய்வத் தன்மையே புறத்தில் தெய்வத் தோற்றத்தை உண்டுபண்ணுகிறது" என்று ஒரு பெரியவர் கூறியிருக்கிறார். இது தத்துவ சாஸ்திரம் மாத்திரமன்று; அழகின் பெரிய மருமங்களில் ஒன்று. ஒழுக்கமானது தன்னுடைய, இலக்ஷணமான அல்லது அவலக்ஷணமான, சாராம்ஸங்களால் எப்பொழுதும் முகத்தைப் பிரகாசிப்பிக்கின்றது.

சீதையாவது, திரௌபதையாவது அவலக்ஷணமான முகத்தை உடையவளாயிருப்பளென்று நாம் ஒரு நிமிஷமேனும் நினைக்கக் கூடுமா? அல்லது இராமராவது, தருமராவது விரோதத்தை உண்டு பண்ணத்தக்க முகத்தை உடையவராயிருப்பரென்று நாம் ஒரு நிமிஷமேனும் நினைக்கக்கூடுமா? அருளும் வீரமும் நிறைந்த இம் மனிதர்களுடைய முகங்களையும் படங்களையும் நாம் ஒருபோதும் பார்த்திராத போதிலும் நமது இயற்கை யுணர்வால் அவர்களுடைய முகங்களை அருளும் வீரமும் மேம்பாடும் நிறைந்தவைகளாக நமது மனத்துள்ளே வரைகிறோம். முகத்தைத் திருத்துவதற்கு நீங்கள் முதலில் மனத்தைத் திருத்த வேண்டும். உங்கள் மனத்தில் தளர்ச்சிக்கும் அசந்தோஷத்திற்கும் பதிலாக உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் உண்டு பண்ணுங்கள்; எரிச்சலுக்கும் கோபத்திற்கும் பதிலாக இனிமையையும் பொறுமையையும் அப்பியசியுங்கள்; உலோபத்திற்கும் பேராசைக்கும் பதிலாக தயாளத்தையும் திருப்தியையும் வளருங்கள்.

## ஆரோக்கியத்திற்கும் அழகிற்குமுள்ள சம்பந்தம்

ஆரோக்கியம் அழகிற்கு இன்றியமையாதது. அஃது, உண்மையில், அழகின் அஸ்திவாரமே யாகும். ஆரோக்கியத்தை யிழந்த பொழுது அழகு மெள்ள நீங்கி விடுகின்றது. அழகு மனிதருக்கு ஆதாரமாயுள்ள பெருமை வாய்ந்த முப்பொருள்களாகிய ஆரோக்கிய ஆன்மா, ஆரோக்கிய மனம், ஆரோக்கிய உடம்பு, இவற்றினின்று



வெளிவந்ததாய் இருக்க வேண்டும். அப்படியானால்தான் அஃது உண்மையான சகல வகை அழகிற்கும் சாரமான நல்ல தன்மையில் குறைவு படாததா யிருக்கும். ஒரு ரோஜா மொக்குளின் அழகிற்கானாலுஞ்சரி, ஒரு கன்னிப் பெண்ணின் அழகிற்கானாலுஞ்சரி, ஆரோக்கியமே ஆதாரமாகும். நோயழகு என்று ஒன்றுண்டு. அது வயது வளருங்கால் நீங்கிவிடும். நிலையான அழகு தனது வேர்களை ஆரோக்கியத்தில் நன்றாக ஊன்றி யிருக்க வேண்டும். மிஸ்டர். கிளாட்ஸ்டன் "அழகானது பொருள்களில் தற்செயலாய் அமைவதொன்றன்று; அது பொருள்களின் அம்சங்களோடு சம்பந்தமுடையது, அது சிருஷ்டிப் பொருள்கள் முழுவதினும் வியாபித்திருக்கிறது; இஃது எவ்விடத்திலாவது கெட்டிருக்குமாயின் அல்லது இல்லாதிருக்குமாயின் அது உலகத்தினின்று பிரிபடுவதற்குரிய சான்றாகும்" என்று நேர்த்தியாகச் சொல்லி யிருக்கின்றனர்.

பெருமை வாய்ந்த ஒரு வடிவமும், நேர்த்தியான ஒரு நிறமும், மின்னுகின்ற இரு கண்ணும், சுறுசுறுப்பான ஓர் ஈரற்குலையினின்றும் நல்ல ஒரு ஜீரணத்தினின்றும் பெரும்பாலும் உண்டாகின்றன. இவ்வுண்மை அநேகருக்குத் தெரியாது. நோய் அவலக்ஷணத்தைத் தனக்கு உடையாகக் கொண்டிருக்கின்றது. நாம் உண்டு ஜீரணிக்கிற உணவும், நாம் சுவாசிக்கிற வாய்வும், நாம் கொள்ளுகிற உறக்கமும் அமைதியும், நாம் அநுஷ்டிக்கிற சுகாதார விதிகளும் ஆரோக்கியத்தை ஆள்கின்றன. ஓர் ஆங்கிலக் கவி "நமது சரீரங்கள் நமது தோட்டங்கள்; நமது விருப்பங்கள் நமது தோட்டக்காரர்கள்" என்று கூறுகின்றார். டாக்டர் டி. யல். நிக்கல்ஸ் என்னும் வைத்தியர் "ஆரோக்கியம் பூரண வளர்ச்சியின் ஒரு நிலைமை" என்கிறார். பூரண வளர்ச்சியாவது சரீரத்தினது ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு உறுப்பும் குறையாமலும் கூடாமலும் அதனதன் அளவுப்படிக்கும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகவும் அமைந்திருப்பதே. இதில்தான் அங்க லக்ஷணமும் அழகும் பூரணமாய் இருக்கின்றன. அப் பூரணத்துவம் ஆரோக்கியத்தின் பலனே யன்றி வேறன்று. மனிதனுடையவும் மிக மிகப் பிரயோஜனமான ஒவ்வொரு பிராணியினுடையவும் சரீர வடிவங்களும்

பார்க்கினும் மயக்க வஸ்துக்கள் முகத்தில் உண்டு பண்ணும் காரியங்கள் அதிகத் தெளிவாகத் தெரிகின்றன. அது நாகரிகமும் அழகும் அமைந்துள்ள ஒரு முகத்தை அளவு கடந்த முரட்டுத்தனமுள்ளதாகவும், வெறுக்கத்தக்க அவலக்ஷணமுள்ளதாகவும் செய்கின்றது. முகத் தோற்றம் சம்பந்தமாக வேலை செய்யும் அநேக உணவுப் பொருள்களைப் பற்றி உணவிற்கும் ஆரோக்கியத்திற்குமுள்ள சம்பந்தத்தைச் சொல்லும் இடங்களில் விஸ்தரிக்கப்படும். கிர்க் என்னும் பண்டிதர் பின் வருகிறபடி கூறுகிறார். "முகமானது இரைக் குடலுக்குக் கொடுக்கப்படும் உணவிற்குச் சரியாகச் செய்யப்படுகின்றது. நாம் உட்கொள்ளுகிற வாயு முதலிய மற்றப் பொருள்களும் நமது முகங்களைச் செய்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும், நாம் உண்ணும் உணவுகளும் நாம் குடிக்கும் பானங்களும் முகத்தில் அதிசயமான தோற்றங்களை உண்டுபண்ணுகிற முக்கிய பொருள்களாகும். உணவு முகத்தின் காரியத்திற்குச் சிறிதும் பொருத்தமில்லாததாயிருக்கும் பக்ஷத்தில், முகத் தோற்றங்கள் எவ்வாறு நல்லவையாக இருக்கக் கூடும்? உதாரணமாக, முகத்தின் விளக்கத்திற்கு முக்கிய ஆதாரமான கண்களின் மெல்லிய தோல்கள் முதல் தரமான நிலைமையில் இருக்க வேண்டுமானால், அதற்குத் தக்க உணவுகளை உட்கொள்ள வேண்டும். எப் பொருள்களினால் உங்கள் முகங்கள் செய்யப்படுகின்றனவோ, அப் பொருள்களைப் பற்றிச் சிறிதும் கவனியாமல் உங்கள் முகங்களில் உலகத்திலுள்ள அரிதாரங்களையெல்லாம் பூசினாலும் நீங்கள் ஆரோக்கியமான முகத் தோற்றத்தை அடைய முடியாது. அப் பொருள்களை நீங்கள் கவனிப்பதுடன் முகத்தைச் செய்வதற்குப் பிரயோஜனப் படுபவற்றைத் தயார் செய்கின்ற உங்கள் சரீர உறுப்புகளையும் நீங்கள் கவனிக்க வேண்டும். எவ்விதமாயாவது இவ் உறுப்புக்களை நீங்கள் ஒழுங்கீனமுள்ளவையாகச் செய்து விடுவீர்களானால், அவை நீங்கள் உட்கொள்ளும் உணவிலிருந்து நல்ல உதிரத்தை உண்டு பண்ணமாட்டா. பின்னர் நீங்கள் உங்கள் முகங்களில் எவ்வளவு புறப்பூச்சுப் பூசினாலும் அது உங்கள் முகங்களுக்கு ஒரு ஆரோக்கியமான தோற்றத்தைக் கொடுக்க மாட்டாது."

முடிவு



# கல்வியும் நம் நிலைமையும்.

திரு. கு. கோ. கிருஷ்ணன் அவர்கள், *B. Sc. (Hons.)*

தெண்ணீர்க் கடல் சூழ்ந்த இவ் வையகத்தின்கண்ணுள்ள தேயங்கள் ஒவ்வொன்றும் சுதந்திரம் பெற்றுக் கூடிய சீக்கிரத்தில் தேசங்களுக்கு முன் அணியில் நின்றும், நிற்கச் சதாப் பாடுபட்டுக் கொண்டுமிருக்கின்றனவென்பது உள்ளங்கை நெல்லிக் கனி. தற்போது இப் போட்டியிற் சேர்ந்து உழைக்க முன் வந்திருக்குந் தேசங்களில் நம் தேசமுமொன்று.

நம் தேயம் முற் காலத்தில் நாகரீகத்திலும், தன்னரசிலும், செல்வத்திலும், சாஸ்திரங்களிலும் நிகரற்றதாயிருந்ததை நான் எடுத்துக் கூறவா வேண்டும்? அக் காலத்தில் காட்டு ஜனங்களாய்த் திரிந்த மேனாட்டார் தற்போது நாகரீகத்திற் கீர்த்தி பெற்று மிகச் சீர்பெற்றோங்க, நம் தேயம் சீர் குலைந்து போய் முன்னேற்றத்திற் பின்னடைந்திருப்பதின் காரணம் என்னை? நம் அடிமைத்தனமே! நம் அடிமைத்தனத்தால் நம் முன்னேற்றத்திற்குள்ள சுதந்திர மிழந்து, அதனால் நம்மிடமிருந்த முன்னேற்றமும் குறைந்து உலகத்திலெல்லோரும் (மிஸ் மேயோ போன்றவரும்) நமது நிலைமையைக் குறித்துச் சிரித்தெழுதவும் நேரிட்டதன்றோ?

நம் தேயம் புள்ளிக் கணக்கிலும் மற்றைக் கணிதங்களிலும் சாஸ்திரங்களிலும் முன்னணியிலிருந்து தற்போது நமது அடிமைத் தனத்தால் எல்லா முயற்சியு மிழந்து கல்வி பயிலுவிக்க மேனாட்டாரை எதிர் பார்க்கிறோம். நம் தேயத்திலுள்ள சுமார் 32 கோடி ஜனங்க

ளின் கல்வியின் முன்னேற்றத்தைக் கவனித்தால், அந்தோ! நாம் தலை குனிய ஏற்படுகிறது. 1928–29 வருடத்திய கல்கத்தாக் காங்கிரஸ் காட்சி வெளியீட்டின் பிரகாரம் கல்வி பயின்றவர்கள் 100-க்கு:—

| இங்கிலாந்து. | அமெரிக்கா. | ஜப்பான். | இந்தியா. |
|---|---|---|---|
| 93.5 | 95.4 | 97.8 | 5.2 |

நம் இந்தியாவில் 100-க்கு 5 பேர்களே படித்துள்ளவர்களென்றால், என்னே! நமது நிலைமை. நாம் எவ்வாறு முன்னேற்றமடைவது?

இவ்வாறு 100-க்கு 5 பேர் படித்தவர்களா யிருந்தும் நம் தேசத்தில் கற்றவர்களுக்குத் தகுந்த வேலையின்றித் தேயங்கள் தோறுஞ் சுற்றித் திரிவது விந்தையினும் விந்தையே! நம் தேயம், இங்கிலாந்து ஜப்பானைவிடச் சிறியதா? அங்கு முறையே 100-க்கு 94; 98 பேர்கள் படித்தும் எல்லாருக்கும் வேலை கிடைப்பதின் காரண மென்ன? நாம் யாரைக் குறை கூறுவது. காரணங்களை யோசிக்கின் நமது அடிமைத்தனம், கலாசாலை நமக்களிக்கும் கல்வி இவ் விரண்டால் நமக்கு ஏதோ குறைவு ஏற்பட்டு நாம் நம் தேச முன்னேற்றத்திற்கு உழைக்க இடமின்றியும், தகுதியற்றவர்களாயும் ஆகிவிடுகிறோம் என்பது கண்கூடு. அடிமைத்தனத்தால் நாம் சீர்குலைந்திருப்பது யாவரும் தெரிந்த விஷயமே. கலாசாலை நமக்குக் கல்வியை அளிப்பதற்குத் தகுந்தவாறு பயனடைய வசதிகளை நமது காருண்ய கவர்ன்மெண்ட் தேடி வைக்கவில்லை. சர்வ கலாசாலையில் பூர்த்தியாகப் பயின்றிருப்பவர்கள் தங்கள் படிப்பைக் கொண்டு தாங்களாவது தங்கள் தேசமாவது முன்னேற்றப் பாடுபட வழியமைப்பின்றி இருப்பவர்கள் நம் தேசத்தில் எத்தனையோ பேர். இதற்குக் காரணம் யார்? கஷ்டப்பட்டுப் படித்தவர்களா? நம்மை அடக்கி யாளும் கவர்ன்மெண்டா?

சர்வ கலாசாலைகளிலும் கல்வி கற்பிப்பதில் சிறிது சீர்திருத்தம் செய்வது அத்யாவசியம். சீர் திருத்தத்திற்கு ஏதோ இடமிருப்பதாலன்றோ அக் கலா சாலை விதைக்கும் வித்தைக்கும் யாதொரு பிரயோஜனத்தையும் நாம் கண்கூடாய்க் காண முடியவில்லை. சில வருஷங்களுக்கு முன் வங்காள மாகாணத்திற் கற்றவர்கள் வேலையின்றித் திரி



வதின் காரணங்களைக் கண்டறிய நியமித்த கூட்டத்தாரும் மேற்கூறியதையே தங்கள் கருத்தாக வெளியிட்டிருந்தனர். இச் சீர்திருத்தத்திற்கு யார் கடமைப்பட்டவர்க ளென்றுதான் கேட்கிறோம்.

நமது கவர்ன்மெண்டார் அலட்சியம் ஒரு பக்க மிருக்கட்டும். நம்மவர்களின் கல்வியின் மேலுள்ள அலட்சியம் மிகவும் வருத்தப் படத்தக்கதா யிருக்கிறது. இவர்கள் கல்வி பயிலுவது வயிறு வளர்ப்புக்கென்னுந் தப்பபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். இவ்வித நோக்கம் கல்வி அபிவிருத்திக்கும் நாடு முன்னேற்றத்திற்கும் முட்டுக் கட்டையா யிருக்கிறது. கல்வி பயிலுவது கல்விக்கும் அதன் பயனுக்குமேயன்றி வயிறு வளர்ப்புக்காக மாத்திர மென்று கல்வி பயிலக் கருதினால் நாம் கூடிய சீக்கிரம் க்ஷீண திசை யடைந்து, நாகரீகத்திற் குன்றி, நூற்றுக்கு ஒருவர் படித்தவரா யிருப்பதுகூடக் கஷ்டமாய்ப் போய்விடுமென்பதில் ஏதேனும் ஐயமுண்டோ? “ஆ! இவன் படித்து எந்த உத்தியோகத்திற்குப் போகப் போகிறான்? எத்தனையோ பேர் படித்து வேலையின்றிச் சுற்றித் திரிகின்றனர்” என்று அறிவீனத்தாற் சொல்லி முயற்சியுடையோரையும் பின்னடையச் செய்து விடுகின்றனர். ஐயோ! இதனால் நம் தேயத்திற்கு எவ்வளவோ கெடுதிகளுண்டாகுமென்பது அவர்கள் சித்தத்தில் நர்த்தனமாடவில்லை போலும். இங்கிலாந்து முதலிய மற்றத் தேயங்கள் கல்வி பயிலுவது ஒவ்வொருவருடைய கடமை யெனக் கருதி வருவதாலன்றோ நாகரீகத்திலும், தேச முன்னேற்றத்திலும் முதன்மையிலிருந்து வருகின்றன. கல்வியில் தேர்ந்தவன் தன் தாய் நாடு தழைக்க எத் தொண்டு செய்தால்தான் என்ன? அதனால் அவன் கல்வியின் பெருமை பிரிந்தோடி விடுமோ? உத்தியோகத்தையே கருதியவர்கள் அடிமைகளாகவே யிருக்க வேண்டும். இக் குறுகிய புத்தியாலன்றோ நாம் இன்றும் சுதந்திரமின்றி அடிமைகளாகவே யிருந்து வருகிறோம்.

எத் தேசமும் நாகரீகத்தில் முன்னேறுவதற்கு அடிப்படையா யிருப்பது கல்வியல்லவா? கல்வியாலுண்டான ஞான மென்னும் மருந்து நம் மக்களிட மில்லாததாலன்றோ ஆயிரக் கணக்கான இந்திய ஜனங்களும், குழந்தைகளும் சீக்கிரத்தில் தடுத்துக் கொல்லக் கூடிய வியாதிகளாற் பீடிக்கப்பட்டு மாண்டு போகின்றனர்.

| | இங்கிலாந்து. | அமெரிக்கா. | ஜப்பான். | இந்தியா. |
|---|---|---|---|---|
| இறப்பு 1000-க்கு:- | 11.8 | 9.8 | 15.3 | 25.2 |
| குழந்தைகளின் இறப்பு ,, | 72 | 64 | 105 | 185 |
| ஒருவர் சராசரி ஆயுள்:- | 50 | 56 | 47 | 22.3 |

இவ் வட்டவணையைக் கவனித்தால் நம் தேயம் எவ்வளவு பாழடைந்திருக்கிறதென்று தெரிகிறதல்லவா?

இது போகட்டுமென்றாலும் நம் தேசத்தாரின் வருமானங்களைக் கவனித்தால் நம் முள்ளத்திற் பற்பல உணர்ச்சிகள் 'பகீர் பகீர்' என்று பற்றி எரிகிறது.

| | இங்கிலாந்து. | அமெரிக்கா. | ஜப்பான். | இந்தியா. |
|---|---|---|---|---|
| அசல் தொகையில் அடையும் சொத்து (Wealth per Capital) | ரூ 3500 | ரூ 7640 | ரூ 2860 | ரூ 278 |
| நாள் வீதம் சராசரி (ஒருவன்) வருமானம் | ரூ 4-12-0 | ரூ 7-12-0 | ரூ 4-2-0 | ரூ 0-1-6 |

நமது தேயத்திற் சராசரி வருமானம் ரூ 0—1—6 யானால் இதைவிடக் கேவலமான நிலை வேறெது?

நம் நிலைமையைக் கவனிக்கும் போது, நம் தேசத்துச் செல்வங்கள் எங்கே போய் மறைந்து விடுகின்றன வென்னுங் கேள்வி பிறக்கிறதல்லவா? நமது தேசத்துத் திரவியங்களை அந்நியர் கைக்கொண்டு நம் தேசத்தைப் பஞ்சக்தாற் பாழடைய விடுகின்றனர் என்பதை நான் எடுத்துச் சொல்லவா வேண்டும்? இப்படிப்பட்ட வருமான மிருப்பின் நாம் எப்படிக் கல்வியில் தேர்ச்சி யடைவது. இரட்டை ஆட்சி (Dyarchy) யுண்டானதி லிருந்து படிப்பை விருத்தி பண்ண ஓர் இந்திய மந்திரியைக் கவர்ன்மெண்டார் அமைத்து விட்டனர். இம் மந்திரிகளால் நமக்கு யாது பயன்? பாவம்! இவர்களுக்கு நம் தேயம் முன்னடையப் பாடுபட விருப்ப மிருப்பினும் அதன்படி செய்து முடிக்கப் பொருளுக்கு எங்கு செல்வர்? பொருளோ கவர்ன்மெண்டார் ஆதீனத்திற்குட்பட்டு வருகிறது. கல்வி அபிவிருத்திக்கு அதிகப் பொருள் வேண்டுமென்று நமது கல்வி மந்திரி கேட்டால் கொடுக்கப்பட மாட்டாது. அப்படியிருக்க நமது மந்திரிதான் என் செய்வர்?



கொஞ்ச காலத்துக்கு முன் நமது சிற்றரசர்களின் பாதுகாப்பு விஷயமாக பட்லர் கூட்டத்தாரின் (Butler Committee) தீர்மானங்களில் இங்கிலாந்தில் ஐ. சி. எஸ். முதலிய படிப்பில் தேரிய ஆங்கிலேயர்களை நம் சிற்றரசர்கள் தங்கள் நாட்டில் வேலை கொடுத்து வைத்துக் கொள்ளும்படி சிபார்சு செய்திருக்கின்றனர். அப்படியானால் நம் தேயத்தில் படித்துத் திரிவோரின் கெதி எவ்வாறென்பது அவர்கள் மூளைக்குத் தென்பட வில்லைப் போலும்.

இது போகட்டும். நமது தேயத்திற் கொஞ்சம் பொருளுள்ள சீமான்களுக்குப் பாஷாபிமானமும் தேசாபிமானமும் சிறிதும் இல்லாமற் போய்விடுகிறது. சிலருக்குத் தங்கள் வானம் சுருங்கக் குவித்திருக்குந் திரவியங்களை யடையச் சந்ததியில்லாம லிருந்தும் அதை நம் பாஷாபிமானமுள்ள இளைஞர்களுக் குதவிசெய்ய மனந் துணியாதது நகைப்பிற் கிடமாகிறது. இராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களைப் போல் இன்னுஞ் சில பாஷாபிமானமுள்ள சீமான்களை நம் பாரதத்தாய் பெற்றிருந்தால் நம் தேசம் கூடிய சீக்கிரம் முன்னுக்கு வந்து விடுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

ஜப்பானைப் பாருங்கள்! நம் தேசம் நாகரீகத்திற் சீர் பெற்று விளங்கும்போது ஜப்பான் இருந்தவிடந் தெரியாமலிருந்தது. ஆனால் சுமார் 50 வருஷங்களுக்குள்ளாக உலகத்தில் முன்னேற்றமடைந்த நாடுகளில் ஒன்று யிருப்ப தெக்காரணம்? அங்கு படியாதவர்களைக் காண்பது அரிதினுமரிது. தருமத்திற்குக் கற்றுக் கொடுக்க எத்தனையோ சங்கங்களும், பள்ளிக்கூடங்களும், ஏற்பட்டிருக்கின்றன. எத்தனையோ பேர், பலர் பொருளுதவியாற் பல தேசங்களுக் கனுப்பப்பட்டுப் புதிது புதிதாக உண்டான சாஸ்திரங்களைக் கற்று வருகின்றனர். அப்படிக் கற்றுத் தங்கள் ஸ்வய தேசம் வந்து தேச முன்னேற்றத்திற்குப் பாடுபடப் பல வசதிகளைக் கவர்ன்மெண்டார் தயாரித்துக் கொடுக்கின்றனர். அப்படிப்பட்ட வசதிகளை நாமேனும் தேடிக்கொள்ள நமக்குச் சுதந்திரமுண்டா? பொருள்படைத்த சீமான்களாவது கல்வியில் நன்றுப்த்

# எனது ஐரோப்பா யாத்திரை.

திரு. M. கிருஷ்ண பாரதியார் அவர்கள், *M. A., B. L.*

## II

**ப**ம்பாய் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட இரண்டு நாள் வரையிலும் கடல் அமைதியாய் இருந்தது. கப்பல் பிரயாணிகள் அனைவரும் சுகமாகக் காலம் கழித்து வந்தனர். இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்திருக்கும் பல மதஸ்தினரும் பல வருணத்தவரும் ஒன்றுகூடி யிருக்க நேர்ந்தபடியால் ஒருவரை ஒருவர் அறிமுகம் ஆக்கிக்கொண்டு பரஸ்பர சிநேகத்தை விருத்தி

---

தேரினவர்களைப் பிரதேசங்களுக்குப் போய்க் கற்று வரப் பொருளுதவி செய்கின்றனரா? இல்லை; இல்லை. எல்லாம் பெயரையும், கீர்த்தியையும், பிரதிப் பிரயோஜனத்தையுமே கருதியவர்களாயிருக்கின்றனர்.

ஆதலால், சகோதர சகோதரிகளே! ஸ்ரீமான் ஸ்ரீமாட்டிகளே!! நம் தேயம் அறியாமை யென்னும் அந்தகாரத்திலகப்பட்டு அந்நியருக்கடிமைப் பட்டிருக்கிறதென்பது உங்கள் அகக் கண்களுக்குப் புலனாகவில்லையா? அவ்வறியாமை யென்னும் அந்தகாரத்தை ஞான மென்னும் சூரியோதயத்தால் அதமாக்க வேண்டாமா? நம் நாடு முன்னேற்றமடைய அத்யாவசியமான கல்வியை கூடியவரை சாத்தியமான எல்லா வழிகளாலும் நம் சகோதர சகோதரிகளுக்குப் பயிலுவிக்க நாம் முன்னின்று முயல்வோமாக.

> "ஒன்றே செய்யவும் வேண்டும்,
> ஒன்றும் நன்றே செய்யவும் வேண்டும்,
> நன்றும் இன்றே செய்யவும் வேண்டும்,
> இன்றும் இன்னே செய்யுவும் வேண்டும்,
> நாளை நாளை என்பீராகில்
> நம்முடை முறைநா ளாவது மறியீர்
> நமனுடை முறைநா ளாவது மறியீர்"—கபிலர்.

---



செய்துகொள்ள சமயம் வாய்த்தது. நம் தேச முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கும் சில்லறை ஜாதிமத பேதங்களை மறந்து ஒற்றுமையுடன் வாழும் சமயம் ஏற்பட்டது.

இரண்டாவது வகுப்பில் ஒன்றிரண்டு ஐரோப்பியரைத் தவிர மற்றெல்லா பிரயாணிகளும் இந்துக்களே. அநேக மாணாக்கர்கள் உயர்தரப் படிப்புக்காக வந்திருந்தனர். சில டாக்டர்கள் சர்க்கார் செலவில் வைத்திய படிப்புக்காகச் சென்றுகொண் டிருந்தனர். அநேக மாணாக்கர்கள் சட்டப் படிப்புக்காக இங்கிலாந்துக்குப் போய்க்கொண் டிருந்தனர். சமீபத்தில் அமுலுக்கு வந்திருக்கும் 'பார் கவுன்சில் ஆக்ட்' என்ற வக்கில் சட்டப்படி சீமை பாரிஸ்டர்களுக்கும் இந்தியாவில் பட்டம் பெற்ற வக்கில்களுக்கும் சம உரிமைகள் கொடுக்கப்பட் டிருந்தும் ஏற்கனவே வக்கீல்களா யிருப்பவர்களும் ஏனையோரும் பாரிஸ்டர் பதவி பெற முன் போலவே பிரதேசங்களுக்குப் போவது வியர்த்தமென்றே எனக்குத் தோன்றிற்று. உயர்தரப் படிப்புக்காகச் செல்பவரும், பி. ஏ, எம். ஏ., பட்டங்களைப் பெற்ற பின்னர் சர்க்கார் உத்தியோகத்தை அபேக்ஷித்தவர்களாகவே காணப்பட்டனர்.

இங்கிலாந்துக்காவது மற்றெந்த ஐரோப்பிய நாட்டுக்காவது சென்று நம் நாட்டுச் சிறுவர் ஏராளமாய்த் திரவிய செலவு செய்து பி. ஏ., எம். ஏ. என்ற வெறும் பட்டதாரிகளாய் வந்து உத்தியோகங்களில் அமருவதால் நம் நாட்டிற்கு விசேஷ நன்மை யில்லை. இம்மாதிரி படிப்பினால் மாத்திரம் அத் தேச ஜனங்கள் நன்மைபெறவில்லை. வியாபார முன்னேற்றத்தினாலும் தொழில் விருத்தியினாலுமேயே மேல் நாடுகள் தற்காலமுள்ள உன்னத நிலையை அடைந்திருக்கின்றன. ஆங்கிலேய ராஜ்யம் வியாபாரத்தையே அஸ்திவாரமாகக்கொண் டிருப்பதும், அன்னிய நாடுகளில் ஆங்கிலேயருடைய ஆதிக்கம் வியாபாரத்தை உத்தேசித்தே யிருப்பதும் அனைவருக்கும் தெரிந்த விஷயம். அப்படி யிருக்க என்னுடன் பிரயாணம் செய்த 60 அல்லது 70 இந்தியரில் ஒருவரே வியாபார நிமித்தம் ஜெர்மன் தேசத்துக்குச் செல்கிறார் என்று தெரிந்ததும் 'நம் தேசம் எப்பொழுது மேல் நாட்டின் நிலைமையை அடையப்போகிறது? என்று

நினைக்கலானேன். நம் நாட்டில், கைத்தொழிலையும் வியாபாரத்தையும் விருத்தி செய்தாலொழிய அன்னிய தேசப் போட்டியில் நாம் நசித்துப் போய்விடுவோம். அதற்காகக் கூடிய மட்டும் அன்னிய தேசங்களுக்குச் சென்று, அவர்கள் கையாடி வரும் கைத்தொழில் வியாபார முறைகளைக் கற்றறிய வேண்டியது நம்மவர் கடமையாகும்.

முதல் வகுப்பில் சில இந்தியர்கள் பிரயாணம் செய்துவந்தனர். ஸ்ரீமதி சரோஜனி தேவியார் அதில் ஒருவர். அவர் படித்த வண்ணம் காலம் போக்கிக் கொண்டிருந்தார். கப்பலில் அநேக மாணாக்கர்கள் படிப்பின் நிமித்தம் அன்னிய தேசம் போய்க்கொண்டிருப்பது அவருக்குத் தெரிந்திருந்தும், இந்தியச் சிறுவர்களுடன் கலந்துகொண்டு அவர்கள் அன்னிய தேசத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறையைப் பற்றியும் அவர்களின் மற்ற கடமைகளைப் பற்றியும் பேசி அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கவேண்டியவராயிருந்தும் அவ்வாறு செய்யாமல், அவர் தாம் கப்பலில் பிரயாணம் செய்வதையே காட்டிக்கொள்ளாமலிருந்தது அனைவருக்கும் ஆச்சரியமாகவே இருந்தது.

கப்பலில் மூன்றாம் நாள் முதல் பிரயாணிகள் (Sea Sicknes) 'சீ சிக்னெஸ்' என்ற கடல் மயக்கத்தினால் அவஸ்தைப்பட்டார்கள். கப்பல் நடுச் சமுத்திரத்தில் போய்க்கொண்டிருந்தபொழுது, அங்கே பெரிய அலைகளால் தாக்கப்பட்டுக் கப்பல் மேலும் கீழுமாக ஆட ஆரம்பித்தது. இந்த ஆட்டத்தினால் பிரயாணிகள் தலை சுற்றுவது மயக்கம் வருவது சாப்பிட்டதை வாந்தி செய்வது முதலிய அவஸ்தைகளால் பாதிக்கப்பட்டனர். நல்ல வேளையாக, நானும் இன்னும் சிலரும் இக் கஷ்டத்தை அனுபவிக்கவில்லை. எங்கள் அறை கப்பலின் மத்தியில் இருந்ததே இதற்கு முதற் காரணமென்று நினைக்கிறேன். மேலும் முதலிரண்டு நாட்கள் நன்றாய்ச் சீக்கிரத்தில் ஜீர்ணமாகக்கூடிய சொற்ப ஆகாரத்துடன் இருந்து கொண்டு தேகாப்பியாசம் எடுத்துக் கொண்டிருந்ததால், இம் மயக்கம் வரவில்லை என்று நான் நினைக்கிறேன். மேலும் கப்பல்



மேல் தட்டில் காற்று வாங்குவதற்காகச் சாய்வு நாற்காலியில் உட்காரும்போது நாற்காலியைச் சரியான நிலைமையில் போட்டிருந்தாலும் மயக்கம் வராது. அலைகள் மோதுவதனால் கப்பல் முன்னும் பின்னும் தாழ்ந்து உயர்ந்து ஆடும்போது, கப்பல் நடுவில் கப்பலின் இரு முனைகளும் நமக்குப் பக்கங்களில் இருக்கும்படியும் நாம் கப்பலின் பக்கத்தைப் பார்த்தாப்போல் உட்கார்ந்திருந்தால் கப்பலின் ஆட்டம் நம்மைக் கஷ்டப் படுத்துவதில்லை. அப்படியும் கப்பலின் ஆட்டம் தாங்கமுடியாமல் மயக்கம் உண்டானால், ஆகாரத்தைக் குறைத்துக் கொண்டு எலிமிச்சப் பழ ரசத்தைச் சேர்த்துக் கொண்டால் சௌகரிய மேற்படுகிறது. அநேகமாய் இரண்டு மூன்று நாள் மயக்கமிருந்தால் பிறகு உடம்பு சரிப்பட்டுப் போகிறது. சிலர் மாத்திரம் கப்பல் ஏறினது முதல் இறங்குகிற வரையில் மயக்கத்தினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டு கப்பல் பிரயாணத்தின் சுகத்தை அனுபவிக்காதபடி இருக்கிறார்கள்.

ஐந்து நாட்கள் சென்றபின் கப்பல் அரேபியா தேசத்திலுள்ள ஏடன் துறைமுகத்தை அடைந்தது. இங்கே சப்பலானது 5 மணி நேரம் தாமதித்தபடியால் நாங்கள் இறங்கி ஊரைப் பார்க்கப் போனோம். கப்பல் துறைமுகத்தின் மத்தியில் நிற்பதால் படகுகளில் ஏறிக் கொண்டு கரைக்குப் போக வேண்டும். இதற்கு ஆள் ஒன்றுக்கு சாதாரண படகுக்கு 6 அணாவும் யந்திர விசையால் ஓடும் படகுக்கு 8 அணாவும் கட்டணம் செலுத்த வேண்டும். துறைமுகத்திலேயே வாடகை மோட்டார் வண்டிகள் இருக்கின்றன. அவற்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு ஊரைப் பார்க்கச் சென்றோம். சமுத்திரக் கரையிலேயே நீண்ட குன்றுகள் இருந்தன. வீடுகள் இக் குன்றின் மேலும் இரு பக்கங்களிலும் கட்டப்பட்டிருந்தன. முன் எரிமலை இருந்த இடத்தில் ஊர் கட்டப்பட்டிருந்தபடியால், பூமியும் மலையும் நெருப்பில் சுடப்பட்டதைப் போல் கருப்பாயிருந்தன. எங்கும் செடிகளைப் பார்க்கக்கூடவில்லை. குடிக்க நல்ல ஜலம் கிடைப்பது அரிதாகையால் ஜலம் விற்பதற்குக் கம்பெனி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஊருக்கு வெளியில் இரண்டு மலைகளுக்கு மத்தியிலுள்ள பள்ளத்தாக்கைத் தடுத்து அதில் மழை

ஜலத்தைத் தேக்குவதற்காகப் பெரிய குளங்கள் கட்டியிருப்பதைப் பார்த்தோம். ஐந்தாறு வருஷங்களாக மழையில்லாதபடியால், இக் குளங்களில் ஒரு துளி ஜலம் கூட இருக்கவில்லை. ஊருக்குச் சற்று ஒரு புறமாக ஆங்கிலேயருடைய சைன்யமிருந்தது. மற்றொரு பக்கம் ஒரு மைதானத்தில் ஆகாயப்படையைச் சேர்ந்த ஆகாய விமானங்கள் பறந்து கொண்டிருந்தன. ஊருக்குச் சிறிது தூரம் சென்றதும் பாலைவனம் இருக்கிறது. கொஞ்ச தூரத்துக்கு இப் பாலைவனத்தில் சென்று அங்குள்ள அரேபியருடைய ஊரையும் கடைகளையும் பார்த்தோம். ஊருக்குச் சமீபத்தில் ஒரு திராட்சைத் தோட்டத்தைப் பார்க்கப்போனோம். தோட்டத்தில் ஈச்ச மரங்கள் பயிராக்கப்பட்டிருந்தன. தோட்டத்தைச் சுற்றிலும் மணல்பாங்காயிருந்த போதிலும், தோட்டத்தில் கிணற்று ஜலத்தினால் செடிகள் ஒருவாறு வளர்ந்திருந்தன. பாலை வனங்களின் மத்தியில் இவ்வித தோட்டங்கள் இருப்பதனாலேயே பாலை வனங்களில் அரேபியர் வாசம் செய்ய முடிகிறது. பாலை வனத்தில் காற்றடித்து சிறு மணல் குவியல்களிருந்தன. ஊரின் எல்லைப்புறங்களில் வீட்டின் கூரை வரையிலும் மணல் வந்து குவிந்து கொண்டு வீட்டையே மூடிவிடும் போலிருந்தது. ஏடன் பட்டணத்திலும் சுற்றுப் பக்கத்திலும் சாமான் கொண்டுபோவதற்கு ஒட்டகங்களை உபயோகிக்கிறார்கள். இவ்வூர் பம்பாயிக்குச் சேர்ந்திருக்கிறபடியால் இந்திய நாணயங்களே செலவாகின்றன. தபாலாபீஸ் முதலிய இடங்களிலும் கடைகளிலும் பம்பாய்க்காரரையே விசேஷமாகக் காணலாம். அபேஸீனியா தேசத்துக்குப் போவதற்கும், ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள அபிசீனியா முதலிய தேசங்களுக்குப் போவதற்கும் இவ்வூர் வழியாகவே போகவேண்டும். அவ்விடங்களுக்கு வட இந்தியர் அநேகர் இவ்வூர் வழியாக வியாபார நிமித்தம் செல்கிறார்கள்.

ஆங்கிலேயருடைய ராஜ்யத்துக்கு ஏடன் பட்டினம் ஒரு கோட்டை வாசல் போன்றது. ஐரோப்பாவிலிருந்து சூயஸ் வழியாக ஆசியாக் கண்டத்துக்கு வரும் கப்பல்கள் இவ்வழியாகவே வரவேண்டியிருப்பதால், இவ்வூரிலிருந்து ஆங்கிலேயருடைய



கப்பல் படையைப் பலப்படுத்திக்கொள்ளவும் அன்னியருடைய கப்பல் படையை அடக்கவும் முடிகிறது. வியாபாரக் கப்பல்களுக்கு நிலக்கரி, எண்ணெய் முதலானவை போட்டுக்கொள்வதற்கும் புயற் காற்றிலிருந்து ஒதுங்குவதற்கும் இது ஒரு வசதியான இடம். இத்துடன் ஆங்கிலச் சைன்யமும் ஆகாயப் படையும் இவ்விடம் இருப்பதால் ஆங்கிலேயருடைய ராஜ்யம் கவலையற்றிருக்கிறது.

பம்பாயிலிருந்து ஏடன் 1660 மைல். ஏடனிலிருந்து கப்பல் புறப்பட்டு 1311 மைல் கடந்து சூயஸ் பட்டணத்தைச் சேருகிறது. ஏடனிலிருந்து செங்கடல் (Red Sea) வழியாகப் போகும் போது கரையோரமாகவே கப்பல் போகிறது. பம்பாயிலிருந்து வரும் போது இந்து மஹா சமுத்திரத்தில் அடிக்கும் பெரிய அலைகள் போன்று செங்கடலில் இல்லாதபடியால் கப்பலும் ஆட்டமின்றி போய்க்கொண்டிருந்தது. ஆனால் கடலின் இரு பக்கங்களிலும் பாலை வனங்களிருக்கிறபடியால் மிகவும் உஷ்ணமாயிருக்கிறது. பகலெல்லாம் நன்றாய் வெயிலடித்துக் கொண்டிருக்கிறது. மெல்லிய துணிகளையே அணிந்துகொள்ள வேண்டியிருந்தது. இரவில் அறைகளில் படுத்துக்கொள்ள முடியாமல் பலர் கப்பலின் மேல் தட்டில் (Deck) படுத்துத் தூங்கினார்கள். சாப்பிடும்போது மின்சார விசிறிகள் இருக்கும்போதே பிரயாணிகளுக்குக் கப்பலில் கை விசிறிகளும் கொடுக்கப்பட்டன. இவ்வாறு நான்கு நாட்கள் பிரயாணம் செய்து சூயஸ் போய்ச் சேர்ந்தோம்.

சூயஸ் பட்டணம் சூயஸ் வாய்க்காலின் தென் முனையில் இருக்கிறது. இங்கே கப்பல், துறை முகத்தின் மத்தியில் நிற்பதால் கரைக்குப் படகுகளில் ஏறிச் செல்லவேண்டும். எகிப்து தேசத்திலுள்ள பிரமிட் (Pyramid) ஸ்பின்க்ஸ் (Sphynx) முதலான அற்புதமான கட்டிடங்களையும், கெயிரோ நகரையும் பார்க்கப் பிரியமுள்ளவர்கள் சூயஸ் பட்டினத்தில் இறங்கி மோட்டார் வைத்துக்கொண்டு பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்து விட்டு அடுத்த நாள் போர்ட் செட் (Port Said) என்னும் ஊரில் கப்பலுக்கு வந்து சேரலாம். இவ்விடங்களுக்கு அழைத்துக்கொண்டு போகிறவர்களும் சூயஸ் துறை முகத்தில் கப்பலில் வந்து சந்திக்கிறார்கள்.

சூயஸ் கால்வாய் ஆப்பிரிக்காவையும் ஆசியாவையும் சேர்க்கும் பூசந்தியில் வெட்டப்பட்டு செங்கடலையும் (Red Sea) மத்திய தரைக் கடலையும் (Mediterranean Sea) சேர்க்கிறது. இக் கால்வாய் வெட்டுவதற்குப் பல நூற்றாண்டுகளாகப் பல அரசர்களால் பிரயத்தினம் செய்யப்பட்டு வந்தாலும், முடிவில் பிரஞ்சு தேசத்தவராகிய லெஸ்ஸப்ஸ் என்பவர் பெரு முயற்சியிலேயே முடிவு பெற்றது. இக் கால்வாய் 88 மைல் நீளமுள்ளது. இரண்டு கப்பல்கள் எதிரெதிராகப் போகக்கூடிய அகலமிருந்தாலும் ஒரு கப்பல் மற்றொரு கப்பலைத் தாண்டிச்செல்ல வேண்டுமானால், ஒரு கப்பல் ஒதுங்கி நின்று கொண்டிருந்து மற்றது இதைத் தாண்டிச் சென்ற பிறகே செல்லவேண்டியது. அகலக் குறைவான இடத்தில் இரண்டு கப்பல்களும் ஒன்றை மற்றொன்று தாண்டிச் சென்றால் ஒன்றோடொன்று மோதிக்கொண்டால் கப்பலுக்கு ஆபத்து நேரிடுவதன்றி கால்வாயில் கப்பல் போக்கு வரத்தும் தடைப்பட்டு, வியாபாரத்துக்குப் பெருத்த நஷ்டமேற்படும். இதை உத்தேசித்தே எந்தக் கப்பலானாலும் சூயஸ் கால்வாயில் போகும்போது கால்வாய் கம்பெனியார் அனுப்பும் மீகாமனை (Pilot) வைத்துக் கொண்டே செல்லவேண்டும். கால்வாயின் இரு பக்கங்களிலும் பாலை வனமாயிருப்பதால் காற்றினால் மணலடித்து கால்வாய் தூர்ந்து விடாமல் இருக்கும்படி அடிக்கடி மண்ணெடுக்கும் படகுகளை (Dredgers)க் கொண்டு வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். கால்வாய் வழியாகப் போகும்போது அங்கங்கே கப்பல்கள் நிற்பதற்கு ஸ்டேஷன்கள் இருக்கின்றன ஆனால் பெரிய கப்பல்கள் அங்கே நிற்பதில்லை. சூயஸிலிருந்து போர்ட் செட் போகும் வழியில் இடது பக்கத்தில் எகிப்து (Egypt) தேசக் கரையோரமாக மோட்டார் போகக்கூடிய ரோட்டும் அதற்கருகில் புகை வண்டிப் பாதையும் இருக்கிறது. அங்கங்கே புகை வண்டி ஸ்டேஷன்களையும் கால்வாய் ஓரங்களில் மராமத்து வேலை நடப்பதையும் சில விடங்களில் அரேபியர் ஒட்டகங்களில் ஏறிச் செல்வதையும் பார்க்கலாம். முடிவில் போர்ட் செட் (Port Said) பட்டணத்தை



அடைந்தோம். அவ்வூரில் கால்வாய்க் கரையோரமாகத் துறை முகத்தில் கால்வாய் கட்டினவரான லெஸ்ஸப் (Lessops) ஸின் உருவச் சிலை வைத்திருக்கிறது.

போர்ட் செட் பட்டணம் ஆப்பிரிக்காவும் ஆசியாவும் சேருமிடத்திலும் ஐரோப்பாவுக்குப் போகும் வழியிலும் இருப்பதால் பலவித நாகரீகங்களும் பொருந்திய ஊராயிருக்கிறது. இவ்வூரைச் சேர்ந்ததும் நாலைந்துபேர் சேர்ந்து ஒரு குதிரை வண்டியை அமர்த்திக்கொண்டு ஊரைப் பார்க்கப் புறப்பட்டோம். கால்வாய் ஓரமுள்ள தெருவில் விளக்குக் கூண்டு (லைட் ஹவுஸ்), மியூசியம், கப்பல் கம்பெனிகளின் ஆபீஸுகள் இருக்கின்றன. முதலில் 'தாமஸ் குக்' (Thomas cook) கம்பெனியாரின் ஆபீஸுக்குப் போய் கையிலுள்ள ரூபாய்களுக்கு இங்கிலீஷ், இத்தாலிய நாணயங்கள் மாற்றிக்கொண்டோம். இக் கம்பெனியாரே வழியில் பார்க்கக்கூடிய ஊர்களைப் பற்றிய சிறு குறிப்புப் புஸ்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைக் கொண்டும் அவற்றில் போட்டிருக்கும் (Map) ஊர் படங்களிலிருந்தும் ஊர்களைப் பிறருதவியின்றி பார்க்க முடிகிறது. இப் புஸ்தகங்களைப் பெற்றுக் கொண்டு வெளியில் வந்து அத் தெருவிலேயே வடக்குக் கோடியில் உள்ள மியூசியம் என்ற காஷி சாலையைப் பார்த்தோம். அவ்விடம் எகிப்து தேசப் புராதன சரித்திரத்தையும் பழக்க வழக்கங்களையும் விளக்கக்கூடிய சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. மூவாயிரம் வருஷங்களுக்கு முன் பக்குவப்படுத்தி வைத்திருக்கும் மம்மி (Mumuy) என்று சொல்லப்பட்ட சவங்களைப் பார்த்தோம். அவ்வளவு வருஷங்களாயிருந்தும் அச் சவங்கள் கெடாமலும் அவற்றின் மேல் சுற்றப்பட்ட துணி நேர்த்தியான நிலைமையிலும் இருக்கின்றன! மியுசியத்திலிருந்து புறப்பட்டு இத் தெருவுக்குப் பின்புறமுள்ள தெருவிலிருந்த தபாலாபீஸில் இந்தியாவில் உள்ளவர்களுக்குக் கடிதம் எழுதிப் போட்டுவிட்டுக் கடைத் தெருவுக்குப் போனோம். இங்கே ரோட்டு ஓரங்களில் ஜனங்கள் நடப்பதற்கு

அமைத்திருக்கும் மேடான பாதைகளில் நாற்காலிகளும் மேஜைகளும் போட்டுக்கொண்டு அவ்விடமே காபி, டீ முதலானவைகளைக் குடித்துக் கொண்டிருந்தார்கள். இவ்விடம் பார்சிக்காரர் கடைகளும் இருக்கின்றன. ஆ. ராமசாமி என்ற தென்னிந்தியருடைய பெரிய கடை ஒன்றும் இருந்தது. எகிப்து தேச நாகரீகத்துக்கு அறிகுறியாக இவ்விடம் சாமான்கள் வாங்கலாம். இவ்விடம் ஆங்கிலேயருடைய பவுன் நோட்டு செலாவணியாகிறது.

கடைத் தெருவைப் பார்த்த பின்னர் சர்க்கார் ஆபீஸ்களையும் மசூதியையும் பார்த்துக்கொண்டே ஆங்கிலேயர், பிரஞ்சு, கிரேக்கர், எகிப்து தேசத்தவர் வசிக்கும் பாகங்கள் வழியாகச் சென்றோம். ஒவ்வொரு தேசத்தவரும் ஊரில் பிரத்தியேக பாகங்களில் குடியிருந்து வருவதாகத் தெரிகிறது. கட்டிட முறையில் ஒரு பாகம் மற்றொன்றுக்கு வித்தியாசமாகவே இருக்கிறது. எகிப்து தேசத்தவர் இருக்கும் பாகத்தில் கோஷா பழக்கத்தை அனுசரிப்பவர்களுக்கு ஏற்றபடி கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஸ்திரீகள் முகத்தைத் துணியில் மறைத்துக்கொண்டே தெருவில் நடந்து வந்தனர்.

போர்ட் செட் துறை முகத்தில் இறங்கினது முதல், தெருவில் நின்று கொண்டு வியாபாரம் செய்பவர்களின் தொந்தரவு பொறுக்க முடியவில்லை. ஊரைக் காட்டுகிறேன் என்று சொல்கிறவர்களும், சிகரெட்டு வாங்கச் சொல்கிறவர்களும், படங்களையும் பாசிமணிகளையும் வாங்கச் சொல்கிறவர்களும் கணக்கிட முடியாது. வேண்டாமென்று எவ்வளவு பிடிவாதமாகச் சொன்னாலும் பின்னாலேயே நம்மைப் பின்பற்றி வந்து நம்மை எதையாவது வாங்கும்படி இம்சைப் படுத்துகிறார்கள். முடிவாக, ஒருவனைத் துரத்தினால் மறு நிமிஷமே எங்கிருந்தோ மற்றொருவன் முளைத்து வந்து நம்மை இம்சை செய்ய ஆரம்பிக்கிறான். வேண்டாமென்றாலும் அசங்கியமான படங்களை நம் முகத்துக்கு முன் காட்டி வாங்கச் சொல்கிறார்கள். கிரேக் டான்ஸ் காட்டுகிறேன் என்று ஒருவன் கூப்பிடுவான். கடைத் தெருவு, தபால் ஆபீஸு காட்டுகிறேன் என்று இனி



# பண்டைக் காலப் பெண் கல்வி.

## பண்டிதை ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மாள் அவர்கள்.



இது ஆதி காலம் மத்திய காலம் நிகழ் காலம் என மூன்று பகுதிகளாகும். இதில் ஆதி காலமென்பதே பண்டைக் காலமாகக் கொள்வது மரபு. அக் காலத்து இந்திய நாடு அல்லது பாரத தேசம், பாரத நாட்டிற் பிறந்த அரசரால் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் அறத்தின் வரம்புக்குள் ளடங்கி அன்புப் புனல் பெருக்கி, ஒழுக்கம் வளர்த்து, குடிவளம் சிறக்கத் துணை பல புரிந்து வந்தனர். "வறியன் ஓம்பும் வயலென"க் காத்தனன் என் ஓர் அருட் கவி அரசனைச் சிறப்பித்தனர். அதிலிருந்தே எவ்வாறு கடனாற்றினர் பண்டைக்கால மன்னர் என்பதை எளிதிலுணரலாம். குடி மக்களும் இத் துணைச் சிறந்த அரசனை உண்ணும் நீரினும் உயிரினும் அரியனாக நேசித்தனர். இத்தகைய நந் நிலை தலை சிறந்திருந்த பண்டைக் காலத்தில் பெண்கள் நிலை எத்தகையதா யிருத்தல்

---

பொருவன் சொல்வான். இவர்களை நம்பிச்சென்றால், கூடச் சென்றதற்குக் கூலி கேட்பதன்றி நாம் சாமான் வாங்குமிடத்திலும் வியாபாரி மூலமாக நம்மிடமிருந்து தரகு பெற்றுக் கொள்கிறார்கள். கடைத் தெருவிலும் காபி ஹோட்டல்களிலும் கூடப்போய் வாங்கும்படியும் சாப்பிடும்படியும் தொந்திரவு செய்யத் தெருவில் தரகர்கள் நின்றுகொண்டு 'இந்தக் கடைக்கு வா, அங்கே வா' என்று வழியில் போவோர் வருவோரைக் கூப்பிடுகிறார்கள். ஆகையால் ஏமாந்து போகாமல் இருக்க வேண்டுமானால், நாலைந்து பேராகச் சேர்ந்தே இவ்வூரில் இறங்கிப் பார்ப்பது நல்லது.

கூடும் என மனக் கண்ணால் சிறிது நோக்குவோமாயின், கல்வியும் கற்பும் கடமையும் ஒழுக்கமும் அன்பும் ஈகையும் ஒருங்கே செழுமையிற் கொழுமிய உயரிய ஓர் இன்பத் தோற்றம் அன்றோ புலனாகும்.

அஞ்ஞான்று,

"கல்லாது நிற்போர் பிறர் இன்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை அவை வல்ல ரல்லாரு மில்லை"

என்றபடி எல்லோரும் உடலை யோம்ப உணவை அவசியமாகக் கருதுவது போல் அறிவை ஓம்புவதற்காகக் கல்வியை இயல்பாகக் கொண்டிருந்தனர். ஒப்புயர்வற்ற கல்வியும் பொதுக் கல்வி, சிறப்புக் கல்வி எனும் இரு பகுதிகளில் பயிற்றப்பட்டு வந்தது.

ஆண்மை, அஞ்சாமை, வீரம், வன்மை முதலிய ஆடவர்க்கமைய வேண்டிய இயல்புக் குணங்களை வளர்க்கத் தக்க முறையில் ஆடவன் இனத்திற்கும் அடக்கம், பொறுமை, ஒழுக்கம், உழைப்பு, விநயம் அன்பு, நிறை, ஈகை முதலிய இயல்புக் குணங்களை உரம் பெறச் செய்யும் முறையில் பெண் இனத்திற்கும் கல்வி யளித்திருத்தல் வேண்டுமென்பதற்குப் பண்டைக் கால சரித்திர ஸ்திரி பூமான்களே சான்றாகும்.

நீதி போதனை இரு பாலார்க்கும் பொதுவாய் மலர்ந்திருந்தது; இன்றேல், மாதரார் 'அற்பி னின்றன அறங்கள் அன்னவர், கற்பி னின்றன காலமாரியே' எனக் கவியரசர் வாக்கில் அமைந்திருக்க முடியாது. பெண்களிற் சிலர் கவிஞர்களாயும் இருந்தனர். அத்தகைய கவியரசிகளும் குடும்பப் பணிகளை முதற் கடனாக எண்ணி கணவனைப் போற்றி மக்களை யீன்றும் வளர்த்தும், விருந்தினரை யுபசரித்தும் சிறந்திருக்கின்றனர். தவிர கல்வியாலோ கவிப் புலமையாலோ பொருள் தேடுதலை உரிய சாதனமாகக் கொண்டனரில்லை. ஆடவன் ஈட்டும் பொருளைத் தக்க அற முறையில் புகழ் பூப்பச் செலவிடும் பொறுப்பும், உறிமையும், ஆடம்பரமற்ற இயற்கை வாழ்வு நடாத்தும் திறமையும் பெண்ணரசிகளிடம் அடங்கி யிருந்தன. இன்றேல், இராமனையும், தருமனையும், வீமனையும், அருச்சுனனையும், அரிச்சந்திரனையும் ஈன்றிருக்க முடியுமோ? சீதை, தமயந்தி, நளாயினி, சீமந்தனி, தேவஹூதி முதலிய பெண்களை யுதவி யிருக்க முடியுமோ?



அத்தகைய தோற்றம் இந் நாளில் இறந்து பட்டதற்குக் காரணம் ஒழுக்கமற்ற, அடக்கமற்ற இயற்கைக் கல்வியைப் புறக்கணித்த ஆண் இனமும் பெண் இனமும் தேசத்தில் தோன்றிக் கொண்டிருப்பதே யென்பதைக் கூறவும் வேண்டுமோ?

பெண்கள் ஆண்களுடன் போட்டி போட்டு நாள்தோறும் வெளியேறுவதையும், அறத்தை வளர்க்கு மிடமாகிய மனை வாழ்க்கையை நிராகரிப்பதும், இயற்கைக் கடமைகளை யாற்றுதல் இழிவென எண்ணுவதையும் கண்டு கண்டு சலித்துப் போகின்றோம். கடவுள் சிருஷ்டி மட்டில் ஆண்பாலையும் பெண்பாலையும் வேறுபட்ட இயற்கை, அமைப்பு, அறிவு இவைகளை யுடையவர்களாகவே ஆதியிலிருந்தது போல் ஒரே தன்மைத் தாய் மாற்றம் சிறிதுமின்றி நடந்து வருகிறது. இந்த சமத்துவ முன்னேற்ற மென்னும் உணர்ச்சி சிருஷ்டி கர்த்தா விடம் ஏற்படவில்லை. தற்கால நாகரீகம் இன்னம் சின்னாள் நீடித்து வரின் ஒழுங்கீனமலிந்து சமூகச் சட்டங்கள் அழிந்து பண்டைக்கால மாதரசிகளைப் பற்றி எண்ணுவோரும் சிலராவர். ஆயினும் எல்லாம் வல்ல இறைவன் திருவுளம் இப் புது நாகரீக மயக்கம் தெளிந்து பண்டை நாகரீகம் தோன்றுமாறு துணை செய்யு மென்பதே அறிஞர் பலரின் நம்பிக்கை.

---

1. தேசாபிமான மிக்க பத்திராதிபர்களின் மனம் பல ரச இன்பத் தேனூற்று.

2. கடவுள் கடவுள் என்று கூறி மனிதரைத் தட்டி எழுப்பும் மதமே தற்கால மனித உலகத்திற்கு வேண்டியிருக்கிறது.

ரா. நா.

---

# சுதந்தரப் பாசறை.

## ஜனாப் கான் முகம்மது அவர்கள்.

### வீரர்கள்

கற்பின்மிக்க கன்னிமார் கருப்பையுட் கனிந்தபேர்
அற்பின்மிக்கர் ஆழியன்னர் ஆதரம்ப யின்றபேர்
வெற்பின்மிக்க வீரரென்ன வீரவாகை சூடினர்
பொற்பின்மிக்க தோளின்வன்மை பொன்றிடாத வென்றியார். 1.

வாழ்வதே பிறர்க்கென வழங்கியே முழங்கினர்
தாழ்வதென்று கண்டபோதும் தருமமே நயந்தபேர்
சூழ்வதென்ன சூழ்ந்தபோதும் சோர்விலாத சாந்தமே
ஆழ்வதென்ற ஆர்வமிக்க ஆன்றஞான மூன்றினர். 2.

வீரமென்றும் உதிரமென்றும் வேறிலாமை கண்டுமெய்
வாரமன்றி வாய்மையால் வழக்கமென்று கொண்டிலார்
தூரமென்றும் துன்பமென்றும் தோற்றமற்ற ஆற்றலார்
சேரநின்று கொக்கரிக்கும் சேனைஎங்கள் சேனையே. 3.

### சேனாபதி

ஓந்திஓந்தி யென்னஉள்ள முற்றவாறு பற்றுவார்
சாந்திசாந்தி என்னவந்த தத்துவத் தவப்பொருள்
ஏந்திஏந்தி அன்பினைத்தும் இருதயத் திருட்கொரு
காந்திகாந்தி என்னவந்த காந்திசேனா பதியரோ. 4.

### உதாரணம்

விண்டுநாம மன்றியே விளம்பவும் மறுப்பதே
கொண்டுவாது கூறுபிள்ளை கொற்றமுற்ற துற்றதே
பண்டுகோசி கன்படைப்ப லம்புடைத்த தோர்நல்
தண்டுகண்டு நாமெதிர்ந்து தாக்கவந்த ஊக்கமே. 5.



### ஆயுதம்

அறிவிலக்க மானுமன்றில் ஆள்விலக்கு வாளென
குறியிலக்க உத்தியோக கோள்விலக்கு வேலென
பொறிவிலக்கு கள்விலக்கு போரில்வெல்லும் வில்லென
தறியிலக்கில் நேர்தகர்க்கும் தக்கமாபீ ரங்கியே. 6.

அருளுகின்ற ஆதிதேவன் அன்பின்இன்ப மென்பதே
தெருளுகின்ற ஞானமாத்தே விட்டநின்ற சிந்தையர்
சுருளுகின்ற மாயையிற்சு ருண்டசுற்று விட்டிட
உருளுகின்ற சக்கரத்தின் உருளுகின்ற துலகமே. 7.

அடிமைபட்ட அவனியோர னுப்பிவிட்ட தூதுபோல்
கடுமைபட்ட நோன்பிருந்து கடன்செயும்ம தீந்திரர்
கொடுமைபட்டம். கட்டிவைத்த குறியிதென்ன அரசியல்
மிடிமைபட்ட தட்ட திக்கு மீண்டுமீண்ட துரிமையே. 8.

### போரொலி

வான்முழங்கு கின்றதென்ன வழங்கும்வந்தே மாதரம்
தான்முழங்க விண்டுநாம சம்புநாத நாதமே
ஆன்முழங்க அரிமுழங்க ஆனகம்மு ழங்கவே
தீன்முழங்க மறைமுழங்கு தேயல்லாஹு அக்பரே. 9.

### கொடி

செச்சையங்கொ டிப்பறப்ப சேணிலென்று காணவே
பச்சையும்சி வப்பும்வெள்ளை பாகமாப தாகைமேல்
இச்சைதங்கு சக்கரத்தோ டிலகுபிள்ளை வெண்பிறை
அச்சையண்ட முகடுயர்த்த அச்சமுற்ற தரசெலாம். 10.

### நாட்செயல்

ஒற்றையாழி யோடுதிங்கள் ஒன்றுசேர்ந்த வேளையே
அற்றைநாளில் ஆழியேந்தி ஆழியுங்கமு கூர்த்தமால்
இற்றைநாளில் ஒற்றையாழி இந்துவோடு சேர்ந்தநாள்
மற்றெவர்க்கும் வாய்த்ததென்று மகிழ்வினோடு புகழ்மினே. 11.

198527

### களப்பலி

நன்றுபார தத்தினுப்பை நாமயீன்ற மக்களால்
என்றுபார தத்தினூழி யத்திறந்து பட்டமோ
அன்றுபாரு தித்தநாள்மற் றன்றுவாழ்வு பெற்றநாள்
என்றுநேர சத்தியக்ர கத்திலீடு பட்டபேர். 12.

பிறப்பெடுத்த சடலமாயும் பெரியநிச்ச யத்தினால்
இறப்படுத்த தினியதாக என்னில்ஈனம் நம்பினோர்
மறப்பதற்கும் உரிமைபெற்று வாழ்வதற்கும் பொற்பதி
திறப்பதற்கு மாகஎன்னில் த்யாகமென்ற த்ரேகமே 13.

சாற்றமிர்த சரசில்பாகு ஜாலியன்வா லாவிலே
மாற்றமின்ன சட்டமென்ன வந்துகூடு மேன்மையர்
கூற்றமன்ன டயராடித்த குண்டுபட்ட பேர்களை
ஏற்றதம்மை காளிதேவி யிட்டனம் களப்பலி. 14.

### பாசறை

விரதமண்டும் ஆன்மவிற்கு வினைபரந்த புலிசிறை
சரதமுண்டும் உயிரடைத்த சடலமம்ம வோர்சிறை
வரதன்அண்டம் அனுபவிக்க வாய்த்ததில்லை யால்சிறைப்
பரதகண்ட சிறைக்களங்கள் படைகள்தங்கு பாசறை. 15.

---

1. பிறர் உணர்ச்சிகளை மதிக்காத எதேச்சாதிகார தேசாபிமானத் தலைவர்களின் செய்கையால் போக்கால் ஒழுக்கமும் அடக்கமும் உறுதியும் கொண்ட உழைப்பு மிக்க எத்தனையோ தேசபக்தர்களின் மனம் புண்பட்டு ஒடிந்துகொண் டிருக்கிறது.

2. சரியான சந்தர்ப்பங்கள் கிடைக்காததால் தேசத்திற்காக உயிரை விடக்கூடிய தியாகிகள் தேசத் தொண்டில் ஈடுபடாது மௌனமாக இருக்கிறார்கள்.

3. எங்கு எதேச்சாதிகாரம் அதிகமாய்த் தாண்டவமாடுகிறதோ அங்கு சுதந்திர உணர்ச்சிப் பஸமாய்த் தோன்றும்.

ரா. நா.

---



# ஜான்ஸி மஹா ராணி லக்ஷ்மீபாய்.

திருவாளர் என். வேங்கடரமணன் அவர்கள்.

(உரிமை ஆசிரியருடையது.)

## I

இந்தியாவிற் பிறந்த மக்களில் ஆடவர்களிற் போலவே பெண்களிலும் எண்ணிறந்த வீர ரத்தினங்கள் தோன்றிப் பிரகாசித் திருக்கின்றனர். ஆயினும் அவ் வீர மக்களில் பல போது வரலாறுகள் வெளி யுலகம் அறிய முடியாத நிலையில் காலச் சக்கிரத்தின் கீழ்ப் புதைக்கப்பட் டிருக்கின்றன. ஆதி முதலே தேச சரித்திரங்களை நம் முன்னோர் எழுதி வைக்க முற்பட்டிருந் திருப்பார்களாயின் நந் நாட்டிற் பிறந்த எத்தனையோ நெப்போலியன்களும், எத்தனையோ வாஷிங்டன்களும், எத்தனையோ ஜோன்ஸ் ஆப் ஆர்க்குகளும், எத்தனையோ பொடீசியாக்களும் இன்று உலகில் புகழப் படுபவரா யிருந்திருப்பர்! இக் குறையால் நந் நாட்டுக்கே யன்றி உலகத்திற்கே பெருநஷ்ட மேற்பட்ட தென்பதற் கையமில்லை. ஆயினும் அதிர்ஷ்ட வசத்தால், மொகலாயர்கள் நந் நாட்டிற் பிரவேசித்தது முதற் கொண்டு பிரசித்தி யடைந்த நந் நாட்டு வீர மக்களின் வரலாறுகள் உள்ளவாறு முழுதும் வெளிப்படாமற் போயினும் ஒரு சிறிதேனும் உலகம் அறிய முடிந்திருக்கிறது. தேசாபிமானங் கொண்டு சுதேசத்தை அயல் நாட்டாரிடத்தி னின்றுங் காக்கத் தீவிரமாக முனைந்து போர் புரிந்து (சிலர் பயன் பெற்றும், சிலர் பயன் பெறாமலும்) வீர சுவர்க்கம் எய்திய பாரத மக்களின் திரு நாமங்கள் இந்தியருக்குத் திரு மந்திரங்களன்றோ?

நன் நாட்டின் மீது படையெடுத்து வந்த அலெக்ஜாண்டரைப் புருஷோத்தமனும், செல்யூகசைச் சந்திர குப்பதனும், ஹூணர்களையும், சாக்கியர்களையும் ஹர்ஷ வர்த்தனன், சமுத்திர குப்தன் முதலியோரும், மொகலாயர்களை சிவாஜி, ராணு பிரதாப சிம்மன், சத்திரசால் முதலியோரும் எதிர்த்துப் போர் புரிந்து பல முறை வெற்றியுற்றுப் 'பாரத' மாதாவைக் காத்து நின்ற அவர்களது வீரமும், தீரமும், தியாகமும், தேசாபிமானமும் உலகில் புகழப்படுகின்றன வன்றோ? அவர்களுக்குப் பிற்பட்ட காலத்திலும் எண்ணற்ற வீர மக்கள் வெளிப்பட்டு தேசாபிமானத்தால் வீரச் செயல்கள் பல புரிந்து பாரதத் தாயின் திருவடிகளில் தங்கள் உயிரை அர்ப்பணஞ் செய்திருக்கின்றனர். ஆயினும் அத்தகையோர்களது உண்மைச் சரித்திரங்கள் ஓர வஞ்சனை வாய்ந்த அயல் நாட்டுச் சரித்திரக்காரர்களால் மறைக்கப்பட்டதோடு, இந்திய வீர மக்கள் சிலர் கொள்ளைக்காரர்களென்றும், கள்வர்களென்றும், துஷ்டர்களென்றும் தூற்றவும் பட்டனர். துரதிர்ஷ்டம் வாய்ந்த இத்தகைய நிலையைக் கவனிக்கத் தாய் நாட்டு அபிமானம் மிகுந்த இந்தியச் சரித்திரக்காரர்கள் சிலரும், நடு நிலைமை வாய்ந்த ஆங்கிலேய சரித்திரக்காரர்கள் ஒரு சிலருங் கூடி மறைக்கப்பட்டுப்போன சரித்திரங்களை ஆராய்ந்து உண்மைச் சரித்திரங்களைக் கண்டு பிடித்து ஒவ்வொன்றாக இன்று வெளியிட்டு வருகின்றனர். மலை எலி யென்றும், கொள்ளைக்கார னென்றும் அயல் நாட்டுச் சரித்திரக்காரர்களால் தூற்றப்பட்ட சிவாஜி மன்னன் உண்மைத் தேசாபிமானம் வாய்ந்த உத்த மோத்தமமான பாரத வீரர் என்று இன்று உலகம் ஒப்புக்கொண்ட தன்றோ? அப்படியே "ஜான்ஸி மஹா ராணி லக்ஷ்மீ பாய்" அவர்களும் சரித்திரக்காரர்களால் பல வாறு தூற்றப்பட்ட போதிலும் இன்று இவரது உண்மை வரலாற்றை உலகம் அறிந்து போற்ற முற்பட்டிருக்கிறது. அவரது விரோதிகளாலேயே "இந்திய ஜோன்ஸ் ஆப் ஆர்க்" என்றும் "இந்திய போடீசியா" என்றும் ஜான்ஸி ராணிக் கூறப்பட் டிருக்கிறாரென்றால் அவரது பெருமையைப் பற்றி நாம் அதிகம் கூறத் தேவை யில்லை. எனினும் இவரைப் பற்றி எழுதிய சரித்திரக்காரர்கள் பலரும் பல விதமாகக் கூறிப் போந்தனர். எனவே அவரது உண்மை வரலாற்றினை அறிய வேண்டுவது அனைவர்க்கும் அத்தியாவசியமாகும். மேலும் இந்திய மக்களின்



தேசாபிமானம் படைத்த உள்ளத்திற்கு இத்தகைய சரித்திரங்கள் நல் விருந்துமாகும். ஆகவே இவரது சரித்திரச் சுருக்கத்தினைத் தமிழர்களுக்காக வேண்டி இதன் கீழ்த் தருகின்றோம்.

## பிறப்பும் வளர்ப்பும்

நமது ஜான்ஸி மஹா ராணி லக்ஷ்மீ பாய் அவர்கள் 1835-ம் வருடம் நவம்பர்மீ 16வ காசியில் ஒரு மகாராஷ்டிர பிராமண குலத்திற் பிறந்தார். அவரது தந்தையாரின் பெயர் மோரோபந்து தாம்பே என்பதாம். அன்னையார் பாகீரதி பாய் என்பவர். அவர்கள் வம்சத்தார்கள் அனைவரும் பிரம்ம தேசத்தை யாண்ட பீஷ்வாக்களின் சேனைகளில் பெரிய சர்தார்களாக விருந்து வீர வாழ்க்கை நடத்தி வந்தனர். 1818-ம் ஆண்டில் கடைசிப் பீஷ்வாவாகிய இரண்டாவது பாஜீ ராவ் அவர்கள் ஆங்கிலேயர்க ளிடத்தில் வருடத்திற்கு எட்டு லக்ஷம் ரூபாய் பென்ஷன் பெற்றுக் கொண்டு புனாவை விட்டுச் சென்றார். ஆங்கில துரைத்தனத்தார் அவரது சகோதரர் சிமாஜி ஆபா என்பவரைப் பெயரளவில் அரசனாக நியமிக்க முயன்றனர். ஆயினும் அவர் உண்மையில் அதிகார மில்லாத அரச பதவியை ஏற்க இஷ்டமில்லாதவராய், புண்ணிய க்ஷேத்திரமாகிய காசிக்குச் சென்று அங்கே வசிக்க முற்பட்டார். சிமாஜி ஆபா அவ்வாறு காசிக்குச் செல்லும் பொழுது தம்முடைய அன்புக்குப் பாத்திரரான சர்தார் மோரோ பந்து தாம்பே அவர்களையும் குடும்பத்துடன் தம்மோடு அழைத்துச் சென்றார். அவ்வாறு மோரோ பந்து அவர்கள் காசியி லிருக்கையிலேயே அவரது குமாரத்தியாகிய ஜான்ஸி மஹா ராணி பிறந்தார். அவருக்குச் சிறு வயதில் பெற்றோர்கள் மனு பாய் என்றே பெயரிட்டனர். மனு பாய் அறிவிலும், அழகிலும் அன்பிலும் சிறந்து விளங்கிப் பெற்றோருக்கும், பிறருக்கும் மகிழ்ச்சி யுண்டாக்கினாள். பாகீரதி பாயியின் அருங் குணங்களுக்கேற்ற அருங் குமரியே யுதித்தாளெனப் பலரும் புகழ்ந்தனர். அவ்வித மிருக்கையில் சிமாஜி ஆபா அவர்கள் காலமாயினார். எனவே அவரது ஆதரவில் வாழ்ந்து வந்த மோரோ பந்து தாம்பே அவர்களுக்குக் காசியில் வாழ்க்கை நடத்துவது கடினமாயிற்று. அதைக் கேள்விப்பட்ட பென்ஷன் பெற்ற பாஜீ ராவ் பீஷ்வா

அவர்கள் மோரோ பந்து அவர்களைத் தம்மிடம் பிரம்ம தேசத்திற்கு அழைத்துக் கொண்டு ஆதரித்தார். அந் நிலையில் மனூ பாயிக்கு மூன்றாவது ஆண்டு நடக்கையில் அவளது அன்னை பாகீரதி பாய் தேக வியோகமடைந்தார். அவ்வாறு நேர்ந்த மனைவியின் பிரிவால் மோரோ பந்து அவர்கள் மனவருத்த முற்றாராயினும் கிருக கிருத்தியங்களனைத்தையும் தாமே நிர்வகித்துக் கொண்டு தம் மருங் குமரி மனூ பாயைப் போற்றி வளர்த்து வந்தார். தந்தையாரோடு கூடி ஆடவர்களிடையில் ஊடாடிப் பழகி வந்தபடியால் மனூ பாய் ஆரம்பத்தினின்றே ஆண்மையும், தைரியமும் வாய்க்கப்பெற்றார். மேலும் பாஜீ ராவ் பீஷ்வா அவர்கள் தத்துப் புத்திரர்களாகிய நாநா சாஹிபு, ராவ் சாஹிபு ஆகிய அரசிளங் குமாரர்களோடு நம் மனூ பாயும் சேர்ந்து பள்ளியில் கல்வி கற்கலாயினர். அரச குமாரர் கற்ற சகல கலைகளையும் நம் மனூ பாயும் வேற்றுமையின்றிக் கற்று வரலானார். யானை ஏற்றம், குதிரைச் சவாரி, வாட்போர் முதலியவற்றைக் கற்றதோடு, சமர் புரிதல், படை நடத்தல், பாசறைகளைத் தாண்டுதல், கோட்டைக் கொத்தளங்களைக் காத்தல் முதலிய அரசியல் வீரக் கலைகளினத்தையும் கற்றுத் தேர்ந்தார். மனூ பாயின் அத்தகைய சாமர்த்தியங்களையும் அவரது அழகே உருவெடுத்து வந்தாற் போன்ற மதி முகத்தையுங் கண்ட பீஷ்வா பாஜீ ராவ் அவர்கள் அவ்வம்மையை சபேலீ (சம்பங்கிப் பூ) என்று செல்லப் பெயரிட்டழைத்து வருவாராம்.

## விவாஹமும் அரச பதவியும்

அவ்வாறு மனூ பாயிக்கு ஏழு ஆண்டுகள் நிறைவுற்ற காலத்தில் அவரது தந்தை மோரோ பந்து அவர்கள் தங் குமரிக்கேற்ற கணவனைத் தேடி மணம் முடித்து வைக்க வேண்டுமென்று கவலை கொண்டார். அந் நிலையில் "ஜான்ஸி" ராஜ்யத்தினின்றும் பிர்ம்ம தேசத்திற்கு பாஜீ ராவ் பீஷ்வா அவர்களைக் காண வந்த 'தாந்தியா தீக்ஷிதர்' என்ற சோதிடர் ஒருவரின் உதவியால் அது காலை ஜான்ஸி ராஜ்யத்தை ஆண்டு வந்த மஹா ராஜா கங்காதர ராவ் அவர்களுக்கு மனூ பாயைக் கொடுத்து விவாஹம் செய்வதென்ற நிச்சயம் ஏற்பட்டது. சின்னாட்களில் எனவே 1842-ம் ஆண்டில் ஜான்ஸி அரசர் கங்காதர ராவ்



அவர்கள் மனூ பாயைச் சிறப்புற விவாஹம் செய்து கொண்டார். கணவனுக்கேற்ற காரிகை யென்றும், மணமகளுக் கேற்ற மணாளனே என்றும் உலகோர் போற்றச் சதிபதிகளிருவரும் உயிரொன்றும் உடலிரண்டுமென வாழ முற்பட்டனர். விவாஹ காலத்தில் அந் நாட்டு வழக்கப்படி மனூ பாயிக்குக் கணவன் வீட்டாரால் லக்ஷ்மீ பாய் என்று புதிய நாமகரணம் செய்யப்பட்டது. அது முதல் மனூ பாய் 'ஜான்ஸி மஹா ராணி லக்ஷ்மீ பாய்' என்றே அழைக்கப்பட்டார். ஜான்ஸி அரசர் கங்காதர ராவ் தமது விவாஹத்திற்குப் பின்னர் தமது மாமனாராகிய மோரோ பந்து தாம்பே அவர்களை ஜான்ஸி ராஜ்யத்திற்கே அழைத்துக் கொண்டு, அவருக்கு மாதம் 300 ரூபாய் சம்பளத்தில் ஒரு சர்தார் வேலையைக் கொடுத்துக் கௌரவப் படுத்தினார்.

## ஜான்ஸி ராஜ்யம்

ஆண்டுக்கு 20 லட்சம் ரூபாய் வருமானமுடைய 'ஜான்ஸி' ராஜ்யத்தை முதலாவது பாஜீ ராவ் பீஷ்வா அவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு அதை யாண்டு வந்த "நாரோ சங்கர் மோதே வாலே" என்ற சுபேதார், 1756-ம் ஆண்டில் பீஷ்வாவின் அதிகாரத்தை நிராகரித்து 'ஜான்ஸி'யைத் தன் வசமாக்கிக் கொண்டான். அதைக் கண்ட பீஷ்வா அவர்கள் "ரகுநாத ஹரிநேவால்கர்" என்ற மஹா ராஷ்டிரரை ஜான்ஸிக்குச் சுபேதாராக நியமித்து ஜான்ஸியை வசப்படுத்துமாறு அனுப்பினார். ரகுநாத ஹரி எஜமான விசுவாசமும், விவேகமும், வீரமும் வாய்ந்த உத்தமர். எனவே அவர் விரைவில் ஜான்ஸியையடைந்து அதை ஜெயித்துப் பீஷ்வாவின் அதிகாரத்திற் குட்படுத்தினார். அதைக் கண்ட பீஷ்வா அவர்கள் சந்தோஷித்து ரகுநாத ஹரி, தன் வம்ச பரம்பரையாக ஜான்ஸியை யாண்டு வரத்தக்கதென அனுமதியளித்தார். அவ்வாறு ரகுநாத ஹரி ஜான்ஸியில் நிலையாக வசிக்க ஆரம்பித்ததினின்றும், அவரது சகோதரர்களாகிய லக்ஷ்மண ராவ், சிவராவ் பாவ் ஆகிய இருவரும் உதவிக்கு வந்து சேர்ந்தனர். அம்மூவருங் கூடிச் செய்த முயற்சியால் அதிக சேனைகள் திரட்டப்பட்டுக் கலக முயற்சிகள் அனைத்தும் அடக்கப்பட்டன. ஜான்ஸி ராஜ்யம் ஓங்கி வளரலாயிற்று. முன்னிலும் பன் மடங்கு செல்வத்திலும்,

சிறப்பிலும் உயர்வடைந்தது. அந் நிலையில் ரகுநாத ஹரி யவர்களுக்குச் சந்ததி யில்லாமற்போகவே தமது விருத்தாப்பியத்தில் தம்பியாகிய சிவ ராவ் பாவினிடத்தில் ஜான்ஸி ராஜ்யாதிகாரத்தை ஒப்படைத்து விட்டுத் தாம் காசிக்குச் சென்று கடவுள் வழிபாடுகளில் காலங்கடத்தினார். அச்சமயத்தில் இரண்டாவது பாஜீ ராவ் பீஷ்வா அவர்கள் புனா தேசத்தின் சிங்காதனமேறினார். அவரது ஆளுகைக் காலத்தில் மகாராஷ்டிர மெங்கும் குழப்பங்களேற்பட்டன. புனா ஆளுகைக்குட்பட்ட சர்தார்கள் அனைவரும் பீஷ்வாவின் அதிகாரத்தைப் புறக்கணித்துத் தனித் தனியே சுதந்தர ஆளுகையை நடத்த முற்பட்டனர். அத்தகையோர்களை அடக்கித் தம் ஆளுகையை நிலை நிறுத்திக் கொள்ளத்தக்க ஆற்றல் பீஷ்வாவினிடத்தில் இல்லாமற் போயிற்று. அந்த நிலையில் இந்தியாவிற் புகுந்து சிறுகச் சிறுக நாட்டைக் கவர்ந்து ஆண்டுவர முற்பட்ட ஆங்கிலேயர்கள் அச் சமயத்தைக் கைவிடாமல் தங்கள் ராஜ்யத்தைப் பெருக்குவதற்கு முனைந்தனர். ஆயினும் ஜான்ஸியை யாண்டு வந்த சிவ ராவ் பாவ் அவர்கள் அதிக பராக்கிரம சாலி யாகையால் அக் காலையில் ஆங்கிலச் சேனாதிபதியா யிருந்த "லேக்" துரை 1824-ம் ௵ பிப்ரவரி மீ 6௳-யில் ஜான்ஸி யரசரோடு ஒரு புதிய சமாதான உடன்படிக்கைச் செய்து கொண்டார்.

அச் சிவ ராவ் பாவ் அவர்களுக்குக் கிருஷ்ண ராவ், ரகுநாத ராவ், கங்காதர ராவ் என்ற மூன்று புத்திரர்க ளிருந்தனர். சிவ ராவ் பால் அவர்களுக்குப் பின்னர் அவரது குமாரர் கிருஷ்ண ராவ் அவர்களின் குமாரர் ராமசந்திர ராவ் அதிகாரத்திற்கு வந்தார். அவரது காலத்தில் இரண்டாவது பாஜீ ராவ் பீஷ்வா அவர்களின் திறமையின்மையால் அவரது அதிகாரம் நிலை குலைந்து, ஆங்கிலேயர்களின் கைகளில் கிரமமாக வீழ்ந்து வரத் தலைப்பட்டது. 1817-௵ ஜூன் மீ 13௳ பீஷ்வா ஆங்கிலேயரோடு ஒரு சமாதானம் செய்து கொண்டார். அதனால் ஜான்ஸி யுள்ளிட்ட புந்தேல் கண்டு ராஜ்ய மனைத்தும் ஆங்கிலேயர் வசமாயிற்று. எனவே ஆங்கிலேயர்கள் ஜான்ஸித் தலைவராகிய ராமசந்திர ராவ் அவர்களோடு மீண்டும் மற்றொரு உடன்படிக்கை செய்து கொண்டனர். அவ் வுடன்படிக்கையால் ஆங்கிலேயர்கள், ஜான்ஸி ராஜ்யத்தை ராமசந்திர ராவ் வசம் பரம்பரையாய் ஆண்டு வருவதற்கு ஒப்புக்கொண்டனர். 1835-ம்



ஆண்டில் ராமசந்திர ராவ் சந்ததி இன்றி இறந்து போனார். ஆனால் தாம் இறக்குந் தருவாயில் கிருஷ்ண ராவ் என்ற ஒரு குழந்தையைச் சுவீகாரஞ் செய்து கொண்டார். ஆயினும் அச் சுவீகாரம் செல்லுபடியானதல்ல வென்று ஜான்ஸியிலிருந்த ஆங்கிலேயரின் ஏஜண்டுத் தீர்மானஞ் செய்து சிவ ராவ் பாவ் அவர்களின் மற்றொரு குமாரரான ரகுநாதராவைச் சிங்காதன மேற்றினார். அவரும் 1838ல் இறந்து போகவே, அதற்குப் பிறகு யார் உரிமையாளர் என்ற விஷயத்தை யாராய்வதற்கு ஒரு கமிஷனை ஏற்படுத்தி விசாரணை செய்து, ஆங்கிலேயர்கள் சிவ ராவ் பாவின் மற்றொரு குமாரரான கங்காதர ராவே நெருங்கிய உரிமையாளரெனத் தீர்மானித்து அவரை யரசராக்கினர். அவரே நமது கதா நாயகியாகிய ஜான்ஸி லக்ஷ்மீ பாயைத் திருமணம் புரிந்தவர்.

கங்காதர ராவை அரியாசனத்தில் அமரச் செய்த காலையில் ஆங்கில துரைத்தனத்தார் ஜான்ஸியைப் பற்றிய சகல அதிகாரங்களையும் அரசர் செலுத்திக் கொள்ள வேண்டுமென்றும், ஆனால் அவ்வரசரின் செலவின் மீது ஜான்ஸியில் ஆங்கிலச் சேனை யொன்றை வைத்திருக்க வேண்டுமென்றும் நிபந்தனை விதித்தனர். எனவே கங்காதர ராவ் அவர்கள் மூன்று லட்சம் ரூபாயும், இரண்டு பட்டாளங்களையும், இரண்டு ஆயுதத் தொழிற் சாலைகளையும் ஆங்கிலேயர் வசமாக்கி, ஜான்ஸியின் சர்வாதிகாரங்களையுங் கைக் கொண்டு அரசு புரிய ஆரம்பித்தார். அவருடைய பட்டாபிஷேக வைபவமானது அதி விமரிசையாக நடைபெற்றது. அவருடைய ஆளுகையின் கீழ் ஜான்ஸி ராஜ்யம் மீண்டும் அபிவிருத்தி யடையலாயிற்று. அதற்கு முன்னேற்பட்டிருந்த சடன்கள் யாவும் தீர்க்கப்பட்டன. சேனைகள் பலப்படுத்தப்பட்டன. கிரமமான நீதி பரிபாலனம் நிலை நிறுத்தப் பெற்றது. ஜான்ஸி லக்ஷ்மீ பாயின் விவாஹத்தோடு ஜான்ஸி ராஜ்யம் பின்னும் பல வளங்களில் சிறப்புற்றோங்கியது. ஜான்ஸி அரசர் 5000 வீரர்களைக் கொண்ட நிலையான சேனையும், 2000 பேர்களைக் கொண்ட காவற் படையும் 500 பேர்களைக் கொண்ட குதிரைப் பட்டாளமும், 100 பேர் கொண்ட மெய்க் காவலர் கூட்டமும், யந்திரப் பீரங்கிகளைச் செய்யும் நான்கு தொழிற் சாலைகளும் ஏற்படுத்தினார். தக்க அறிவாளிகளும்,

கற்றுணர்ந்தவர்களுமாகிய பெரியோர்களைத் தேர்ந்தெடுத்து அரசியல் அதிகாரப் பதவிகளில் அமர்த்தினார். அவ்வாறு நாட்டின் நலமே தன் நலமெனக் கொண்ட ஜான்ஸி அரசர் செய்த நல்ல ஏற்பாடுகள் பலவற்றாலும் தங் குடிகளாலேயே யன்றி அயலரசர்களாலும், உலகத்தாராலும் வெகுவாகப் புகழப் பெற்றார். ஆங்கிலேயர்களும் அவரை நன்கு மதித்து அவரது நட்பைப் பெரிதும் விரும்பி நின்றனர். அரசாங்கத்தைச் சீர்திருத்தி நன்னிலையை யடையச் செய்ததன் பிறகு, கங்காதர ராவ் அவர்கள் தங் குடும்பத்தோடு காசி, கயை, பிரயாகை முதலிய பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து வந்தார். ஆங்காங்கே ஜான்ஸி யரசியாராகிய லக்ஷ்மீ பாய் அவர்கள் அநேக தான தருமங்களைச் செய்து புகழ் பெற்றார். சின்னாட்களில் லக்ஷ்மீ பாயிக்கு அழகே உருவெடுத்து வந்தாற் போன்ற ஆண் குழந்தை யொன்று பிறந்தது. தாய் தந்தையரும், அந் நாட்டுக் குடிகளும் கழி பேருவகை யெய்தி அவ் விழாவைக் கொண்டாடினர். ஆயினும் மூன்று மாதங்கள் நிறை வுறுவதற்கு முன்னரே அக் குழந்தைக் காலன் வாய்ப்பட்டது. அதனால் ஏற்பட்ட புத்திர சோகமானது கங்காதர ராவ் அவர்களின் மனத்தையும், உடலையும் ஒருங்கே வாட்டி வதைக்கலாயிற்று. வரவர அம் மன்னர் வியாதி முதிர்ச்சியடைந்து உடல் நலத்தைக் குறைக்க முற்பட்டது. மருந்துகளும், பிற சிகிச்சைகளும் பயனற்றவையாயின. புத்திர வியோகத்தோடு தங் கணவரும் மரணப் படுக்கை யெய்தியதைக் கண்ட லக்ஷ்மீ பாயின் துக்கத்தை யாரால் வர்ணிக்க முடியும்?

கங்காதர ராயரின் தேக நிலையைக் கவனித்த லக்ஷ்மீ பாயின் தந்தையாராகிய மோரோ பந்து அவர்களும், அரசாங்க மந்திரி நரசிம்ம ராவ் முதலியோரும் ஒன்று கூடி படுக்கையிலிருந்த அரசரிடத்தில் எதிர்கால அரசாங்க நிர்வாகத்தைப் பற்றி யோசிக்கலாயினர். அப்பொழுது அவ்வரசர் தமது குடும்பத்தைச் சேர்ந்த "வாசுதேவ நேவல்கார்" அவர்களின் குமாரனாகிய ஐந்து வயதுடைய ஆனந்த ராவ் என்ற பாலகனைத் தாம் சுவீகாரம் செய்து கொள்ளக் கருதுவதாகத் தெரிவித்தார். உடனே ஜான்ஸி ராஜ்யத்திலிருந்த பல பெரியோர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பந்தேல் கண்டு ராஜ்யத்தின் ஆங்கிலேய உதவிப் பொலிடிகல் ஏஜண்டு மேஜர் எலிஸ் துரை, ஜான்ஸியிலிருந்த ஆங்கிலச் சேனைத் தலைவர் கேப்டன் மார்டின் துரை ஆகிய பலரும் கூடியிருக்கையில், அவர்கள் முன்னிலையில் சாஸ்திரோக்தமாக அச் சுவீகாரச் சடங்கு நடை பெற்றது. ஆனந்த ராவ் என்ற அக் குழந்தைக்கு வழக்கப்படி "தாமோதர ராவ்" என்று பெயரிடப்பட்டது. அரசரும் சந்தோஷத்துடன் தம் கரத்தாலேயே தாமோதர ராவுக்கு முடி சூட்டினார். தர்பார் வெகு சிறப்புடன் நடை பெற்றது. அந் நிகழ்ச்சிக்குப் பின்னர் கங்காதர ராவ் அவர்கள் ஆங்கிலேய கவர்ன்மெண்டாரவர்களுக்குத் தம் உடல் நிலையைப் பற்றியும், தம் மிரு துரைத்தனத்தாரிடையில் ஏற்பட்டுள்ள உடன் படிக்கைக் கிணங்கத் தம் வம்சத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையைத் தாம் புத்திரனாகச் சுவீகாரம் செய்து கொண்டதைப் பற்றியும், பிரிட்டிஷ் துரைத்தனத்தாரிடம் தாம் எவ்வளவு தூரம் நட்பு பாராட்டி உதவி புரிந்து வந்ததைப் பற்றியும் விவரித்துக் கூறித் தமக்குப் பின்னர் சுவீகார புத்திரன் மேஜராகும் வரையில் தமது மனைவி லக்ஷ்மீ பாயே ஜான்ஸியை ஆண்டு வர வேண்டுமென்று தாம் செய்துள்ள ஏற்பாட்டைப் பிரிட்டிஷார் அங்கீகரிக்க வேண்டுமெனவும் ஒரு நீண்ட கடிதம் எழுதிப் பிரிட்டிஷ் ஏஜண்டு எலிஸ் துரையின் மூலமாக அனுப்பினார். பிரிட்டிஷ் ஸ்தானாதிபதிகளாகிய எலிஸ், மார்டின் துரைகளும் தங்களாலியன்றவரையில் அரசருக்கு வைத்திய உதவிகள் புரிந்தனர். அவ்வாறு பல முயற்சிகள் செய்தும் அரசரின் வியாதி குணப்படவில்லை. அதிக பலஹீனமான நிலையில் கங்காதர ராவ் மீண்டும் தம் நிலையை விளக்கித் தமது சுவீகார ஏற்பாட்டை ஆதரித்து, ஜான்ஸி ராஜ்யத்தை நிலைநிறுத்த வேண்டுமென்று உருக்கமாக மற்றொரு கடிதத்தைப் பிரிட்டிஷாருக்கு எழுதி யனுப்பினார். தமது வேண்டுகோளை ஆங்கிலேயர்கள் நடு நிலைமையோடு ஆதரிப்பார்களென்று நம்பித் தமது மனைவிக்கும் பலவாறு ஆறுதல்கள் கூறி 1853-ம் ஆண்டு நவம்பர் 21உ கங்காதர ராயர் விண்ணுல கெய்தினார்.



பதினெட்டு ஆண்டுப் பிராயமுள்ள அவ்விள மங்கை—ஜான்ஸி லெக்ஷ்மீ பாய் அச் சமயத்தில் அடைந்த விசனத்திற் களவில்லை,

ஜான்ஸி ராஜ்யம் முழுதுமே துக்க சாகரத்தில் ஆழ்ந்ததெனக் கூறலாம். அச் சமயத்தில் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களாகிய எலிஸ், மார்டின் துரைகள் அரச மகலுக்குப் போய் லக்ஷ்மீ பாயிக்குத் தேர்தல் வசனங்கள் சில கூறிவிட்டு, ஜான்ஸி கோட்டைக்குச் சென்று அங்கிருந்த 3 லட்சம் ரூபாய்களைக் கொண்ட பொக்கிஷத்தை அப் பொக்கிஷாதிகாரியாகிய பண்டித ஜ்வாலா நாதரின் முன்னிலையில் பூட்டி முத்திரையிட்டுத் தம் சேனைகளைக் கொண்டு காவல் ஏற்படுத்தினர். மேலும் ஆங்கிலச் சேனைகள் அனைத்தையும் ஆயத்தப்படுத்தி வைத்தனர்.

ஜான்ஸி யரசர் கங்காதர ராவ் காலமான செய்தியை எலிஸ் துரை புந்தேல் கண்டு பொலிடிகல் ஏஜண்டு மால்கம் துரைக்குத் தெரியப்படுத்தினார். அதன் மீது மால்கம் துரை, கவர்னர் ஜனரல் அவர்களுக்கு அச் செய்தியைத் தெரிவித்து, அத்துடன் கவர்னர் துரைக்கு விருப்பமான முறையில் "ஜான்ஸி யரசர் செய்த சுவீகாரம் தகுதியுடையதல்லவென்று பொருள் படும்படி எழுதி, கவர்னர் துரையவர்களின் உத்திரவு கிடைக்கும் வரையில் சுவீகார ஏற்பாட்டைத் தாங்கள் ஆதரிக்காமல் நாட்டைக் காப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருப்பதாகத் தந்திரமாகக் கடிதம் எழுதினார். மேலும் விரைவில் ஆங்கிலேயர்கள் ஜான்ஸி ராஜ்யத்தைத் தம் வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், துரைத்தனத்தார் ஜான்ஸி ராணிக்குப் பென்ஷன் கொடுத்து ஓரிடத்தில் வசிக்கச் செய்ய வேண்டுமென்றும் அக் கடிதத்தில் பிரிட்டிஷாரைத் தூண்டினார். ஆனால் ஜான்ஸியிலிருந்த எலிஸ் துரை ஜான்ஸி யரசர் செய்த ஏற்பாட்டை ஆதரித்து லக்ஷ்மீ பாயிக்கு அநுகூலமாகக் கவர்னர் ஜனரலவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். ஆயினும் இக் கடிதம் மால்கம் துரையால் பல நாட்கள் தம்மிடமே நிறுத்தி வைக்கப்பட்டது. அதனிடையில் ஜான்ஸி லக்ஷ்மீ பாய் அவர்களும் ஜான்ஸி ராஜ்யத்தின் வரலாறுகளை விவரித்து, பிரிட்டிஷாருக்கும் ஜான்ஸி யரசாங்கத்தாருக்கும் ஏற்பட்டுள்ள உடன்படிக்கைப்படிக்குத் தங் கணவர் செய்த புத்திர சுவீகாரம் சரியானதென்றும், பல காரணங்களைக் காட்டித் தங்கள் நட்புரிமையைப் பாராட்டியும் ஆங்கில துரைத்தனத்தார் காலஞ் சென்ற ஜான்ஸி அரசரின் கடைசி



வேண்டுகோளை ஆதரித்துத் தமக்கு உதவி புரிய வேண்டுமென்றும் ஒரு நீண்ட கடிதத்தைக் கவர்னர் ஜனரலுக்கு எழுதிக்கொண்டார். என்ன செய்து மென்ன? கடைசியில் அப்பொழுது கவர்னர் ஜனரலாயிருந்த 'டல் ஹௌஸி' துரையின் எண்ணம் வெளியாயிற்று. வழக்கம்போல் ஜான்ஸி ராஜ்யம் ஆங்கிலேயர் வசப்படுத்தப் பட்டது. இந்தியாவில் தங்கள் சாம்ராஜ்யத்தைப் பிரபலப் படுத்திய பிரிட்டிஷாரின் ராஜ நீதி இருந்தவாறு என்னே!

'ஜான்ஸி ராணி லக்ஷ்மீ பாயிக்கு மாதம் 5000 ரூபாய் பென்ஷன் கொடுப்பதென்றும், ராஜ மஹல் என்ற அரண்மனையை மாத்திரம் அவருக்கு வசிப்பதற்குக் கொடுப்பதென்றும்' உத்திரவிட்டுக் காலஞ் சென்ற அரசரது சொந்தச் சொத்துக்கள் சுவீகார புத்திரனுக்குச் சேர வேண்டுமென்ற நிபந்தனையின் மேல், ஜான்ஸிப் பொக்கிஷத்தினின்றும் ஆறு லட்சம் ரூபாயை வேறாக்கி, மைனர் சுவீகார புத்திரன் பெயரால் அவர் மேஜரான பின்னர் வட்டியுடன் கொடுப்பதென்று பிரிட்டிஷ் கஜானாவில் சேர்த்து வைத்தனர். அதிகாரிகளின் உத்திரவினால் லக்ஷ்மீ பாய் தமது சொந்தக் கோட்டையை விடுத்து நகரத்திலிருந்த அரண்மனையில் போய் வசிக்கலானார். ஆங்கிலேயர் ஜான்ஸி யரசரின் பழைய சேனைகளை யப்புறப்படுத்தி எங்கும் ஆங்கிலேய சேனைகளை நிறுத்தினர். பல வருஷங்களாகக் கோட்டையில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த யுத்த தளவாடங்கள் அனைத்தையும் உருமாய்த்தனர். பீஷ்வா காலத்தில் செய்யப்பட்டிருந்த பீரங்கிகள் பலவற்றையும் அழித்தனர். கோட்டையை ஆங்கில அதிகாரிகள் வசப்படுத்தித் தங்கள் கொடியைப் பறக்க விட்டனர். மேஜர் ஸ்கீன் என்பவர் ஜான்ஸிக்குக் கமிஷனராக நியமிக்கப்பட்டார். அவ்வாறு ஜான்ஸி இந்திய அரசாங்கம் வீழ்ச்சியுடைந்தது. ஜான்ஸி ராணி லக்ஷ்மீ பாயும் அரச போகங்கள் அனைத்தையும் ஒழித்து வைராக்கியத்தை மேற்கொண்டு, ஈச்வர பக்தியோடு, புராண சாஸ்திரங்களைப் படித்துக் கொண்டு தம் மாண்மனையிலேயே சாமானிய வாழ்க்கை நடத்தி வந்தார்.

## கலக முயற்சி

ஜான்ஸி ராஜ்யம் ஆங்கிலேயர் வசப்பட்டதன் பிறகு இரண்டு வருடங்கள் கழிந்தன. இந்தியாவில் பலவித தந்திரங்களாலும் ஆங்கில

அரசாட்சியைப் பெருக்கிய டல்ஹௌஸி என்ற கவர்னர் ஜனரல் இங்கிலாந்து சென்றார். அவர் செய்த சூழ்ச்சிகளைக் கண்ட இந்திய மக்களின் உள்ளத்தில் கோபத்தணல் கனன்றுகொண்டிருந்தது. 1856-ல் கானிங் பிரபு அவர்கள் இராஜப் பிரதிநிதியாக இந்தியாவுக்கு வந்தார். 1857-ம் ஆண்டு தொடங்கியது. சுதேச மன்னர்களிடத்தும், பொது மக்களிடத்தும் கனன்று கொண்டிருந்த தேசாபிமானத் தணல் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. அதற்குத் துணையாக ஆங்கிலேய அரசாங்கத்தின் கீழ் வேலை செய்து வந்த இந்தியச் சிப்பாய்களிடையில் ஒரு புகார் கிளம்பியது. அதாவது பசு, பன்றி ஆகிய இவ்விரண்டின் கொழுப்புகளைப் பூசிய தோட்டாக்களைச் சிப்பாய்களின் வாயாற் கடிக்கச் செய்தார்களாம். எனவே அவை யிரண்டும் முறையே இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் மத விரோதமானபடியால் இந்தியச் சிப்பாய்களினிடையில் ஆங்கிலேய அதிகாரிகளின் மீது வெறுப்பு வீறுகொண்டெழும்பியது. அதற்கேற்ப ஆங்கிலேயர்களால் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்ட சுதேச ராஜ்யங்களின் தலைவர்கள் பலரும் ஆங்கிலேயர்களை எதிர்த்துத் தமது நாடுகளைக் கைப்பற்ற வேண்டுமென்று கலக நெருப்பைத் தூண்டி விட்டுத் தக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந் நிலையில் வங்காள நாட்டில் பார்ஹம்பூரிலிருந்த பட்டாளமொன்று ஆங்கில அதிகாரிகளை எதிர்த்து வழி காட்டியது. அச் செய்திக் காட்டுத் தீயைப் போல் இந்தியா வெங்கும் பரவியது. கலகப் புகை மேன்மேலும் வளர்ந்து டில்லி, கான்பூர், மீரட், காசி, அலகாபாத் முதலிய விடங்களில் பற்றி எரிய ஆரம்பித்தது. எங்கும் கலகம் மூண்டுவிட்டது. இதுவே "1857-ம் ஆண்டின் இந்தியச் சிப்பாய்க் கலக" மென்று ஆங்கிலேய சரித்திரக்காரர்களாலும், "இந்தியாவின் சுதந்தர யுத்தம்" என்று விநாயக சவர்க்கார் முதலிய இந்தியத் தேசாபிமானிகளாலும் அழைக்கப்படுவதாகும், அவ்வாறு நாட்டில் கலகம் ஆரம்பித்தவுடனே, ஏற்கெனவே டில்லியில் சிங்காதனத்தை இழந்து நின்ற பாதுஷா அவர்கள் மீண்டும் டில்லியைக் கைப்பற்றிச் சிங்காதனமேறினார். அதுவரையில் ஆங்கிலேயர்களால் தத்தம் நாடுகளை இழந்து வாடி நின்ற நானா சாஹிபு, அயோத்தி நவாபு முதலிய தேச மன்னர்



கள் பலரும் அச் சுதந்தர யுத்தத்தில் கலந்து கொண்டனர். லக்னோ, பிரோஜ்பூர், மூராதாபாத் முதலிய பல ஊர்களிலும் கலகம் தொடங்கியது. அக் கலகச் செய்தி நமது ஜான்ஸி நாட்டுக்கும் எட்டியது. அப்பொழுது அங்கு வங்காளத்திய 12-வது தேசீயக் காலாட் படையும், 14-வது குதிரைப் பட்டாளமும், ஒரு மெஷின் பீரங்கிச் சாலையும் காப்டன் டன்லப் துரையின் தலைமையிலிருந்தன. அங்கே கலகம் நிகழக்கூடுமென்று ஆங்கிலேய அதிகாரிகள் எதிர்பாராத நிலையில் ஜூன்மீ 4வ கலக நெருப்புப் பற்றிக்கொண்டது. 7-வது பட்டாளத்தைச் சேர்ந்த குருபகக்ஷ் என்ற ஹவுல்தார் ஒருவர் சில சிப்பாய்களின் துணை கொண்டு கோட்டையிற் புகுந்து யுத்த சாலையிலிருந்த துப்பாக்கிகள், பீரங்கிகள், மருந்து குண்டு முதலிய யுத்தாயுதங்கள் அனைத்தையும் கைப்பற்றிக் கொண்டு கலகக் கொடியைப் பறக்க விட்டார். அதைக் கேள்வியுற்ற டன்லப் துரை மீதியான சேனையைக் கொண்டு கலகக்காரர்களை யடக்க முயன்றார். ஆயினும் யுத்த தளவாடங்களும், கோட்டையிலிருந்த பொக்கிஷமும் அதற்கு முன்னமே கலகக்காரர்களின் வசமாய் விட்டன. மேலும் ஆங்காங்கே காவல் காத்து நின்ற சிப்பாய்களும் கலகக்காரருடன் கலந்து விட்டனர். அப் பயங்கரக் காட்சியைக் கண்ட ஆங்கிலேயர்கள் யாவரும் கமிஷனரின் உத்திரவுப்படி டேராக்களை விட்டு நகரத்திற்குள் சென்றனர். பிறகு அதையும் விட்டுக் குழந்தைக் குட்டிகளுடன் உயிருக்குப் பயந்து கோட்டைக்குள் ஓடி மறைந்தனர். மறு நாள் காப்டன் ஸ்கீன், காப்டன் கார்டன் துரைகள் டன்லப் துரையுடன் கலந்து, பேசிக் கோட்டைக்குள் போய்ச் சேர்ந்தனர். பிறகு 'டன்லப்' துரை 'டைலர்' என்ற மற்றொரு அதிகாரியோடு கூடி மிலிட்டரி கவாத்துச் செய்யுமிடத்துக்குச் சென்றார். அவர்கள் அங்கு சென்றவுடனே 12-வது பட்டாளத்தைச் சேர்ந்த சிப்பாய்கள் அவ் விரு துரைகளையும் சுட்டு வீழ்த்தினர். அவ்வாறு ஜான்ஸியின் ஆங்கிலச் சேனைத் தலைவர் வீழ்ந்து பட்டவுடனே சிப்பாய்கள் மற்றுஞ் சில ஆங்கிலேயர்களை மாய்த்தனர். மீதியான ஆங்கிலேய அதிகாரிகள் அனைவரும் உயிருக்குப் பயந்து கோட்டைக்குள் சென்று கோட்டைக் கதவை மூடிக் கொண்டனர். கலகக்காரர்கள் ஜான்ஸி நகரத்திற்குள்ளிருந்த ஆங்கிலேயர்களின் வீடுகளை யழிக்கவோடு கோட்டையைத் தாக்கவும் முற்

பட்டனர். அந் நிலையில் கலகக்காரர்களின் பலம் அதிகமென்பதை யுணர்ந்த ஆங்கிலேயர்கள் அச் சமயத்தில் தமக்கு உதவி செய்ய வேண்டுமாய் ஜான்ஸி ராணி லக்ஷ்மீ பாயைக் கேட்டுக் கொள்ளுவதற்காக இரண்டு ஆங்கிலேய துரைகளைக் கோட்டையினின்றும் ராஜ மகலுக்கு அனுப்பினர். ஆயினும் அவர்கள் வழியில் கலகக்காரர்களால் கொல்லப்பட்டனர். கோட்டையின் முற்றுகைப் பலப்பட்டுக் கடைசியில் ரகசிய வழியில் கலகக்காரர்கள் கோட்டைக்குள் புகுந்தனர். கார்டன் துரை வெகு தைரியத்தோடு ஆங்கிலேயர்களை ஊக்கி அவர்களை எதிர்க்கச் செய்ததோடு, தாம் ஒரு கட்டிடத்தில் மறைந்து நின்று ஒரு சாளரத்தின் வழியே கலகக்காரர்களைச் சுட்டு வீழ்த்திக் கொண்டிருந்தார். ஆயினும் கலகக்காரர்களில் ஒருவன் கார்டன் துரையைக் குறி பார்த்துச் சுட்டுக் கீழ் வீழ்த்தினான். உடனே கோட்டைக்குள் கலவரம் அதிகமடைந்தது. கலகக்காரர்களின் தலைவர்களில் ஒருவராகிய "அஹமத் உசேன்" என்பவர் கோட்டையின் பெரும் பாகத்தைக் கைப்பற்றி விட்டார். அச் சமயத்தில் ஆங்கிலேயர்கள் சகாயமற்றவர்களாகி ராஜி பேச வாரம்பித்தனர். ஜூன்மீ 7உ காலையில் அஹமத் உசேன் கோட்டையை யணுகித் தமது பிரதிநிதியாகச் "சுலே மஹம்மது" என்பவரை யனுப்பவே, ஸ்கீன் துரை கோட்டைக் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து தங்களுக்கு யாதொரு துன்பமும் செய்யாமல் "சாகர்" என்ற இடத்திற்குத் தங்களைப் போகவிட வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். அதற்கு அச் சுலே மஹம்மது யுத்தாயுதங்கள் அனைத்தையும் அப்படியே விட்டுக் கோட்டையைக் காலி செய்து வெளி வருவதாயின் தாங்கள் அவர்களை ஒன்றும் செய்யாமல் போக விடுவதாக நம்பக் கூறினார். அவ்வார்த்தையை நம்பிய ஆங்கிலேயர்கள் அனைவரும் அவ்வாறே நிராயுத பாணிகளாகக் கோட்டையை விட்டு வெளிப்பட்டவுடனே கலகக்காரர்கள் தங்கள் வாக்குறுதியை மீறி அவர்களனைவரையும் கைதி செய்து, நகரத்தில் ஊர்வலமாகக் கொணர்ந்ததோடமையாது, வீண் புரளியை நம்பி அவ்வனைவரையும் சுட்டுக் கொன்றுப் பெரும் பாதகம் விளைத்தனர்.

அவ்வாறு ஜான்ஸி ராஜ்யத்தில் ஆரம்பத்தில் கலக நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருக்கையில் நமது ஜான்ஸி ராணி லக்ஷ்மீபாய்



அவர்கள் ஆங்கிலேய அதிகாரிகளுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்துகொண்டே யிருந்தார். காப்டன் கார்டன் துரையவர்கள் கலக ஆரம்பக் காலத்தில் இரு முறை ராஜ மகலுக்குச் சென்று லக்ஷ்மீ பாய் அவர்களைத் தமக்கு உதவி புரிய வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டார். லக்ஷ்மீ பாயும் தம்மாலியன்ற உதவி புரிவதாக வாக்குறுதி செய்தார். அதன் மேல் ஆங்கிலேயர்கள் தங்கள் பெண்களையும், குழந்தைகளையும் கலகக்காரர் கைகளிற் படாதவாறு லக்ஷ்மீபாயின் அரண்மனையில சின்னாள் ஒளிந்து வைத்திருந்ததோடு, அவர்களைக் காக்கவேண்டி ஆயுதம் தரித்த சில போர் வீரர்களை வைத்துக்கொள்ள லக்ஷ்மி பாயிக்கு அதிகாரமளித்தனர். பின்னர் மூண்ட பெருங் கலகத்தின்போது ஆங்கிலேய ஸ்திரீகள் முதலியோரை அதிகாரிகள் கோட்டைக்குள் அழைத்துக் கொண்ட பிறகும், லக்ஷ்மீ பாய் நாள் ஒன்றுக்கு மும்மூன்று மணங்கு கோதுமை ரொட்டிகளைச் சேகரித்து ரகசியமாகக் கோட்டைக்குள்ளிருந்த ஆங்கிலேயர்களுக்கு உதவியாகச் சின்னாள் அனுப்பி வந்தார். எனினும் கலகக்காரர்களால் ஆங்கிலேயர்கள் முழுதும் தோல்வி யடைந்தனர். ஜான்ஸிக் கோட்டைக் கலகக்காரர்களின் வசமாயிற்று. கலகக்காரர்கள் அத்துடன் அமையாது, கோட்டையை விட்டு நகரத்திற் புகுந்து லக்ஷ்மீ பாய் இருந்த ராஜ மஹலை முற்றுகையிட்டு, லக்ஷ்மீ பாயிக்குத் தாங்கள் டில்லிக்குப் போவதாயும், தங்கள் செலவுகளுக்காக மூன்று லட்சம் ரூபாய்கள் கொடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு கொடுக்கத் தவறினால் ராஜ மஹலை யழித்து விடுவதாயும் சொல்லி யனுப்பினர். அதைக் கேட்ட லக்ஷ்மீ பாய் "எனது ராஜ்யத்தை ஆங்கிலேயர் வசமாக்கிக் கொண்டனர்; என்னிடம் பொக்கிஷமில்லை; எனது ஜீவனமே கஷ்ட ஜீவனமாயிருக்கிற" தென்றும் பலவாறு சமாதானம் கூறியும், அவர்கள் விடாமல் லக்ஷ்மீ பாயை நிர்ப்பந்தப்படுத்திக் கடைசியில் அவரது ஆபரணங்களை அபகரித்துக்கொண்டு டில்லியை நோக்கிச் சென்றனர்.

உண்மை இவ்வாறு இருக்கையில் சில சரித்திரக்காரர்கள் ஜான்ஸி ராணி லக்ஷ்மீ பாயே இக் கலகத்திற்குக் காரணமென்றும், அவரே முன்னின்று அக் கொடுமைகள் அனைத்தையும் புரிந்தாரென்றும் பலவாறு தோன்றியவா றெல்லாம் எழுத முற்பட்டனர். ஆயினும் அவை

பணைத்தும் உண்மையற்ற பொய்யுரைகளென்பதற்குப் பல சான்றுகள் உள. ஜான்ஸியில் கலகக்காரர்களால் கொல்லப்பட்டவர்களில் தப்பிப் பிழைத்துச் சென்ற மார்டின் என்ற துரை 1889-வது ஆகஸ்டுமீ 10உயில் லக்ஷ்மீ பாயின் சுவீகாரப் புத்திரராகிய "தாமோதர ராவ்" அவர்களுக்கு எழுதியகடிதத்தில் "துரதிர்ஷ்டம் வாய்ந்த தங்கள் தாயாரின் விஷயத்தில் துரைத்தனத்தார் அக்கிரமமாக நடந்து கொண்டனர். அவ்வம்மையைப் பற்றிய உண்மைச் செய்திகள் எனக்குத் தெரிந்தபடி மற்றெவருக்கும் தெரியாது. 1857வது ஜூன் மாதத்தில் ஜான்ஸியில் நடைபெற்ற ஆங்கிலேயர்களின் கொலை நிகழ்ச்சியின் போது அவ்வம்மைக்கு அதிற் சிறிதும் சம்பந்தமில்லை. மேலும், ஆங்கிலேயர்கள் கோட்டைக்குள் சென்ற பிறகு இரண்டு நாட்கள் அவர்களுக்கு உணவும் அனுப்பினர். கூருதாவினின்றும் நூறு துப்பாக்கி வீரர்களை வரவழைத்து எங்கள் சகாயத்திற்காகக் கோட்டைக்குள் அனுப்பி வைத்தார். ஆயினும் அதிகாரிகள் அவர்களை ஒரு பகல் முழுதும் தம்மிடம் வைத்திருந்து இரவில் வெளியே அனுப்பி விட்டனர். அதன் பிறகு உடனே ததியாவுக்கு ஓடிச் சென்று அவ்வரசனது பாதுகாப்பிலிருக்க வேண்டுமென்று மேஜர் ஸ்கீன், காப்டன் கார்டன் துரைகளுக்குச் சொல்லி யனுப்பினர். ஆயினும் அவர்கள் அவ்வாறு செய்தாரல்லர். கடைசியில் போலீசார், சிறைச்சாலை யதிகாரிகள் முதலிய நம் சேனையர்களே அவர்களை யழித்தனர்" என்று எழுதியுள்ளார். இப்பொழுது இதுபோல் எத்தனை உண்மைகள் வெளிப்பட்டும் பயன் என்ன? அழிவு வேலை நடந்துவிட்டது.

## அராஜகமும் லக்ஷ்மீ பாயின் அரசாங்க ஸ்தாபனமும்

மேலே கூறியவாறு கலகக்காரர்கள் ஜான்ஸியில் ஆங்கிலேய அதிகாரத்தை யழித்துவிட்டு டில்லிக்குச் சென்றது முதல் ஜான்ஸி ராஜ்யத்தில் எவ்வித அரசாங்கமும் இல்லாமற் போயிற்று. எங்கே பார்த்தாலும் கலகக்காரர்களின் கிளர்ச்சி யதிகமாயிற்று. அந்நாட்டுப் பிரஜைகள் அரசாங்கமற்ற அராஜக நிலையில் நீதியும், சமாதானமும் கிடைக்கப் பெறாமல் தவிக்கலாயினர். அந்த நிலையில் நமது லக்ஷ்மீ பாய் அவர்கள் என்ன செய்ய வேண்டும்? உடனே லக்ஷ்மீ பாய் பண்



டித கோபால ராவ் லகாடே, அஹஸன் ஆலீ, ஜான்ஸிக் கமிஷனரின் சிரஸ்தேதார் முதலிய முக்கியமான ஆங்கில துரைத்தன உத்தியோகஸ்தர்கள் பலரையும் வரவழைத்துத் தேச நிலைமையையும், தங்கள் கடமையையும் பற்றி யோசித்தார். அவர்கள் அனைவரும் யோசித்து "அதுவரையில் சாகரில் கலக முயற்சிகள் ஒன்றும் தலைகாட்ட வில்லை; ஆகவே அவ்விடமிருக்கும் துரைத்தன அதிகாரிகளுக்கு ஜான்ஸியில் நடந்த சம்பவத்தை யறிவித்து எச்சரிக்கை செய்ய வேண்டுவதோடு, சாகரில் இருக்கும் கமிஷனரை ஜான்ஸி ராஜ்யத்தில் எவ்வித பாதுகாப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்பதைக் கேட்கவேண்டு"மெனத் தீர்மானித்தனர். அதன்படியே பண்டித கோபால ராவ் அவர்கள் சாகரிலிருந்த கமிஷனருக்குச் சகலமும் அறிவித்தார். அதனால் சாகரிலிருந்த கமிஷனர் அங்கு யாதொரு கலகமும் நிகழாதவாறு முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்து கொண்டதோடு, ஜான்ஸி ராஜ்யத்திற்கு ஆங்கிலேய அதிகாரி யொருவர் அனுப்பப்படும் வரையில் ஜான்ஸி ராஜ்யத்தின் முழு அதிகாரத்தையும் மஹா ராணி லக்ஷ்மீ பாய் அவர்கள் ஏற்று நிர்வகித்து வர வேண்டுமென வேண்டிக் கொண்டார்.

ஆயினும் ஏற்கெனவே ராஜ்யத்தை யிழந்து சாமானிய வாழ்க்கை நடத்தி வந்த லக்ஷ்மீ பாயினிடத்தில் ஆயுதங்களோ, வேண்டிய பொருளோ, அன்றிப் போதிய நம்பிக்கை வாய்ந்த துணைவர்களோ இல்லை. எனினும் பொது மக்கள் படும் அவஸ்தையைக் கண்டு சகிக்கலாற்றாது, சாகர் கமிஷனரின் விருப்பப்படியே தைரியத்தைக் கைக்கொண்டு ஜான்ஸி யரசாங்கத்தை மறுபடியும் ஸ்தாபிக்க முற்பட்டார். ஆங்காங்கே சிதறிக் கிடந்த தேசீய வீரர்களைச் சேர்த்துப் புதிய சேனையை யுண்டாக்கினார். தக்க பெரியோர்களை வரவழைத்து அரசியலதிகாரப் பதவிகளில் அமர்த்தி வேண்டிய பாதுகாப்புகளை ஏற்படுத்தினார். ஆங்கில துரைத்தனத்தாருக்கு அடிக்கடித் தாம் ஆங்கிலேயரின் விருப்பத்திற் கிணங்கியே தாற்காலிகமாக ஜான்ஸிக்குத் தலைமைப் பூண்டு அரசாங்கத்தை ஏற்படுத்தி வருவதாகக் கடிதங்களெழுதி வந்தார். ஆயினும் அவ் வுண்மையை ஆங்கிலேயர்கள் ஏற்றுக் கொள்

ளாமல் ஜான்ஸி ராணியையும் கலகக்காரர்களில் ஒருவராகக் கருதிப் பகைக்கவே செய்தனர்.

ஜான்ஸியில் ஆங்கில அரசாட்சி வீழ்ந்த வுடனே நாற்புற மிருந்தும் பல தலைவர்கள் தாம் தாமே ஜான்ஸி ராஜ்யத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று அதன் மீது படை யெடுத்து வந்தனர். சதாசிவ ராவ் என்ற மகாராஷ்டிர வீர னொருவன் தன் சேனையோடு 1857௵ ஜூன்௴ 13௳ ஜான்ஸிக்கு 30 மைல்கள் தூரத்திலிருந்த "கரூரா" என்ற கோட்டையைத் தாக்கி அங்கிருந்த ஆங்கிலேயர்களை வென்றுக் கோட்டையைக் கைப்பற்றித் தாமே ஜான்ஸி ராஜ்யத்திற்கு அரசனென்று விளம்பரம் செய்தான். அதைச் செவியுற்ற ஜான்ஸி மஹா ராணி லக்ஷ்மீ பாய் விரைவில் புதிய சேனையைத் திரட்டிக் கொண்டு கரூரா கோட்டையின் மீது படை யெடுத்துச் சென்றார். அதைக் கண்ட சதாசிவ ராவ் கோட்டையை விடுத்துச் சிந்தியா நாட்டுக்கு ஓடினான். பின்னர் மீண்டும் அவர் ஜான்ஸியின் மீது போருக்கு வந்து லக்ஷ்மீ பாயால் கைது செய்யப்பட்டான். அவ்வாறு ஆங்காங்கே ஜான்ஸி நாட்டின் மீது வந்த எதிரிகள் ஒவ்வொருவரையும் லக்ஷ்மீ பாய் எதிர்க்க வேண்டியதாயிற்று. அந் நிலையில் ஓர்ச்சா அரசனது திவானாகிய "நதேகான்" என்பவன் இருபதினாயிரம் வீரர்களைக் கொண்ட சேனையுடன் ஜான்ஸியின் மீது போருக்கு வந்தான். அச் சமயத்தில் லக்ஷ்மீ பாயினிடத்தில் சேனைகள் மிகக் குறைவாயிருந்தன. ஆகவே அச் செய்தியைப் பற்றி மத்திய பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து உதவி யனுப்புமாறு வேண்டிக் கொள்ளுவதற்காக, லக்ஷ்மீ பாய் ஓர் ஆளனுப்பினார். ஆயினும் அவன் நதேகானால் வழியில் பிடித்துக் கொள்ளப்பட்டான். எனவே வேறு துணை யின்றித் தம்முடைய சிறு சேனையைக் கொண்டுத் தாமே எதிரியை எதிர்க்க முனைந்தார். நதேகான் "ஜான்ஸி ராஜ்யத்தைத் தம் வசப்படுத்தி விடுமாறும், லக்ஷ்மீ பாயிக்கு ஆங்கிலேயர் செய்து வந்ததைப் போலவே வேண்டிய உதவிகளனைத்தையும் தாம் செய்து லக்ஷ்மீ பாயைக் காப்பதாகவும்" லக்ஷ்மீ பாயிக்குச் சொல்லி யனுப்பினான். அதைக் கேட்ட மஹா ராணி மனங் கொதிப்படைந்து கோபத்தனல் வீச வீராவேசத்துடன் தன் சேனைகளை உற்சாகப்படுத்திப் போருக்கு ஆயத்தம்



செய்ததுடன் "தான் ஆங்கிலேயரின் உத்திரவுப்படி ஜான்ஸி ராஜ்யத்தை ஒருவாறு நிலை நிறுத்தப் பாடுபட்டு வருவதாயும், வீணாக ஒரு பெண்பாலின் மீது படை யெடுத்து வருவது வீரர்களுக்கு அழகல்லவென்றும், உன்னுடைய பிடிவாதத்தை விடாமற் போவாயாயின் யான் உலகம் புகழ்ந்த பராக்கிரமசாலியாகிய சதாசிவ ராவ் பாவின் நாட்டுப் பெண் என்பதை உணருவாயாக" வென்று நதேகானுக்குச் சொல்லி யனுப்பினார். நதேகான் அதைச் செவியேற்காமல் போரை நடத்தினான். லக்ஷ்மீ பாயும் திவான் ஜவாஹர் சிங், திவான் திலீப் சிங், திவான் ரகுநாத சிங் முதலிய தமது கணவனாரின் பழைய சர்தார்கள் அனைவரையும் வரவழைத்துச் சேனையில் அமர்த்தியதோடு, ஜான்ஸியை யடுத்துள்ள ஜாகீர்தார்கள் பலரையும், ஜனத் தலைவர்களையும் வரவழைத்து ராஜ மகலில் ஒரு தர்பார் நடத்தி யுத்தத்திற்கு வேண்டிய உதவிகளைத் திரட்டினார். கோட்டைக் கட்டிடங்களைச் சீர் படுத்தினார். ஆங்கிலேயர்களால் அளிக்கப்பட்ட ஜான்ஸி நாட்டுப் பீரங்கிகளைப் புதுப்பித்துக் கோட்டைக் கோபுரங்களில் அமர்த்தினார். மருந்து, குண்டு முதலிய யுத்த தளவாடங்களைச் செய்யும் சாலைகள் ஏற்படுத்தினார். திவான் ஜவாஹர் சிங்குக்குக் கையில் யுத்தக் கங்கணத்தைக் கட்டி அவரைச் சேனாதிபதியாக நியமித்தார். லக்ஷ்மீ பாயும் போர் வீரனைப் போல் உடை தரித்து, தலைப்பாகை யணிந்து, பட்டாக் கத்தியை இடையிற் சொருகி, கழுத்தில் ஒரு முத்து மாலையை யணிந்து, கோட்டையின் முதன்மையான கோபுரத்தின் மீதேறி பீஷ்வா காலத்திய பழமையான ஜான்ஸி நாட்டுக் கொடியையும், ஆங்கிலேயரின் ஐக்கியக் கொடியையும் பறக்க விட்டார். உடனே ஜான்ஸி ராணியின் சேனைகளும், நதேகானின் சேனைகளும் சண்டைத் துவக்கின. கோட்டையினின்றும் பீரங்கிகள் குண்டுகளைப் பொழிந்தன. நதேகானின் சேனைகளும் வீரத்துடன் போர் புரிந்தன. அச் சண்டை வெகு பலமாக நடைபெற்றதன் பின்னர், ஈற்றில் லக்ஷ்மீ பாய் தம் சேனைகளின் முன்னணியில் நின்று ஊக்கிப் பெரும் போர் புரிந்ததன் பயனாய் நதேகான் அபஜெய முற்றுத் திரும்பிச் சென்றான். அவ்வாறு எதிரிகளை விரட்டி ஜான்ஸியைக் காத்த விஷயத்தைப் பற்றி ஹேமில்டன் துரையவர்களுக்கு லக்ஷ்மீ பாய் எழுதினார்.

---

குறிப்பு:—மற்ற பத்திராதிபர்கள் கவனிக்க வேண்டும். இதில் வெளிவந்திருக்கும் ஜான்ஸி மஹா ராணியின் சரித்திரத்தை நாம் ஒரு சிறு புஸ்தக ரூபமாக அச்சிடப் போகிறபடியால் எந்தப் பத்திரிகையிலும் இதை எடுத்து வெளியிடாதிருக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர், "பாரதி."

# இந்தியாவின் விடுதலை.

ஸ்ரீமான் ராமசுப்பிரமணிய நாவலர் அவர்கள்.



நமது இந்திய நாடு உலகிற்கே திலகமெனத் தக்க சிறப்புடையது. அளவிலும் நாகரீகத்திலும் தொழில் முறைகளிலும் இந்தியா பிற நாட்டாராலும் மதிக்கத் தகுந்த பெருமையோடு விளங்குகின்றது. ஐங்கண்டங்களாக உலகினைப் பிரிவு செய்திருப்பினும் பலர் இந்தியாவை ஓர் தனிப் ப்குதியெனக் கொள்ளுவதில் உடம்பாடு உடையவர்களாக இருக்கின்றனர். அத்தகைய நம் இந்தியா தேசம் முதன் முதற்கொண்டே உண்மையான நாகரீகத்திலும் ஒழுக்கத்திலும் பிற நாட்டாரைவிடச் சீரும் சிறப்பும் எய்தியுள்ளது. செல்வ நிலைமையை நோக்குமிடத்து, இன்று வறுமையடைந்து அல்லற் படுகிற இந்தியாவை ஏனை நாடுகளுக்கு உணவு அழித்து உயிர் காத்தது எனக் கூறலாம். ஆராயுங்கால் ஏனைய நாட்டார்களெல்லாம் முதன் முதல் நமது இந்தியாவில் குடியேறித் தம் வயிற்றை ஓம்பத் தலைப் பட்டனரென்பதும் இந்தியா அவர்க்கெல்லாம் பற்பல வழிகளில் உதவி புரிந்து வந்தது என்பதும் தெள்ளத் தெளிய விளங்கும். ஆனால் இந்திய நாட்டினரோ அக் காலத்துப் பிற தேசங்களை நம்பி வயிறோம்பவில்லை என்பதும் சரித்திர ஆராய்ச்சிக்காரர் ஐயமின்றி உடம்படத் தக்கதொன்றே. ஆகவே நமது நாட்டுக்கு நன்றி செலுத்தும் கடமை பிற நாட்டாருக்கு உண்டு என்பது மறுக்கத் தக்கதல்ல.

## தொன்மை

ஆராய்ச்சிக்காரர் முதன் முதல் மனிதன் தோன்றியது தமிழ் நாட்டில் என்பர். அத் தமிழ் நாடு நம் இந்திய நாட்டின் தென்



பகுதியாயுள்ளது என்பது உணர்ந்த பின்னர் அதன் தொன்மையைக் குறித்துப் பேச வேண்டுவதின்று. மனிதர் கூட்டம் முதன் முதல் காட்சியுற்றது நம் இந்தியாவே தான் என்பதற்கு வேறு உளவு வேண்டுவதுண்டோ? இந்தியாவில் வழங்கப்படும் பாஷைகளும் ஒழுக்க வழக்கங்களும் நாகரீகமும் கைத் தொழில்களும் அதன் தொன்மையை விளக்கிக்காட்டப் போதுமானவை. ஆனால், பாஷை முதலியவற்றைக் கொண்டு ஒரு நாட்டின் வெற்றியை அறிதற்கு மிக்க ஆராய்ச்சி அவசியமாகின்றது. ஒரு பாஷை மிகச் சிறந்து வழங்குவதற்கு அதன் தொன்மை ஓர் முக்கிய காரணமாகுமென்பதை அறிவுடையா ரெல்லாம் ஒப்புவர். வட மொழி தென் மொழி முதலிய அரிய பாஷைகளின் தொன்மையும் அவற்றின் வழக்கியல்புகளும் நன்றாக ஓர்ந்து உணரப்படுமாயின் அவை இலங்கும் நமது இந்திய நாட்டின் தொன்மை இனிது விளங்கும். பிற நாட்டுப் பாஷைகளின் தன்மையையும் ஒழுங்கையும் ஆய்ந்து அவற்றை நம் நாட்டுப் பாஷைகளோடு ஒப்பு நோக்குவா ருளரேல் அவர்க்கு நம் நாட்டின் தொன்மையைக் குறித்து இனிது அறிந்து கொள்ளுதல் இயலும்.

## நம் நாட்டின் பண்டைய நிலைமை

நம் இந்திய நாடு முதன் முதல் உலகில் தோன்றிய மனிதர்க்குப் பிறப்பிடமா யிருந்தமையால், அக்காலத்து யாதொரு துன்பமின்றி மிக்க உரிமையுடன் விளங்கியது என்பதற்கு ஐயமில்லை. வேறு நாட்டார் அரும்பி அவர் தம் தூல வலிமையை வெளிக் காட்டத் தொடங்கிய நாளிலும், நமது நாடு வன்மையும் வண்மையும் பொருந்திய பேரரசர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தது. நாட் செல்லச் செல்ல விலங்கியல் வாழ்க்கையால் தம் தூல வலியை மிகுதிப் படுத்தி நடுவு நிலைமையினின்றும் பிறழ்ச்சி யுற்ற பலராலும் நமது நாடு துன்பத்தை எய்தலாயிற்று. வேறு நாட்டார் படையெடுப்பும் படைவெட்டும் பெருங் கோலங்கொண்டு நம் நாட்டைத் துன்புறுத்தலாயின. அவாவும் ஆக்கிரமும் வேற்று நாட்டாரிடத்து மிகவே அவை காரணமாக அவர்கள் நம் இந்தியாவைச் சிறுகச் சிறுகத் தம்

தந்திர நெறிகளால் சுரண்டத் தொடங்கினார்கள். பிறர் உதவியை விரும்ப வேண்டாத நம் நாடு பிறர்க்கு உதவி செய்யப் போய்த் தன் ஆற்றலையும் போற்றலையும் கைவிட்டு வறிதாயிற்று. செல்வமும் வண்மையும் உடைய எவர்க்கும் பிறரால் துன்ப முண்டாவது இயல்பாதல் போல, செல்வ மிக்க நமது இந்தியாவுக்கும் வேற்று நாட்டாரால் அடிக்கடி துன்பம் தோன்றலாயிற்று.

## செல்வ நிலைமை

வறுமையுற்ற நாட்டை எவரும் விரும்புவதில்லை. நம நாடு செல்வத்தில் மற்றெல்லா நாடுகளிலும் சிறந்து விளங்கி யிருந்தமையால் பிற நாட்டாரெல்லாம் நம் நாடு என்னும் கன்னியைக் காதலிக்கத் தொடங்கினார்கள். சிலர் அக் கன்னிகையின் சிறந்த அணிகலன்களைக் களவாடிச் சென்று தம் வாழ் நாளை இனிது செலுத்தலாயினர். சிலர் அவளுடைய வேற்று உடைமைகளை அடைந்தனர். சிலர் அவளையே அனுபவிக்கலாயினர். சிலர் இன்னும் வேட்கையுற்று வெள்கிய மனத்தினராய் உயிர் சுமந்திருக்கின்றார்கள். இப் பான்மைகளெல்லாம் நம் நாட்டின் செல்வ நிலைமை ஒன்றை மட்டும் சிறப்பாகக் கருதித் தோன்றியனவாகும். நீர் வளம் நிலவளம் முதலியவற்றிலும் நம் நாடு மிக்க சிறப்புடையதாய் இலங்குகின்றது. உலகத்தின் பொக்கிஷசாலை என்று சொல்லத் தகுந்த மாண்பு நமது இந்தியாவுக்கு உள்ளது என்பதைத் தற்காலத்தும் யாரும் மறுக்கத் துணியார். அச் செல்வத்திற் பெரும் பான்மையும் கொள்ளை யடிக்கப் பட்டதாயினும் எஞ்சிய சில பகுதிகளையும் தம் வாயிலிட்டுச் செல்வதற்கே சிலர் தற்போதும் மானம் கெட்டு அதைப்பற்றி விடாப் பற்றுக்கோடாய்க் கொண்டுள்ளார்கள் போலும்! அவர்கள் எவ்வெந் நெறிகளெல்லாம் செல்வத்தைக் கொள்ளை கொள்ளினும் நம் நாடு வேற்று நாடுகளிடத்துப் பிச்சை ஏற்கத் துணியாது என்பது மட்டும் உறுதியாகும். ஏனெனில், உலக முற்றையும் ஊட்டி வளர்த்த நம் நாடு தன்னைப் போற்றும் ஆற்றலின்றி ஒழியாது.



## கைத் தொழில்

ஒவ்வொருவரும் இனிது வாழ்க்கை நடாத்துவதற்குரிய இன்றியமையாத கைத் தொழில்களெல்லாம் நம் நாட்டில் முற்காலத்து மிளிர்ந்திருந்தன. தற்போது அவற்றுட் பெரும்பான்மையும் ஒழித்தன வாயினும் சில சிறந்த கைத் தொழில்கள் வேற்று நாட்டினரும் உவகை கொள்ளத் தக்கனவாயுள்ளன. இந் நாளில் வேற்று நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டனவும் படுகின்றனவுமாய தொழின் முறைமைகளெல்லாம் வாழ்க்கைக்கு இன்றியமையா தனவா யில்லாதனவும் மனித சமூகத்தை மேன்மேலும் வறுமைக்கு இட்டுச் செல்வனவுமாம். நம் நாட்டுக் கைத் தொழில்கள் எல்லாம் மிகவும் இன்றியமையாதனவும் செல்வத்தைச் செய்வனவுமாம். வாழ்க்கை இன்பத்துக்கு உரிய சித்திரக்கலை, சிற்பம் முதலியனவும் வாழ்க்கைக்கு ஓராற்றால் மிகவும் இன்றியமையாதனவாகவே இருந்து வந்தன. அவை மக்கட்குப் பொருள் நஷ்டம் உண்டாவதற்கு ஏதுவில்லாதிருந்தது. தற்காலத்துப் பிற நாட்டாரால் கண்டுபிடிக்கப்பட்ட பற்பல தொழின் முறைகளும் நம் நாட்டில் பரவி நம் நாட்டுப் பண்டைய தொழில்களை மறையும்படி செய்து விட்டன.

## அரசியல்

குடிகளுக்குத் துன்பம் தோன்றாவாறு பாதுகாப்பதற்கே அரசாட்சி அகத்தியமாம். குடிகளின் நன்மையைக் கோராதது அரசாட்சி அன்று. அத்தகைய அரசாட்சியைக் கையாளும் அரசன் குடிகளுக்குப் பயன்படாமையால் குடிகளில்லாத நாட்டையே அவன் ஆளுந் தகுதியுடையவனாவன். நம் இந்திய நாடு அறநெறியில் நின்றும் பிறழாது இருத்தற் பொருட்டும் வேற்று நாட்டாரது வீண் புரட்சி இயக்கம் நிலையாது இருத்தற் பொருட்டும் அரசாட்சி வேண்டப்படுவதாயிற்று. எந் நாட்டுக்கும் அரசாட்சி இன்றியமையாததாகும். இந்திய நாட்டரசாட்சி முற்காலத்து அறனொடு தழுவி அறநெறியைப் பாதுகாக்கும் பான்மையில் அமைந்திருந்தது. அறநெறியைப் பாதுகாக்கும் அரசன் தானும் அறநெறி

அறிந்து ஒழுகு மியல்புடையவனா யிருத்தல் வேண்டுமாகலின் அத்தகைய அரசர்களே முற்காலத்து நம் இந்திய நாட்டை அரசாண்டு வந்தனர். ஒவ்வோர் நாட்டரசனும் அற நெறியை ஓம்பி வாழ்வானாயின் பிற நாடுகளுக்கும் தன்னாட்டுக்கும் யாதோர் துன்பமும் உண்டாகாது. நாளடைவில் பிற நாட்டார் அறநெறி மறந்து செல்வத்தின் கண் வேட்கையும் செருக்குங் கொண்டு நம் இந்திய நாட்டிற் புகுந்து அதை வாட்டி அதன் சுதந்திரத்தைப் பறிக்கலாயினர். அவ்வாறாகவே, நம் இந்திய நாடு தனது ஒப்பற்ற சுதந்திரத்தை இழந்து வரலாயிற்று. இந் நாளில் அதன், சுதந்திரம் முற்றும் பறிக்கப்பட்டுப் போயிற்று. எனவே, இதுபோழ்து இந்திய நாட்டார் கடமை, இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்கு முயற்சிப்பதே ஆகும்.

## சுதந்திர வேட்கை

உலகில் தோன்றிய ஒவ்வொருவரும் தத்தம் சுதந்திரத்தைப் பாதுகாத்து ஒழுகுதலும் அது பறிக்கப்பட்டால் அதை மீண்டும் பெற முயற்சிப்பதும் இயல்பாகும். அவ் வியல்பு வேட்கையைத் தடை செய்வது மக்களியல்பு என்று ஒருபோதும் எண்ணப்படாது. இழந்த சுதந்திரத்தைப் பெற முயற்சிப்பதற்கு இரு வழிகள் கடைப்பிடிக்கப் படலாம். அவற்றுள் ஒன்று அற நெறி, மற்றொன்று மற நெறி. இவை இரண்டனுள் மற நெறி மறமுடையார் மாட்டுச் செலுத்தப்படல் அறமேயாயினும், எவ்வாற்றானும் தலை சிறந்தது அற நெறியே யாகலான், இதுவே கடைப் பிடிக்கற் பாலதாகும். சுதந்திரத்தைப் பெறுவதும் அறத்தை நிலை நிறுத்தி வாழ்தற் பொருட்டாகையால் அதன் பொருட்டு மற நெறியைக் கையாடல் சிறந்த முறைமையன்று என்பது பொருத்தமுடைத்தே யாகும். மற நெறியால் கைக்கொள்ளப்படும் சுதந்திரம் மீண்டும் பிறரால் மற நெறியால் பறிக்கப்படுமென்னும் அச்சத்திற் குரித்தாயிருக்குமாகலான், நமது நாட்டுக்கு உரிய சுதந்திரத்தை ஒவ்வொருவரும் அற நெறியால் பெற முயற்சித்தல் வேண்டும். மறமும் ஓர் ஆற்றல் அறத்தின் பொருட்டாகக் கருதப்படுதலானும் இறுதியில்



அற நெறியே வெற்றி பெறுதலானும் அவ் வற நெறியைத் தானே முதன் முதற் கைக்கோடல் சீரிதாகும்.

## தனியரசும் குடியரசும்

ஒரு நாடு தனியரசு குடியரசு என்னும் இரண்டனுள் ஒன்றை உடையதாயிருக்க வேண்டும். இன்றேல், குடிகள் தம்முள் பலாற்காரம் புரியப்பட்டுப் பற்பல துன்பங்கள் உண்டாம். ஏதேனும் ஓராட்சிக்கு அடங்கியிராது எல்லாரும் தத்தம் மனப்பான்மைக்கியைய வொழுகின் ஒருவர்க்கொருவர் தலைமை யவாவப்பட்டுத் துன்பங்கட்கு இடனாம். எவ்வரசேனும் குடிகளுடைய பாதுகாப்பின் பொருட்டு நிகழவேண்டி யிருப்பதால், தலையோங்கும் அரசியல் அங்ஙனமில்லாவிடின் மாற்றப்பட வேண்டியதே என்னலாம். தனியரசு குடிகளுக்கு எல்லா நன்மைகளையும் பயக்குமாயின் அதை யொழித்துக் குடியரசை நிறுவ வேண்டிய அவசிய மின்று. குடியரசு நிகழின் குடிகளுடைய விருப்பங்கள் நிறைவேறுவதில் தவக்கம் இராது.

## தற்போதைய அரசியல்

தற்போது இந்தியா தனியரசின் கீழ்ச் சிக்கி இருக்கின்றது. குடிகளுடைய பல நன்மைகளிலும் அரசாங்கம் கருத்துச் செலுத்துவதாய்க் கூறப்படினும் இந்திய நாட்டுக் குடிகளின் உயிர்ச் சுதந்திரங்கள் தக்க தக்க விடம் நோக்கிப் பிடுங்கப்படுகின்றன. ஆதலால், தற்போதைய நாகரீக காலத்தும் இந்தியக் குடி மக்கள் பேரல்லல்களில் உழல வேண்டியதா யிருக்கின்றது. எனவே, இந்தியாவின் அரசியல் மாற்றப்பட வேண்டிய அவசியம் எட்டி யிருக்கின்றது என்பது கூறாமலே விளங்கும். ஒன்று தற்காலத்து அரசாங்கம் கௌரவமாய் இந்திய நாட்டுக் குடிகளுக்குத் தனது ஆட்சியை விட்டுக் கொடுக்க வேண்டும்; அல்லது இந்தியக் குடிகள் அரசாங்கத்தினின்றும் ஆட்சியை அற நெறியால் முயன்று கைக்கொள்ளுதல் வேண்டும்.

# இந்தியாவின் ஏக்கம்.

ஜனாப் K. அப்துல்சுகூர் சாகிப் அவர்கள்.

(எக்காலக் கண்ணி)

சீரார்ந்த செல்வமெலாஞ் செம்மையுற வேபொலிந்து
பாரார்ந்து நல்லோர் பலன்பெறுவ தெக்காலம். 1.
பல்வளமும் பெற்றுப் பரந்ததமிழ் நன்னாட்டின்
நல்வளங்க ளோடுயர்வை நாங்காண்ப தெக்காலம். 2.
உம்பர் பராவுபுக ழோங்கு செழுந்தமிழே
பம்பி யினிமை பரப்புவது மெக்காலம். 3.

---

## நமது கடமை

ஆதலால் இதுபோழ்து நாம் செய்ய வேண்டியதாயுள்ள கடமை தேசாபிமானத்தை மேற்கொண்டு அறநெறி நின்று நம்நாட்டு ஆட்சியைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதே. அதன்பொருட்டு ஒவ்வொரு இந்தியனும் தன் தன் வாழ்க்கைக்கு இன்றியமையாத கடமைகளில் ஒன்றாக எண்ணி நாட்டுக்காக அறப் போராடல் வேண்டும். கட்சிப் பிரிவு பிரிவிற் பிளவு முதலியன தோன்றினும் ஒவ்வோர் கட்சியினரும் இந்திய நாடு விடுதலை எய்த வேண்டுமென்னும் நோக்கத்தையே மேற்கொண்டு உழைத்தல் வேண்டும். அவ்வாறு உழைக்குங்கால், சட்சிப் பிரிவுகள் தோன்றினும் அவை இந்தியாவுக்கு நன்மை பயப்பதாகவே இலங்கும். கட்சிப் பிளவுகள் ஏற்படினும் உட்பிளவை எழாதபடி ஒவ்வொருவரும் நன்கு முயற்சித்தல் அகத்தியமாகும். நமது நாட்டின் நலத்தைப் பேணி உழைக்கும் உழைப்பே நமது கடமைகளில் தலைசிறந்தது என்பதை ஒவ்வொருவரும் உணரல் வேண்டும்.



மக்க ளடிமையெனு மாறாத் துயர் நீக்கித்
தக்க கலைபெற்றுத் தழைப்பதினி யெக்காலம். 4.
எழிலார்ந்த நன்னாட்டி னேற்றமிக வேகைத்
தொழிலார்ந்து சோம்பல் துணிப்பதுவு மெக்காலம். 5.
பாட்டி னுணர்ச்சிபெற்றுப் பங்கயப்பெண் மேவுதிரு
நாட்டி னுணர்ச்சிதனை நாம்பெறுவ தெக்காலம். 6.
வேற்றுமையை விட்டொழித்தே விந்தைசெறி நன்னாட்டை
யேற்றித் துதித்தே யிடர்தொலைப்ப தெக்காலம். 7.
கோத்திரங்கள் பேசுங் கொடுந்தொழிலை நீக்கியுயர்
சாத்திரங்கை பெற்றுத் தழைப்பதினி யெக்காலம். 8.
அஞ்ஞான நீக்கி யருள்பாத நன்னாடு
மெஞ்ஞான வாரிதியில் மேவுவது மெக்காலம். 9.
பெண்மை யுயர்ந்து பிறங்கு கலையுணர்ந்து
திண்மை யுயர்ந்து செழிப்பதினி யெக்காலம். 10.
முந்தையோர் கொள்கையெனு மூடவழக் கங்களுறை
சிந்தையோர் நல்லுணர்வைச் சேகரிப்ப தெக்காலம். 11.
சாதிக் கொடுமைபல சாராது மக்கள் பன்னூ
லோதிக் கலையமுதை யுண்ணுவது மெக்காலம். 12.
கத்துகட லாற்சூழ்ந்த காசினிவாழ் மக்களெலா
மொத்தகுலச் சோதரரென் றோர்வதுவு மெக்காலம். 13.
வறுமை யெனும்புலியின் வாய்ப்பட்ட மக்களெலாஞ்
சிறுமை யுணர்ந்ததனைச் சேதிப்ப தெக்காலம். 14.
சுற்பார்ந்த சோதரிகள் காசினியிற் கல்விபெற்றுப்
பொற்பார்ந்த நல்லவையிற் போய்ப்பொலிவ தெக்காலம். 15.
பண்டையோர் நூலின் பழமொழிக ளென்னுங்கற்
கண்டைநே ரின்சுவையைக் காண்பதுவு மெக்காலம். 16.
கூர்த்தமதி கல்விபுகழ் கொண்டுவகைக் காக்கவந்த
ஆர்த்தகலைப் "பாரதி"யை ஆதரிப்ப தெக்காலம். 17.

# உப்பு வரி சத்தியாக்கிரகம்.

ரா. நாராயணசுவாமி, ஆசிரியர், "பாரதி."

## உப்பு

உப்பு மானிடர்களுக்கு அத்யாவசியமானது. அறுவகை உருசிகளில் உப்பே முதன்மை பெற்றிருக்கிறது. இந்தியா உஷ்ண நாடாயிருக்கிறபடியால், இதர நாட்டினர்களைக் காட்டிலும் இந்தியர்கள் அதிகமான உப்பை உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. இந்தியா ஏழைகள் பெருத்த தேசம். சில சில பணக்காரர்கள் உயர்ந்த உணவுகளை உட்கொண்ட போதிலும் இன்னும் அதிக ஆகாரத்தை அருந்தவே, அவர்கள் சுவைக்காகச் சிறிதளவு உப்பை உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் கஞ்சியின்றித் திண்டாடும் வறியவர்களோ தங்களது உருசியற்ற உணவை உட்கொள்வதற்காகவே உப்பை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். தனவந்தர்கள் தங்கள் வாழ்க்கையை ஒருக்கால் உப்பின்றி நடத்தினாலும் நடத்தலாமேயன்றி, ஏழைகள் உப்பின்றித் தங்களுடைய நாட்களைக் கடத்துவது மகா கஷ்டமானது.

சில விடங்களில் விவசாயத்திற்கும் சில கைத்தொழில்களுக்கும் உப்பு அவசியமாகத் தேவையிருக்கிறது. ஆடு மாடுகளுக்கும் சிறிய அளவில் உப்பு வேண்டியிருக்கிறது. மீன்களைப் பக்குவப்படுத்தும் தொழிலுக்கும் உப்பு அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறது. "இந்தியாவில் கணக்கற்ற கால்நடைகளின் மரணத்திற்குக் காரணம் போதிய உப்பின்மையே என்று நம்பவேண்டியதிருக்கிறது" என்று லார்டு லாரென்ஸ் என்பவர் கூறுகிறார்.

## உப்புக் கிடைக்குமிடங்கள்

உலகத்தில் முக்கால் பாகம் நீர் மயமே. சமுத்திர ஜலத்திலோ உப்பு நிறைந்திருக்கிறது. அநேக இடங்களில் உப்புத் தானாகவே



உண்டாகிறது. அதைச் சேகரிப்பதே மனிதருடைய வேலை. கடல் நீரைக் காய்ச்சுவதால் உப்புக் கிடைக்கின்றது. இன்னும் நமது இராஜதானியில் கடப்பை, கர்நூல், பல்லாரி முதலிய ஜில்லாக்களிலும் இந்தியாவில் ராஜபுத்தானம், பஞ்சாப், சிந்து வடமேற்கு மாகாணங்கள் முதலிய விடங்களிலும் பூமிகளிலும் ஏரிகளிலும் உப்பு ஊற்றுக்களிலும் மலைகளிலும் சுரங்கங்களிலும் உப்புக்கிடைக்கின்றது. இந்தியா இயற்கை வளமிகுந்த நாடு. மூன்று பக்கங்களிலும் இந்தியா கடலால் சூழப்பட்டிருக்கிறபடியால், இந்தியாவுக்கு நீண்ட கடற்கரை உண்டு. கடற்கரையின் நீளமோ கிட்டத்தட்ட 5 000 மைல். பல வழிகளில் உப்பை உண்டாக்கக் கூடிய நிலையில் இந்தியா இருக்கிறது.

## சுதேச உப்புத்தொழில் தடுக்கப்பட்டது

பண்டை இந்தியாவில் எந்த அரசராலும் உப்பு வரி விதிக்கப்படவில்லை. கிழக்கு இந்தியக் கம்பெனி (East India Company) இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர் இங்கு உப்பு வரி இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இத்தேசத்தில் ஆதிக்கம் அடைந்ததும் சுதேச அரசர்கள் அக்காலம் வரை உப்பின்மீது வரி விதித்து வருமானம் அடையாமல் விட்டுவிட்டதற்காக அரசு செலுத்துவதற்கே அவர்கள் தகுதியற்றவர்களென்று மிகவும் கேவலமாய்க் கம்பெனிக்காரர் நினைத்தார்கள். இந்த அரசர்கள் உப்பு வரியை ஏற்படுத்தி வசூல் செய்யாமலிருந்தது பெருங் கொலைக் குற்றத்திற்குச் சமானமென்றும் எண்ணினார்கள். கம்பெனிக்காரர்களுடைய அதிகாரம் அதிகப்பட்டபொழுது ஆதிக்கம் பெற்று உப்பு வரியை வசூலிக்கத் தொடங்கினார்கள். வங்காளத்தில் உப்புச் செய்யும் ஆதீனத்தைக் கிழக்கிந்தியக் கம்பெனிக்காரரே ஏற்றுக்கொண்டனர். உப்பு உற்பத்தி செய்யும் பாத்தியத்தை ஏலத்தில் குத்தகைக்கு விட்டுக் கம்பெனிக்குத் திரவியம் சேர்த்தார்கள்.

அதுவரையில் தங்கள் இஷ்டம்போல் உப்புச் சேகரித்துக்கொண்டோ, உப்புச் செய்துகொண்டோ இருந்த இந்தியர்களுக்கு உப்புக்கு வரி ஏற்பட்டு விட்டது. சென்னை, பம்பாய், பாஞ்சாலம், வடமேற்கு மாகாணங்கள் முதலிய பிரதேசங்களிலும் உப்பு உற்

198527

பத்தியைத் தடுத்துக் கம்பெனிக்கு ஆதாயம் தேடினார்கள். நியாய மற்ற இப்புது உப்பு வரியை எவ்வளவு அதிகமாய் வசூலிக்க முடியுமோ அவ்வளவையும் வசூலிக்க எல்லா வழிகளையும் அனுசரித்தார்கள்.

திருட்டுத்தனமாய் உப்புச் செய்வதைத் தடுக்கிறோமென்று கூறிக்கொண்டே சென்னை இராஜதானியிலும் இன்னும் இதர விடங்களிலும் இருந்த உப்பளங்களை மூடும்படி செய்து, அங்கு உப்பு உற்பத்தியை அழித்துவிட்டார்கள். பூமியின் மீதும், பூமியிலிருந்தும் மலைகளிலிருந்தும் கிடைக்கக்கூடிய உப்பை எவரும் எடுக்கக் கூடாதெனத் தடுத்துவிட்டார்கள்.

## உப்பு இறக்குமதி

இக் கம்பெனிக்காரர் இங்கு இவ்விதம் உப்புத் தொழிலைப் பல வழிகளில் அநியாயமாய் நாசஞ் செய்து விட்டபடியால், இந்தியாவிற்கு உப்பை அதிகமாக இறக்குமதி செய்யவேண்டி வந்தது. கம்பெனியார் வங்காளத்தில் மட்டும் உப்புச் செய்து வந்தார்கள். இறக்குமதி யாகும் உப்புடன் கம்பெனியார் போட்டி போட முடியவில்லை. 1737-ம் ௵ முதல் 1757-ம் ௵ வரையில் உப்பு வரி சரியாய் வசூலிக்கப் படாவிட்டாலும், 1793-ம் ௵ முதற்கொண்டு நன்றாய் வசூலிக்கப்பட்டுச் சர்க்காருக்கு நல்ல வருமானம் கிடைத்தது.

## பிரிட்டிஷ் இந்தியாவில் உப்பு இறக்குமதி

| ௵ | | | | மணங்கு |
|---|---|---|---|---|
| 1837 | ... | ... | ... | 7,21 112 |
| 1851 | ... | ... | ... | 17,27,908 |
| 1909 | ... | ... | ... | 1,39,56,544 |
| 1925 | ... | ... | ... | 1,72,39,544 |

கடவுளால் இந்திய மக்களுக்கு இயற்கையின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கும் உப்பிற்கு—இயற்கைப் பொருளுக்கு—ஏழைகளுக்கு இன்றியமையாததாய் வேண்டும் அற்பப் பொருளுக்கு அநியாய



மாய் வரிப் போடுவது எவ்வளவு கொடுமை! இங்கு இயற்கையிலே விளைந்து கொண்டிருக்கும் உப்பை எடுத்து உபயோகிக்க முடியாதபடி தடுத்து, அதையும் அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும்படி செய்வது எவ்வளவு கேவலம்! கம்பெனி உப்பளங்கள் மூடப்பட்டு விட்டபடியால், 1869-ம் ௵ல் அயல் நாடுகளிலிருந்து 100-க்கு 95 பங்கு உப்பு இறக்குமதி செய்யப்பட்டது. இப்பொழுதும் இந்தியர்கள் அயல் நாட்டு உப்பை எதிர் பார்க்க வேண்டிய நிலையிலேயே யிருக்கிறார்கள். பம்பாய் ஜனங்கள் கராச்சி அல்லது ஏடனிலிருந்தும் வங்காளம் பர்மா ஜனங்கள் இங்கிலாந்திலுள்ள லிவர்பூல் என்ற இடத்திலிருந்தும் உப்பை அடைகிறார்கள். 1927-28-ம் ௵ல் மட்டும் வங்காளமட்டும் ஒன்னரைக் கோடி ரூபாய் பெருமான உப்பை இறக்குமதி செய்ததாக ஒரு அறிக்கை கூறுகின்றது.

இப்பொழுது இந்தியா தனக்கு வேண்டிய உப்பில் 3ல் ஒரு பாகத்தை அயல் நாடுகளிலிருந்து வரவழைக்கிறது. இந் நாட்டில் உயர்வு பெற்றிருந்த உப்புத் தொழிலை வியாபாரம் செய்யும் பொருட்டு இங்குற்ற துராசை வர்த்தகக் கூட்டார் அழித்து விட்டதுமன்றி, வள மிகுந்த இத் தேசத்தாரை அந்நிய தேசங்களிலிருந்து உப்பை இறக்குமதி செய்யும்படி செய்து, நமது நாட்டுச் செல்வத்தை வடிகட்டி இந்தியாவை வறுமையால் தகிக்குமாறு செய்து அயல் நாட்டாரைக் கொழுக்கும்படி உபகரித்த கம்பெனிக் காரர்களின் உபகரிக்கும் சர்க்காரின் பெரு மோசத்தை எவ்வாறு விவரிப்பது!

## உப்பு வரி

உப்பு வரி ஒவ்வொரு மாகாணங்களிலும் வேறு வேறு விதமாக இருந்தது. 1856-ம் ௵ 82 பவுண்ட் கொண்ட ஒரு மணங்கு உப்பிற்கு வரி வங்காளத்தில் ரூ 2–8–0 ஆகவும் பஞ்சாப்பில் ரூ 2–0–0 ஆகவும் சென்னையில் 14 அணாவாகவும் பம்பாயில் 12 அணாவாகவுமிருந்து வந்தது. வரி வித்தியாசத்தை நீக்குகிறோமென்று சொல்லப்பட்டுக் கொண்டே 1878-ம் ௵ எல்லா மாகாணங்களிலும் மணங்கு 1-க்கு ரூ. 2—8—0 வரி போடப்பட்டது. வேற்று

வைத்தியர்கள் கூறிக்கொண்டிருக்க இந்தியாவில் 1906-ம் ௵ ஒவ்வொருவரும் சராசரி 11 பவுண்ட் உப்பை உபயோகப் படுத்தின தாக அறியப்படுகிறது.

## உப்பின் மூலம் வருமானம்

தற்சமயம் உப்புக்கு மணங்கு 1-க்கு ரூ. 1—4—0 ஆக வரி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஒரு மூட்டை உப்பை ஒரு அணா செலவில் உற்பத்தி செய்துவிடலாம். இப்பொழுது மூட்டை 1-க்கு விலை ரூ 4—8—0! உப்பு உற்பத்தியைச் சர்க்கார் தங்கள் ஆதீனத்தில் வைத்திருக்கிறார்கள். சர்க்கார்தான் உப்பு உற்பத்தி செய்யவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் காட்டும் இடத்தில் முதலாவது அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு சர்க்காரது பந்தோபஸ்தான மேற் பார்வையின் கீழ் உப்பு உண்டாக்க வேண்டும். உப்பு உற்பத்தியைக் கட்டுப்பாடு செய்து, காவல் கண் காணிப்பு முதலியவைகளுக்காக அதிகமாகச் செலவழித்துச் சர்க்கார் ஏகபோகமாய் உப்புச் செய்தோ, செய்ய அனுமதி கொடுத்தோ அதிகமான வரி விதிப்பதால் உப்பின் விலை அதிகமாக யிருக்கிறது. உப்பு உற்பத்தி விஷயத்தில் அனாவசியமாய்ச் செய்யும் பலவகைச் செலவுகளையெல்லாம் நாமே ஏற்றுக்கொண்டு, உப்பை வாங்கி உபயோகிக்கிறோம்.

உப்பு வரியின் மூலம் இந்தியா கவர்ன்மெண்டு இப்பொழுது ஆண்டுதோறும் 7 கோடி ரூபாய் வருமானம் அடைந்துகொண் டிருக்கிறது. உப்புக் கலந்த ஒவ்வொரு பிடி அன்னத்திற்கும் —குறைந்தது ஒரு மொடக்குக் கூழுக்கும் இந்தியன் வரி செலுத் திக்கொண் டிருக்கிறான். உப்பு வரியின்மூலம் எவ்வாறு இந்தியா வரி கொடுத்துக்கொண் டிருந்தது என்பதை அடியிற்கண்ட விவரத் திலிருந்து கவனியுங்கள்.

## உப்பின் மூலம் சர்க்காருக்கு வருமானம்

| ௵ | | | ரூ |
|---|---|---|---|
| 1907 | ... | .... | 4,60,86,670 |
| 1916 | ... | .... | 6,84 32,460 |
| 1924 | .... | ... | 10,01,50,870 |



## சென்னை இராஜதானி

சென்னை மாகாணத்தில் முக்கியமாய்க் கடல் நீரிலிருந்தே உப்புக் கிடைக்கிறது. கிழக்குக் கடற்கரை யோரமாகச் சுமார் 60 உப்பளங்கள் இருக்கின்றன. 1,10,00,000 மணங்கு அல்லது ஏறக்குறைய 4,00,000 டன் உப்பு நமது மாகாணத்தில் செலவா கிறது. அநேக இடங்களில் இயற்கையாய்ச் சூரிய வெப்பத்தால் உப்பு உண்டாகிறது. அவ்விடங்களிலெல்லாம் உப்பு உற்பத்தியை அழித்துவிட்டு, தானாகவே விளைந்து கிடக்கும் உப்பை எவரும் எடுத்துக் கொண்டுபோக முடியாதபடி தக்க விதமாய்ப் பந்தோ பஸ்து வைத்திருக்கிறார்கள். கடற்கரை யோரங்களி லிருக்கும் ஜனங்கள் தானாக உண்டாகும் உப்பின் விளைவைப் பார்த்துக் கொண்டே உப்புக்கு அதிக விலை கொடுத்து வாங்குவது எவ்வளவு அடிமைத்தனமான காட்சி!

## உப்பு உற்பத்தி

இந்தியாவில் ஏராளமாய் உப்புக் கிடைக்கிறது. 1921-ம் ௵ உலகத்தின் உப்பு உற்பத்தியின் மொத்தம் 1,70,00,000 டன். இதில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் 44,47,000 டன் உப்பு உற்பத்தி செய்து, உலகத்து உப்பு உற்பத்தி செய்யும் தேசங்களில் தலை சிறந்து விளங்கினது. இந்தியா 16,81,000 டன் உற்பத்தி செய்து உப்புச் செய்யும் தேசங்களில் 4-ஆவதாக விளங்கிற்று.

## 1921-ம் வருஷத்தில் உலகில் உப்பு உற்பத்தி *

| | தேசம். | அளவு டன் (மூன்று பூஜ்யங்கள் சேர்த்துக் கொள்ளவும்) | | 100-க்கு விகிதம். |
|---|---|---|---|---|
| 1. | அமெரிக்கா | 4,447 | ... | 26.0 |
| 2. | ஜெர்மனி | 2,158 | .... | 12.6 |
| 3. | சைனா | 2,042 | .... | 12.0 |
| 4. | இந்தியா | 1,681 | .... | 9 8 |

* Imperal Mineral Resources Bureau, Salt, London 1924.

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | ஐக்கிய ராஜ்யம் | 1,383 | ... | 8.1 |
| 6. | ருசியா | 968 | .... | 5.6 |
| 7. | பிரான்ஸ் | 751 | ... | 4.4 |
| 8. | ஜப்பான் | 506 | .... | 2.9 |
| 9. | இத்தலி | 505 | .... | 2.9 |
| 10. | ஸ்பெயின் | 505 | .... | 2.9 |
| 11. | மற்ற தேசங்கள் | 2,054 | ... | 12.0 |
| | | 17,000 | | 100 |

இந்த நிலையிலும் உலக உப்பு உற்பத்தியில் இந்தியா பின்னடைந்து விடவில்லை. தக்கபடி உப்பு உற்பத்திக்குச் சர்க்கார் ஆதரவு அளித்திருப்பின் உலகில் இந்தியா உப்பு உண்டாக்குவதில் முதலாவதாக விளங்கும். ஏற்றபடி உதவி செய்யாவிட்டாலும் சும்மாவிருந்தால் போதுமானது. இங்கு உப்புத் தொழிலை நாசம் செய்து, உப்புக்கு அதிக வரி ஏற்படுத்தி அயல் நாடுகளிலிருந்து உப்பை இந்தியா வாங்கும்படி செய்யும் சர்க்காரின் முறை எவ்வளவு பிற்போக்கானது!

## அநேக பாரமான வரிகளுக்குக் காரணம்

சைன்யம், போலீஸ், உயர்தர உத்தியோகம் முதலியவைகளுக்கும் வீண் ஆடம்பரங்களுக்கும் கணக்கற்று இந்திய சர்க்கார் செலவு செய்து கொண்டிருப்பதால், ஏழை இந்தியாவின் மீது பல விதக் கடும் வரிகள் போடப்பட்டிருக்கின்றன. இந்தியர்கள் அனுபவிக்கும் அற்பச் சௌகரியங்களுக்கும் வாங்கும் சில சாமான்களுக்கும் சர்க்கார் வரி விதித்து, அட்டை போன்று இந்தியர் இரத்தத்தை உரிஞ்சுகிறார்கள். நமது செல்வங்களெல்லாம் அநேக வழிகளில் அயல் நாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. இப்பொழுது உலகில் மற்ற தேசங்களெல்லாம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்க, இந்தியா பின்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறது. இந்திய மக்கள் தாங்க முடியாத வரிகளைக் கொடுத்து நைந்து வதங்கி மகா கேவலமான நிலை அடைந்துகொண்டிருக்கிறார்கள்.



## இந்தியாவின் தற்கால நிலை

நாம் சுவாசிக்கும் காற்றிற்கும் குடிக்கும் நீரிற்கும் சர்க்கார் வரிப் போட எப்படியோ மறந்து தவறிவிட்டார்கள். இப்படி எழுதுவதால் அவர்களுக்கு ஒருக்கால் ஞாபகம் வந்து காற்றிற்கும் தண்ணீருக்கும் வரிப் போட்டாலும் போடுவார்களோ வென்று சந்தேகப்பட வேண்டியதிருக்கிறது. இந்தியர்கள் வரிகளைக் கொடுத்துக் கொடுத்து ஏழ்மை அடைந்து விட்டார்களாகையால், இந்தியா ஐஸ்வர்யமெல்லாம வரண்டு இந்தியா வெங்கும் சகிக்க முடியாத வறுமை குடிகொண்டிருக்கிறது! இந்தியக் குடியானவர்களுக்கு மொத்தத்தில் ரூ 950 கோடி கடனிருக்கிறது. தேசத்தின் பெயரால் இந்தியாவுக்குப் பெருங் கடனிருக்கின்றது. நாட்டுக் கைத்தொழில்களெல்லாம் நாசமாக்கிவிட்டதால், தொழிலாளிகளெல்லாம் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். தேசியக் கல்வி அருகிப் போய்விட்டதால் இந்திய மக்கள் 100-க்கு 95 பேர்கள் அறியாமையென்னும் இருட்டில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். சுருங்கச் சொன்னால், இந்தியா தேசமே அடிமையாய் விட்டது போலவே இந்தியர்களுடைய மனமும் அடிமையாய்ப் போய்விட்டது. ஏகாதிபத்திய உத்தியோகஸ்தர்களுக் கெல்லாம் ஏதேஷ்டமாய் வாரி வாரி இறைக்கப்படுகிறது. இந்தியருடைய உரிமைகள் அனைத்தும் பிடுங்கப்பட்டிருக்கின்றன. இந் நிலையில் இத் தேசம் சில வருடங்களிருந்தால், மகா இழி நிலை அடைந்து விடுமென்பதற்குச் சந்தேகமில்லை.

## இப்பொழுது என்ன செய்வது?

இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் இவ்வளவு கேவலமான நிலையை இனி நாம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. இந்தியா விடுதலை அடைய வேண்டும்; இந்தியா சுயாதீனமடைய வேண்டும்; இந்தியா மேன்மை அடைய வேண்டும்; நம் நாடு சுதந்திர மடைய நாம் தீவிரமான வேலைகளைச் செய்ய வேண்டும்; மகாத்மா காந்தி அடிகள் ஆரம்பித்திருக்கும் அஹிம்ஸா முறையில் நாமனைவரும் ஒன்று அன்னியர் ஆதிக்கத்தை ஒழிக்க உடனே முன் வரல் வேண்டும்.

## இந்தியாவில் இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது?

அநியாய உப்பு வரியை எதிர்த்து நின்று நமது மாபெருந் தலைவர் மகாத்மா காந்தி அவர்கள் தனது கூட்டத்தாருடன் உப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள். நாடெங்கும் இந்த விஷயத்தில் உணர்ச்சி, காட்டுத் தீ மாதிரி பரவிக்கொண்டிருக்கிறது. தேசத்தின் நாலாபக்கங்களிலிருந்தும் இதற்குத் தொண்டர்கள் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். நமது தலைவர்களனைவரும் இதற்கு ஆதரவு கொடுத்து அவர்களும் உழைக்க முன் வந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் பல கோடி மக்கள் உப்புச் சட்டத்தை எதிர்க்கத் தயாராயிருக்கிறார்கள். இதனால் அடக்கு முறை நாடெங்கும் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. பல இடங்களில் உப்புச் சட்ட மறுப்பு ஆரம்பமாகி விட்டது. இது விஷயத்தைப் பற்றி உலகமே திகைத்து நின்று கவனித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் உப்புச் சட்டத்தை மீறி உப்புச் செய்வதற்காக ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரும் தொண்டர்களும் வேதாரண்யம் சென்றுகொண்டிருக்கிறார்கள். நியாயமற்ற இந்த உப்பு வரியை நாம் அழிக்க முன்வரல் வேண்டும். இதில் வெற்றி பெறும்படியாகவும் தீவிரமாகவும் தியாக புத்தியுடனும் வேலை செய்ய வேண்டும். ஜெயம் நம்முடையதே. இதில் சித்தி பெற்றவுடன் இந்தியாவிலிருக்கும் இம்மாதிரியான அநீத வரிகளையெல்லாம் மீறிச் சர்க்காருக்குப் புத்தி புகட்டி நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற உணர்ச்சி தேசத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது. இந்தியாவின் சுதந்திர தாகம் அதிகமாய்விட்டது. ஆகையால் நாட்டிற்கு விடுதலை கிடைத்தாலன்றி இந்த அஹிம்ஸா சுதந்திரப் போர் நிற்கப்போவதில்லை.

## வேண்டுகோள்

உலகில் எந் நாட்டிலுமில்லாத உப்பு வரியை நமது இந்தியாவின்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. அநியாயம் அநியாயம். இதைக்



குறைக்கும் பொருட்டு பொது ஜனங்கள் சுமார் 50 வருடங்களுக்கு மேலாகச் சர்க்காரைக் கெஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். இந்தியப் பிரஜைகளது இந்த அவசிய வேண்டுகோளை வேண்டுமென்றே சர்க்கார் உல்லங்கனம் செய்து வருவது சரியன்று. இந்திய சட்டசபையிலும் இதைக் குறைக்க வேண்டுமென்ற தீர்மானங்களையும் சர்க்கார் கவனிக்கவில்லை. ஏழைகளை நசுக்கி அதன் மூலமாய்க் கிடைக்கும் ஆதாயத்தால் ஆட்சி முறையை ஆடம்பரத்துடன் சர்க்கார் நடத்துவது சரியன்று.

நமது நாடு விடுதலை சீக்கிரத்தில் பெறவேண்டுமென்ற எண்ணங்கொண்டு உப்புச் சத்தியாக்கிரகப் போரில் இந்தியரனைவரும் சேர்ந்து உழைக்கச் சீக்கிரத்தில் ஓடிவரவேண்டிய காலம் வந்திருக்கிறது. தியாகத்தாலோ பணத்தாலோ செல்வாக்காலோ எழுத்தாலோ பேச்சாலோ தேக உழைப்பாலோ இனியும் வேறெவ்விதத்தாலோ சாத்விகச் சத்தியாக்கிரகத்தில் உதவுமாறு வேண்டுகிறோம். இது முதற்கொண்டு இந்தியாவின் சுதந்திரப் போர் சாத்விகத்தில் ஆரம்பமாகிவிட்டது. ஒவ்வொரு இந்தியரும் தனது தாய் நாட்டிற்காகத் தனது கடமையைச் செய்ய முன்வர வேண்டிய காலமும் இப்பொழுது வந்துவிட்டது. ஜாதி மத பேதங்களையும் கட்சி வித்தியாசங்களையும் எண்ணிக்கொண்டு இச் சமயத்தில் தேசத்தின் மீது அன்பு காட்டாது மௌனமாக விருப்பதுவும் தேசத் துரோகம் செய்வதுவும் பெரும் பாவமாகும்.

இந்திய மாதாவும் தனது அடிமைச் சங்கிலியை அறுத்தெறிந்து ஸ்வாதீனம் பெறுமாறு தனது அருமை மக்கள் ஒவ்வொருவரது சேவையையும் வேண்டி நின்று, தனது ஒவ்வொரு மக்களையும் கூவி அழைக்கிறாள். உடனே முன் வாருங்கள்! முன் வாருங்கள்!!

வந்தேமாதரம்.

வாக வியாக்யானம் செய்யும் கல்வி கற்றவர்களாகிய நீங்கள் மட்டும் வீண் விவாதங்களிலும் குதர்க்கங்களிலும் தலையிட்டுக் கொண்டிருப்பதின் மர்மம் விளங்கவில்லை. பழைய கதை மறையட்டும்! சென்றது செல்லட்டும்!! புத்துணர்வு பெற்றுப் புதிய மனிதர்களாய் வந்து நாட்டை விடுவிக்க வேலை செய்யுங்கள்.

## இந்திய வைத்தியப் பட்டங்கள்

இந்தியாவிலிருக்கும் சர்வ கலாசாலைகளால் கொடுக்கப் பெற்ற-கொடுக்கப்பெறும் வைத்தியப் பட்டங்களைப் பிரிட்டிஷ் வைத்திய சங்கம் (British Medical Council) ஒப்புக்கொள்ள மறுக்கிறதென்று அறிகிறோம். இந்தியாவின் சர்வ கலாசாலைப் பட்டங்களை உலகத்திலுள்ள அநேக சர்வ கலாசாலைகள் மதித்து ஒப்புக்கொள்ளும் பொழுது பிரிட்டிஷ் வைத்தியச் சங்கம் மட்டும் இந்திய வைத்தியப் பட்டங்களை உல்லங்கனம் செய்வது ஏனோ? பிரிட்டிஷ் பட்டங்களை மட்டும் அது ஏற்றுக் கொள்ளுகிறது. பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள வைத்திய கல்விச்சாலைகளில் அஸ்வினி தேவர்களோ அன்றிச் சித்தர்களோ வந்து கல்விப் புகட்டுகின்றார்கள்?

இந்தியா அடிமைப்பட்ட நாடாயிருப்பதால் இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஷ் வைத்தியச் சங்கம் இந்திய வைத்தியர்களையும் அடக்கி ஆள முயலுகின்றது. பிரிட்டன் தேசத்தில் வாசித்துத் தேர்ந்த பட்டதாரிகளுக்கே இந்திய வைத்திய இலாகாவில் உத்தியோகங்களை அதிகமாகக் கொடுத்து, ஆங்கிலர்களுக்கு அதிக ஆதரவு காட்டி இந்திய வைத்தியப் பட்டதாரிகளின் வயிற்றில் மண்ணைப் போட ஏற்பட்ட சூழ்ச்சியாகும் இது. ஏகாதிபத்திய உத்தியோக வருக்கத்தால் இந்தியாவை ஆண்டு கொண்டிருப்பதை ஞாபகப் படுத்துகிறோம். I1 dian Medical Service (I M S) என்ற ஏகாதிபத்திய வைத்தியர்கள் தான் உயர்ந்த வைத்தியர்களாம்! அந்த வைத்தியர்களும் வியாதிகளால் மரணமடையப் போகிறார்கள். இந்தியாவின் பண்டை நாசரீகம் எங்கே! தற்கால ஆங்கில நாகரீகம் எங்கே!!

பிரிட்டனுக்கு வெளியேயிருக்கும் வைத்தியர்களுடைய விஷயத்தைப் பற்றிக் கவனிக்கவோ அதிகாரம் செலுத்தவோ பிரிட்டிஷ் வைத்தியச் சங்கத்திற்கு உரிமையே கிடையாது. இந்தியாவில் எத்தனையோ சிறந்த இந்திய வைத்தியர்களிருக்கிறார்கள். அவர்களை ஆங்கிலர் எவ்வாறு மறந்து விட்டார்கள்? பிரிட்டிஷ் வைத்தியப் பட்டம் பெற்ற நமது இந்தியரனைவரும் பிரிட்டிஷ் வைத்தியச் சங்கத்திலிருந்து விலகி அதனைப் பகிஷ்கரிக்க வேண்டும். இதுவன்றி இந்தியா, பிரிட்டிஷ் மருந்துகளையும் பகிஷ்கரிக்க வேண்டும்.



நமது இந்தியச் சர்வ கலாசாலைகளின் வைத்தியப் பட்டதாரிகளை விழிக்கும்படி செய்த பிரிட்டிஷ் வைத்திய சங்கத்திற்கு எமது வந்தனங்கள்.

## பிரிட்டனுக்கு அமெரிக்காவின் அறிக்கை

இந்திய மக்கள் அடிமைப்பட்டு வாடுவதையும் அஹிம்சா வழியில் நின்று இந்தியாவிற்குச் சுதந்திரம் கேட்பதையும் கவனித்தறிந்து சில அமெரிக்கா அறிஞர்கள் இந்தியாவின் மீது அனுதாபங் கொண்டு காந்தி அடிகளைப் போற்றி இந்தியர் கேட்பதைக் கொடுக்குமாறு ஸ்ரீமுகமொன்று பிரிட்டனுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதைப் பிரிட்டிஷார் எவ்வாறு கவனிக்கப் போகிறார்கள்? இந்தியாவினால் செல்வம் பெற்று இந்தியாவினால் கௌரவமுற்று இந்தியாவினால் பல வழிகளில் மேன்மை அடைந்து கொண்டிருக்கும் கிரேட் பிரிட்டன் இந்தியாவிற்குச் சுதந்திரம் இலகுவாகக் கொடுப்பது கதை! "மயிலே மயிலே இறகு கொடு" என்று கேட்டால் மயில் தானாக வந்து இறகுகளைப் பிடுங்கிக்கொள்ள ஒருக்காலும் வரவே வராதென்பது உறுதி. ஆகையினால் சாத்மீக முறையில் போராடி எப்பாடு பட்டேனும் சுதந்திரமடைவது இந்தியர்களுடைய முக்கிய கடமையாகும்.

## உப்பு வரிப் போர் *

இந்தியாவின் கடற்கரையோரங்களிலெல்லாம் முன்னாளில் உப்பு செய்யப்பட்டது. அப்பொழுது உப்பின் விலை மிகக் குறைவாகவே இருந்தது. உப்புக்கு வரி ஏற்படுத்தாது ஒவ்வொருவருக்கும் உப்புக் காய்ச்சும் உரிமை இருக்குமாயின் இனாமாகவே உப்பை இந்திய மக்கள் அனைவருக்கும் கொடுக்கலாம். இந்தியாவில் உப்பை உண்டாக்கக் கணக்கற்ற வசதிகளிருப்பினும், உப்புச் சட்டத்தால் உப்புக்கு வரி ஏற்பட்டிருக்கிறது. இந்த உப்புச் சட்டத்தைத் தொலைத்து வரியை நாசம் செய்வதற்கு இந்தியா ஆரம்பித்து விட்டது.

மத ஸ்தாபகர்களால் உவமைகளாக் கூறப்பெற்ற உப்பு—இந்து மதத்தினர்களால் தானமாக வளங்கும் உப்பு, இந்தியாவின் சுதந்திரப் போருக்கு—இந்தியாவின் மூன்றாவது பாரதப் போருக்கு நல்ல காரணமாய் விளங்குகிறது. அநியாய உப்பு வரியின் மூலம் ஏழைகளை நசுக்கி அதன் மூலமாய் ஆட்சி செய்யும் அரசாங்கப் போக்கை மாற்ற வேண்டியது தேச மக்களது கடமையாகும். சர்க்கார் கௌரவமாய் உப்பு வரியை எடுத்துவிட வேண்டும். இதனால் எவ்வளவோ கஷ்டங்கள் உண்டாவதுடன் இன்னும் எத்தனையோ கஷ்டங்கள் உண்

* உப்பு வரியைப் பற்றிப் பிரத்தியேகமாகக் கட்டுரையொன்று இம்மணியில் எழுதப்பட்டிருக்கிறது.

டாகப் போகின்றன என்று எச்சரிக்கிறோம். அற்ப விஷயங்களில் விட்டுக் கொடுக்காததால் பேராபத்துகள் பல உண்டானதற்கு உதாரணங்கள் அநேக மிருக்கின்றன.

## அடக்கு முறை

சுதந்திர உணர்ச்சி வேகமாய்ப் பரவுகிற காலங்களி லெல்லாம் அடிமை நாடுகளில் அடக்கு முறைகள் தாண்டவமாடுவது வழக்கம். சுதந்திர தாகங்கொண்டு இந்தியா அயலார் ஆதிக்கத்தி லிருந்து தன்னை விடுவிக்கப் பிரயாசைப் பட்டுக்கொண் டிருக்கும்பொழுது, சர்க்கார் அநேக வித அடக்கு முறைகளால் கிளர்ச்சியை இப்பொழுது அடக்கப் பார்க்கிறார்கள்.

இந்திய மக்களுக்கு இப்பொழுது கிரீடமில்லாத இராஜாவான நமது காங்கிரஸ் தலைவர் சுதந்திர வீரர் பண்டித ஜவஹரிலால் நேரு அவர்களும் அடக்கு முறைக்கு இலக்காகி சிறை சென்றிருப்பதைப் பற்றி இந்தியாவே வருந்துகிறது. பெரும் பெரும் தேச பக்தர்களையும் அரிய தியாகிகளையும் அஞ்சா நெஞ்சு படைத்த சுதந்திர வீரர்களையும் அஹிம்சையையே ஆபரணமாகக் கொண்ட தொண்டர்களையும் ஜெயிலில் போட்டு வருத்துகிறார்கள். உப்புக் காய்ச்சி உப்புச் சட்டத்தை மீறியவர்களுக் கெல்லாம் கொடுந் தண்டனை. போலீஸார் சாத்விகச் சட்ட மறுப்புச் செய்தவர்களையும் வேடிக்கை பார்க்க வந்தவர்களையும் வீதியில் நடப்பவர்களையும் சில விடங்களில் அடித்துத் தொந்திரவு செய்தார்கள். சில விடங்களில் குதிரைகளை விட்டு மிதிக்கும்படி செய்தார்கள். இந்த ஒழுங்கற்ற அடக்கு முறைகளை இந்தியாவிலிருக்கும் எல்லா இந்தியக் கட்சித் தலைவர்களும் பலமாகக் கண்டித்துக் கொண்டிருக்கிறார்கள்

உப்பு வரியை மீறும் இயக்கத் தலைவர் மகாத்மா காந்தி அவர்களே முதலில் உப்புச் சட்ட மறுப்புச் செய்தார். அவரிடம் சிறிதும் நெருங்காது மற்ற மற்ற தொண்டர்களைப் பிடித்து அடைத்து வைப்பதில் இரகசியம் ஒன்றுமில்லை அடிகளாரைப் பிடித்தால் நாட்டில் தீவிரமான கிளர்ச்சி உண்டாகிவிடு மென்று சர்க்காரே பயப்படுகிறார்கள்.

சர்க்கார் நல்ல நல்ல பெருந் தலைவர்களையும் தீவிர தேச ஊழியர்களையும் சிறையிற் போட்டுத் துன்புறுத்துவதால் இந் நாடெங்கும் பெரியதொரு கிளர்ச்சி வேகமாய் ஏற்பட்டுக்கொண் டிருக்கிறது. சர்க்கார் அடக்கு முறையில் தவறாகப் பிரவேசித்துக்கொண் டிருக்கிறார்கள். மகாத்மாவைக் கைது செய்து சிறையில் அடைத்தவுடன் இந்தியாவின் விடுதலைக் கிளர்ச்சி உச்சம் அடையப் போகின்றது.



33 கோடி மக்களையும் பிடித்து ஜெயிலில் அடைத்து மூடிவிடுவதற்குச் சர்க்காருக்கு இடமேது? கட்டிடமேது? ஜனங்களை எல்லாம் கைதிகளாக்கிவிட்டு மிருகங்களையும் மரஞ் செடி கொடிகளையுமா சர்க்கார் ஆளப்போகிறார்கள்?

## தஞ்சை ஜில்லாக் கலெக்டர் தாரனுக்கு அபஜெயம்

இந்தியாவில் சர்க்கார் உத்தியோகஸ்தர்க ளெல்லாம் தங்களை ராஜாக்களென்றே நினைத்திருக்கிறார்கள். இவர்களை, இந்தியர்கள் இவ்வாறு கருதி யிருக்கும் வரை நாடு அடிமைப்பட்டதே. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பொது ஜன ஊழியர்கள் என்று நினைக்கும் பொழுது தான் இந்தியாவில் சுதந்திரம் வளர ஆரம்பிக்கும்.

தஞ்சை ஜில்லாக் கலெக்டர் ஸ்ரீ தாரன் அவர்கள், தன்னைப் பொது ஜன ஊழியன் என்று நினைக்காது பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தன் போன்றவர்களால்தான் நிலைத்து நிற்கிறதென்று எண்ணி மனப்பால் குடிப்பவர். உப்புச் சட்டத்தை உடைந்தெறிய வேதாரண்யம் செல்லும் சத்தியாக்கிரகத் தொண்டர் படைகளுக்கு எவரும எவ்வித உபசாரமும் செய்யக்கூடா தென்றும் அதற்கு விரோதமாகச் செய்தவர்களுக்கு 6 மாதம் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படு மென்றும் தஞ்சை ஜில்லாவாசிகளுக்கு அறிக்கை யொன்றை வெளியிட்டார். இவ்வறிக்கையைக் கண்டு தஞ்சாவூர் ஜில்லாவாசிகள் திடுக்கிட்டுப் போனார்கள் எனினும் அதை எதிர்த்தே நின்றார்கள்.

இந்த அறிக்கையின் மூலம் தஞ்சை ஜில்லாவாசிகள் அதிகமாக அடக்கு முறைக்கு ஆளாகி, நாட்டில் தேசியக் கிளர்ச்சி வலுத்துவிடு மென்று ஆலோசித்து, இவ் உத்தரவை வாபஸ் வாங்குமாறு சர்க்கார் அவருக்கு உத்தரவு செய்தது. திரு. ராஜகோபாலாச்சாரியாருக்கும் அவர் கூட்டதாருக்கும் உபசரிப்பதில் திரு. தாரனுக்கு என்ன குடிகெட்டுப் போய்விட்டது! சத்தியாக்கிரஹிகள் தீயவர்களா? உபசரிக்கக்கூடாதென்று உத்தரவிட்டுத் தனது அதிகாரத்தைப் பாழ்படுத்திக்கொண்ட ஸ்ரீமான் தாரனுக்காக இரங்குகிறோம். இந்தியா யாருடைய தென்பதை இவர் மறந்துவிட்டார்! உப்பு வரிச் சட்ட மறுப்புச் சத்தியாக்கிரகம் வெற்றி யடையு முன்னும் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைக்கு முன்னும் இந்தியாவில் சர்க்காரால் எத்தனையோ கணக்கற்ற அடக்கு முறைகள் எழப்போகின்றன. எத்துணை அடக்கு முறைகள் வரினும் இந்தியா அஹிம்ஸா தர்ம முறையுடன் ஏற்றுக் கொள்ளத் தயார்.

## சுயராஜ்ய பவனம்

செல்வத்திலும் புகழிலும் தியாகத்திலும் புகழ் வாய்ந்த ஸ்ரீமான் பண்டித மோதிலால் நேரு அவர்கள் பேர்போன "ஆனந்த பவனம்" என்ற தனது வீட்டைக் காங்கிரசுக்கு இனாமாகக் கொடுத்துவிட்டார். இன்று அது சுயராஜ்ய பவனமாக விளங்குகிறது. மிகவும் புராதனச் சரித்திரம் வாய்ந்த இம் மாளிகை பாரத மாதாவின் பாதார விந்தங்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டு தேவி பாரதிக்கு ஆலயமாக இன்று திகழ்ந்துகொண் டிருக்கிறது. காலத்திற்கேற்ற தானம். அந்தஸ்திற்கேற்ற அபார தியாகம்.

தேசபந்து தாசர் தனது ஆஸ்திகள் அனைத்தையும் இந்திய மாதாவுக்கே அர்ப்பணம் செய்தார். அவருடைய தியாகம் விளங்குவது போன்றே இவருடைய தியாகமும் மற்றவர்களுக்குத் தியாக உணர்ச்சிகளை உண்டாக்குவதாக.

## ஸ்திரீ தொண்டர்கள்

மாதர்களுக்கு உரிமை கிடைக்கும் வரையிலும் பாரத மாதாவுக்கும் உரிமை கிடையாது. இப்பொழுது தோன்றி யிருக்கும் சுதந்தரப் போரில் பெண்கள் ஈடுபட்டுத் தொண்டர்களாக முன் வந்துகொண் டிருப்பது போற்றத் தக்கது. ஸ்ரீமதிகள் சரோஜினி தேவியாரும் கமலா தேவியாரும் நேரு குடும்பத்தவர்களும் இனியும் பல விடங்களில் எத்தனையோ பெண் மணிகளும் தேச சேவை செய்ய முன் வந்துகொண் டிருக்கிறார்கள். அவர்களை நாம் பெரிதும் போற்றுகிறோம்.

தமிழ் நாட்டு மாதர்கள் நாட்டைப்பற்றிக் கவனிக்காம லிருக்கிறார்களென்று வருந்துகிறோம். பண்டை மாதசிகளின் வீரம் எங்கே? என்று கேட்கிறோம். தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தி அவர்கள் சத்தியாக்கிரகம் நடத்தும்பொழுது அவருக்கு அதிகமாகத் துணை புரிந்தது தமிழ்ச் சகோதரர்கள் என்பதையும் மறவோம். அதற்கு மாதர்களும் உதவி செய்து கஷ்டப்பட்டதும், அந்த அறப் போரில் பிரவேசித்துச் சர்க்கார் தண்டனை அடைந்து மாண்ட ஸ்ரீமதி வள்ளியம்மாள் அவர்களையும் பற்றி எமக்கு எப்பொழுதும் ஞாபகமிருக்கிறது.

நாட்டு விடுதலைப் போரில் தமிழ் மாதாகள் அவசியம் பிரவேசிக்க வேண்டுகிறோம். அப்பொழுதுதான் அவர்களுக்கு வேண்டிய எல்லாச் சுதந்திரங்களும் கிடைக்கும். தமிழர்கள் தமிழப் பெண்களைப் பொது விஷயங்களுக்கு இழுத்து அவர்களுக்கும் நூதன ஆவேசத்தை உண்டாக்க வேண்டும். தமிழ் நாட்டுப் பெருமையை எப்பொழுதும் நமது சகோதரிகள் காப்பாற்றுவார்களென்றே நம்புகிறோம்.



## மகாத்மா காந்தி அவர்களின் பொன்னுரைகள்

சபர்மதி ஆச்சிரமத்தி லிருந்து அடிகளார் தனது தொண்டர்களுடன் உப்புச் சத்தியாக்கிரகம் செய்வதற்குத் தாண்டி என்ற இடத்திற்கு நடந்து செல்லும்பொழுது, பல கிராமங்களில் அனேக பிரசங்கங்கள் புரிந்திருக்கிறார். அப் பிரசங்கங்கள் அனைத்தும், பெரிய தீர்க்க தரிசிகளுடையவும்—மத ஸ்தாபகர்களுடையவும் நேர்மையான அமிர்த வாக்குகளைப் போன்றிருக்கின்றன. அவைகள் உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சிகளை உண்டாக்குகின்றன. பகவத் கீதை, பைபிள், கொரான், திரி பீடகம், ஜெண்ட் அவஸ்தா முதலிய உயர் நூற்களின் வாக்குகள் போன்று அவருடைய ஆராய்ச்சி மிக்க அருமை மொழிகள் பிரகாசிக்கின்றன.

## காந்தி நிலயம், சிராவயல்

சிராவயல் காந்தி நிலயத்தின் அறிக்கை யொன்றை அதன் அமைச்சர் ஆசிரியர் கும்பலிங்கம் அவர்கள் நமது பார்வைக்கு அனுப்பி யிருந்தார். அதை ஆராய்ந்து பார்க்க, செல்வம் பெருத்த நகரத்தார் நாட்டில் இலங்கும் இத் தேசீயக் கல்விச் சாலையானது சிறிய அளவி லிருப்பினும் நன்கு வேலை செய்திருக்கிறதென்று பொது ஜனங்களுக்கு அறிவிப்பது எமது கடமையாகும். இந் நிலயத்தின் வளர்ச்சி பொது ஜனங்களின் ஆதரவைப் பொருத்தே யிருக்கின்றது. ஒவ்வொரு மாணவனும் ஆடை, சுவடி படிப்பு முதலிய எல்லாச் செலவுகளுக்கும் ரூ. 10—0—0 மாதம் 1-க்குச் செலுத்தினால் போதுமானது. ஒரே ஜாதி ஒரே மதம் ஒரே கடவுள் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இந்த குரு குலத்தை நாம் பெரிதும் போற்றுகிறோம். தமிழ் மக்கள் உத்தியோகத்தில் மோகம் கொள்ளாது இந்தத் தேசீயக் கல்வி ஸ்தாபனத்திற்கு உதவி புரியுமாறு வேண்டுகிறோம்.

## வளையல் சங்கம்

மாதர்கள் பலர் சேர்ந்து வளையல் சங்கம் என்ற பெயருடன் ஓர் சங்கத்தை வட நாட்டில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். "வீரர்களாய் முன் வாருங்கள்; கதர் கட்டுங்கள்; நாட்டு விடுதலைக்கு வேண்டிய வேலைகளைச் செய்யுங்கள், அல்லது எங்கள் போன்று வளையல்களை அணிந்து கொண்டு வீட்டி லிருங்கள்" என்று சொல்லி அதன் அங்கத்தினர்கள் தங்கள் கைகளில் வைத்திருக்கிற வளையல்களை அன்னிய ஆடை உடுத்தியிருக்கிற ஆடவர்களிடம் கொடுக்கிறார்கள். இம் மாதிரியான தேசத் தொண்டு செய்யும் சகோதரிகளை மெச்சுகிறோம். ஒரு அன்ன பூரணா தேவியைக் கூடத் தமிழ் நாடு இதுவரை காணவில்லையே.

## சென்னையின் விழிப்பு

உறங்கிக் கிடந்த சென்னை இன்று உற்சாகத்துடன் எழுந்து நின்று தீவிரமாய்த் தேசிய வேலை செய்துகொண்டிருக்கிறது. தியாகிகள் முன் வந்துவிட்டார்கள். தென்னாடும் வட நாட்டிற்குச் சமமாக வர சென்னை மாகாணத்தின் உழைப்பே தேவை. தமிழர் வீரம் பொங்கி யெழுந்தால், சென்னையில் அப்பொழுது போக்கு வேறு விதமா யிருக்கும்.

## முஸ்லிம் சகோதரர்களுக்கு

தேச பக்தியில் மகா அதிகமாய் உழைத்த தேச பக்தர்களெல்லாம் இப்பொழுது இந்திய சுதந்தரப் போரில் விலகி நிற்பதைக் காணக் கலங்கி வருந்துகிறோம். தேச விடுதலை விஷயத்தில் முஸ்லிம் சகோதரர்கள் இவ்வாறு வேறுபடுவது வருத்தத்தையும் தேசத்திற்குப் பெரும் நஷ்டத்தையும் கொடுக்கிறது. இந்தியா ஹிந்துக்களுக்குச் சொந்தம், இந்தியா முஸ்லிம்களுக்குச் சொந்தம். பார்சி, சீக்கிய, கிறிஸ்தவர்களுக்கும் இந்தியா சொந்தமே. சுதந்தரப் போரில் வெற்றி பெற்றபின் நமது உரிமைகளை கவனிப்போமாக.

தேச விடுதலையைக் கவனிக்க வேண்டிய இச் சந்தர்ப்பத்தில், சில உரிமைகளுக்காக அதனைக் கைவிடில் எவ்வளவு பெரிய தப்பிதம்! சுதந்திரம் நமது பிறப்புரிமை யன்றோ! சுதந்தரம் உண்டெனில் யாவும் சிரமமின்றிக் கைவரும். அதனை அடைவதில்-இந்தியாவின் அடிமைத் தளைகளைக் களைந்தெறிவதில் நீங்களும் ஒன்று சேர்ந்து, தேச க்ஷேமம் ஒன்றையே முதலாகக் கருத வேண்டுகின்றோம். இவ் வேண்டுகோளை நீங்கள் தள்ளாது கொண்டு, மற்றத் தேசத்தார் போன்று இந்தியாவில் வசிப்போர் அனைவரும் சகோதரர்களே, இந்தியாவின் க்ஷேமமே எங்கள் க்ஷேமம் என்பதைக் காட்டி, மாற்றார்கள் எண்ணி வரும் மாற்றத்தை நீக்கிவிட முனைவீர்களாக. மாற்றானுக் கிடங்கொடுத்தால், பசியாத தேகமும் உருகாத பொன்னுங்கூட மாற்ற மடைந்துவிடு மென்பது நாம் கண்ட உண்மையன்றோ!

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை இன்றி இந்தியாவுக்கு எவ்வாறு சுதந்திரம் கிடைக்கும்? இந்தியா அழைக்கிறது; முன் வாருங்கள். ஹிந்து முஸ்லிம் ஆகிய இரு பெரும் வகுப்பினரும் இந்தியச் சுதந்திர யுத்தத்தில் சகோதரர்கள் போல் பாடு பட்டார்களென்று இந்தியச் சுதந்திர யுத்தச் சரித்திரத்தில் பெருமையுடன் எழுதும்படியாகத் தேச விடுதலை வேலைக்கு உடனே முன் வரும்படி முஸ்லிம் சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

198527




ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

கா. நமச்சிவாய முதலியார் பதிப்பித்த

**தொல்காப்பியம்**

| | |
|---|---|
| பொருளதிகாரம், இளம்பூரணம்— அகத்திணையியல், புறத்திணையியல் … | 3 0 0 |
| சொல்லதிகாரம், இளம்பூரணம் … … | 3 0 0 |
| எழுத்து, சொல், பொருள் (மூலம்) … … | 2 0 0 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் … … | (அச்சில்) |
| திருவாசகம் திருக்கோவையார் … … | 1 12 0 |
| தணிகை புராணம் … … … | 5 0 0 |
| திருஞான சம்பந்தர் (வசனம்) … … | 0 10 0 |
| திருநாவுக்கரசர் (வசனம்) … … … | (அச்சில்) |

கா. நமச்சிவாய முதலியார் எழுதிய

**இயற்கைப் பொருட் கதைகள்—**

| | |
|---|---|
| (இதில் குளவி, சிலந்தி, வண்டு, பட்டாம் பூச்சி, வெட்டுக்கிளி, எறும்பு, ஊங்காரப் பறவை, தும்பி, தேனீ, நத்தை, ஆந்தை முதலியவை களின் விஷயங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன) | 0 8 0 |

**குமார வாசக புத்தகங்கள்—**

| | |
|---|---|
| முதற் புத்தகம் முதற் பகுதி … … | 0 2 0 |
| முதற்-புத்தகம் இரண்டாம் பகுதி … … | 0 2 0 |
| இரண்டாம் புத்தகம் … … … | 0 3 0 |
| மூன்றாம் புத்தகம் … … … | 0 4 0 |
| நான்காம் புத்தகம் … … … | 0 5 0 |
| ஐந்தாம் புத்தகம் … … … | 0 6 0 |

புஸ்தக வியாபாரம், சென்னை.

## வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

S. அனவரதவிநாயகம் பிள்ளை, எம். ஏ., எல். டி. எழுதிய

### வாசக பாடத் திரட்டு

இதனுள் ஐக்கிய நாணய சங்கம் (Co-operation), சாரணச் சிறுவர் இயக்கம் (Boy-Scout movement) முதலிய விஷயங்கள் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | ... ... ... | 0 | 8 | 0 |
| இரண்டாம் புத்தகம் | ... ... ... | 0 | 8 | 0 |
| மூன்றும் புத்தகம் | ... ... ... | 0 | 8 | 0 |

ஷை போதகாசிரியர்

முன்னுரையும் அரும்பதவுரையும் எழுதிப் பதிப்பித்த

| | | | | |
|---|---|---|---|---|
| பஞ்ச தந்திரம் ... ... ... ... | 0 | 10 | 0 |
| அவ்வையார் ... ... ... ... | 0 | 12 | 0 |
| மாணவர் தமிழ் அகராதி ... ... ... | 2 | 8 | 0 |
| கதாமஞ்சரி (முதல் பாகம்) ... ... | 0 | 4 | 0 |
| கதாமஞ்சரி (இரண்டாம் பாகம்) ... ... | 0 | 2 | 0 |

### NATURE STUDY READERS

பூ. மு. முருகேச முதலியார் எழுதிய

### இயற்கைப் பொருட் பாடம்

இவை சிறுவர்களுக்குப் பயன்படுமாறு அரிய விஷயங்களை எளிய நடையில் பெரிய எழுத்துக்களில் அழகிய படங்களும் சேர்த்து அச்சிடப் பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் (2-ஆம் வகுப்பு) ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் (3-ஆம் வகுப்பு) ... | 0 | 4 | 0 |
| மூன்றும் புத்தகம் (4-ஆம் வகுப்பு) ... | 0 | 6 | 0 |
| நான்காம் புத்தகம் (5-ஆம் வகுப்பு) ... | 0 | 7 | 0 |





## வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

### CIVICS

### தேசபரிபாலனம்

நாம் இராஜாங்க விஷயமாகப் பற்பல உரிமைகளைப் பெற்று வரும் இக் காலத்தே நமது சிறுவர்களுக்கு தேச பரிபாலன சம்பந்தப் பட்ட அரிய செய்திகளைச் சிறிது சிறிதாகப் போதிக்க இயற்றியது.

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் (4-ஆம் வகுப்பு) ... | 0 | 3 | 0 |
| இரண்டாம் புத்தகம் (5-ஆம் வகுப்பு) ... | 0 | 5 | 0 |

### AGRICULTURE

### விவசாயம்

| | | | | |
|---|---|---|---|---|
| *பயிர்த்தொழில் முதற் புத்தகம் ... ... | 0 | 3 | 0 |
| *பயிர்த்தொழில் இரண்டாம் புத்தகம் ... | 0 | 8 | 0 |

### *GOD-HEROES SERIES

விநாயக புராணம், கந்த புராணம், பாகவதம் என்னும் மூன்று பெரும் புராணங்களுட் கூறப்படும் முக்கிய சரிதங்களைச் சுருக்கி பல நீதிக் கதைகளுடன் முறையே கணபதி, குமரன், கோபாலன் என்னும் மூன்று சிறு புத்தகங்களாக எழுதப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| * கணபதி ... ... ... ... | 0 | 4 | 0 |
| * குமரன் ... ... ... ... | 0 | 3 | 0 |
| * கோபாலன் ... ... ... ... | 0 | 6 | 0 |
| * கோதண்டராமன் ... ... ... | 0 | 8 | 0 |
| * பார்வதி ... ... ... ... | 0 | 6 | 0 |

**கம்பராமாயணம்—**

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் (சுருக்கம்) ... ... | 0 | 10 | 0 |
| அயோத்தியா காண்டம் ,, ... ... | 0 | 14 | 0 |

*இக் குறியிட்டவைகள் தெலுங்கிலும் கிடைக்கும்

வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆரணிய காண்டம் ,, | ... | ... | 0 | 12 | 0 |
| கிஷ்கிந்தா காண்டம் ,, | ... | ... | (அச்சில்) | | |

**பெரிய புராணம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுருக்கம் (முதற் புத்தகம்) | ... | ... | 0 | 12 | 0 |

**பெரிய புராணக் கதைகள்** (அச்சில்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **கந்தபுராணச் சுருக்கம்** (முதற் புத்தகம்) | | ... | 0 | 10 | 0 |
| திருஞானசம்பந்தர் | ... | ... ... | 0 | 12 | 0 |
| திருநாவுக்கரசர் | ... | ... ... | 0 | 10 | 0 |

பக்த சிரோமணிகள்
சரித்திரச் சுருக்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருநாவுக்கரசர் | ... | ... ... | 0 | 2 | 0 |
| சுந்தரமூர்த்திகள் | ... | ... ... | 0 | 2 | 0 |
| சம்பந்தர் ... | ... | ... ... | 0 | 2 | 0 |
| மாணிக்கவாசகர் | ... | ... ... | 0 | 2 | 6 |
| சேக்கிழார் ... | ... | ... ... | 0 | 2 | 0 |
| மார்க்கண்டேயர் | ... | ... ... | 0 | 2 | 6 |
| தாயுமானவர் ... | ... | ... ... | 0 | 2 | 0 |
| திருவெண்காடர் | ... | ... ... | 0 | 4 | 0 |
| நந்தனர் ... | ... | ... ... | 0 | 4 | 0 |
| இராமானுஜர் ... | ... | ... ... | 0 | 2 | 0 |
| ஆதி சங்கராச்சாரியார் | ... | ... ... | 0 | 4 | 0 |
| திருமங்கை மன்னன் | ... | ... ... | 0 | 2 | 0 |
| நம்மாள்வார் ... | ... | ... ... | 0 | 2 | 0 |
| குலசேகராழ்வார் | ... | ... ... | 0 | 2 | 0 |
| தொண்டரடிப்பொடி ஆள்வார் | | ... ... | 0 | 2 | 0 |
| துருவ ப்ரஹ்லாதர் | ... | ... ... | 0 | 4 | 0 |
| ஸ்ரீமந் நாதமுனிகள் / ஸ்ரீ ஆளவந்தார் | ... | ... ... | 0 | 2 | 0 |

புஸ்தக வியாபாரம், சென்னை.





## இங்கு

| | |
|---|---|
| விசிட்டிங் கார்டுகள் | காலெண்டர்கள் |
| விலாசங்கள் | ரசீதுப் புத்தகங்கள் |
| பில் பாரங்கள் | கெஸ்தி ரசீது ,, |
| நோட்டீஸ்கள் | உண்டியல் ,, |
| வால் போஸ்டர்கள் | கணக்கு ,, |
| விவாஹப் பத்திரிகைகள் | செக்ரூல் ,, |
| வரவேற்பு ,, | இதர ,, |
| உபசார ,, | பலவித பைல் ,, |
| அழைப்பு ,, | மாணவர் நோட்டு |

முதலியவைகளும், கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், கோவாப்ரேடிவ் பாங்குகள், ஜமீன்கள், எஸ்டேட்டுகள் ஆகியவற்றிற்கும் வேண்டிய விதம் விதமான பிரிண்டிங், ரூலிங் & பைண்டிங் வேலைகளைப் பலவித வர்ணங்களில் நேரான பார்வையில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் உறுதியாகவும் நேர்த்தியாகவும் உயர்தரமாகவும் குறித்த காலத்தில் சகாயமாகவும் செய்து கொடுக்கப்படும். எல்லாவித பேப்பர் தினுசுகளும் ஸ்டாக் செய்யப்பட்டிருக்கிறது. தபால் வழியாகவும், ரயில் மார்க்கமாகவும் அனுப்பி வைக்கப்படும்.

மாதிரியுடன் அட்வான்ஸையும் அனுப்பி, கடிதம் நன்கு தெரியும் வண்ணம் தெளிவாக எழுதி, சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனையும் குறித்தனுப்புக.

வியாபாரிகள் தங்கள் சொந்த விற்பனைக்கு வேண்டிய ஆர்டர்கள் கொடுத்தால் அவர்கள் விலாசம் போட்டே செய்து கொடுக்கப்படும்.

மானேஜர், ஆனந்தா பிரஸ்,
உத்தமபாளையம், S. இந்தியா.

தேவை

# ‘பாரதி’க்கு

சந்தா—விளம்பரம் சேர்ப்பதற்கு

ஏஜெண்டுகள் தேவை.

மானேஜர், “பாரதி.”

# “லோகோபகாரி”

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினுல் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள், உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தைந்தாவதாண்டு நடக்கிறது.

பத்திராதிபர்:பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை.
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.



# “கலா நிலயம்”

இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.


கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவியென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், 'தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்.

சந்தா விபரம்.

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 7-8-0. வெளிநாட்டிற்கு ரூ. 9-0-0.
தனிப்பிரதி அணா 3. ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

விலை சரசம்! ரங்கூன் புது வயிரம் சரக்கு நயம்!!



நிறம் ஜொலிப்பு கெட்டி உழைப்பு பார்வை மேன்மை எல்லாவற்றிலும் சிறந்தது. அரத்திற்குத் தேயாதது உண்மை வயிரத்திற்கு ஒப்பானது பெருத்த விற்பனையாவது. காரட் 1-க்கு 4ரூ. முதல் 6 ரூ. வரையுள்ள தினுசுகளிருக்கிறது. மற்றும் இமிடேஷன் புஷ்பராகங்களும் ஏராளமாய்க் கிடைக்கும்.

விலாசம்:— அ. பொன்னுச்சாமி செட்டியார், சராப்புக்கடை,
பெரியகடை வீதி, திருச்சி.

## NEW BOOKS OF RESEARCH

By. Prof. PURNALINGAM PILLAI, B. A., L. T.

A FEW COPIES ON HAND.

**ENGLISH**

**Ravana the Great**
Sewed As. 12. Cloth R. 1.
**Critical Studies in Kural.**
Sewed R. 1-4. cloth R. 1-8
**Studies and Critiques**
in Modern English
Literature Re. 1.
**Stories from Goldsmith.**
Sewed As. 12 Limp Re. 1.
**Collectanea:**
Prose and Verse. As. 12.
(In print)

**TAMIL**

**Tappili. or The Faultless.**
(Essays) As. 10
**Marutthuvan Makal** or
**The Doctor's Daughter.**
(Novelette) As. 6.
**Katturai Kalanjiam** (55
topics) As. 12.

Terms—11 copies for 10 purchased at a time. Liberal discount for large orders. No books on commission sale.

Apply to:— THE MANAGER, **The BIBLIOTHECA,**
**Munnirpallam, Tinnevelly Dt., South India.**

## உங்கள் விலாசம்

உயர்ந்த கடிதத்தில் "பாரதி"யின்
அளவில் 100 பிரதிகள் அடங்கிய
பேட் 1-க்கு ரிஜிஸ்டர் தபாற்
செலவுட்பட ரூ 1—8—0 தான்;
பேட் 2-க்கானல் ரூ 2—8—0.
உங்கள் ஆர்டரில் விலாசத்தைத்
தெளிவாக
தமிழா ஆங்கிலமா வென்பதையும்
எவ்விதக்
கலர் பேப்பரிலென்பதையும்
பணத்துடன் குறித்தனுப்புக.
மற்றத் தேவைகளுக்கும் கீழ்க்கண்ட
விலாசத்திற் கெழுதுக.

மானேஜர்,
ஆனந்தா பிரஸ்,
உத்தமபாளையம், S. I.

# T. C P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்ட்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம்
900 000 பங்குகளின் பேரில்
2,700,000 ரூ. மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும், லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்து லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக் கனுப்பி வைத்தும் பாம்பை, கல்கத்தா, கராச்சி முதலிய துறை முகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், டில்லி, லாகூர், அம்ரிட்ஸார், அலகாபாத், கான்பூர், ஆக்ரா, ஆகலில், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜெண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வருகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்கப் புகழையு மடையும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்**
மானேஜிங் டைரெக்டர்,
**T. C. P. A.** ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்.)
கோம்பை, மதுரை ஜில்லா.

**Wake up!** **Insure you must!!**

ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட், ஆஜ்மீர்.

இது மிக்க பழமையானதும், நம்பிக்கையுள்ளதும், அதிக லாபம் தரக் கூடியதும், ஏராளமான பாலிசிகளையுடைய ஸ்தாபனமும் ஆகும். வருஷம் 1-க்கு ரூ. 1000 மதிப்புள்ள பாலிசிக்கு லாபம் ரூ. 22—8—0 கொடுத்திருக்கும் முதன்மையான கம்பெனி இதுவே. இன்றே இன்ஷியூர் செய்யுங்கள்.

கம்பெனியின் விசேடங்கள்:—

ஐவேஜ் பூராவும் கவர்ன்மெண்டு உத்திரவாதம் பெற்றது. செலவோ குறைவு. லாபமோ அதிகம்.

சந்தாதார்களின் நன்மையைக் கருதி நடத்திவரும் கம்பெனி. இதில் ஒரு பாலிசி எடுத்தால் [illegible] அழிவில்லாப் பொக்கிஷமாகும்.

கம்பெனியின் சட்ட [illegible]ட்டங்கள் மிகவும் இலகுவானவை. அவைகளைப் பற்றித் தெரியவேண்டுமானால் அடியிற்கண்ட விலாசங்களுக்கு எழுதுங்கள்.

சீப் ஏஜண்டு:-

*S* வெங்கட்டராம அய்யர் B.A., L.T., புதுத் தெரு. மதுரை.

லோகல் ஏஜண்டுகள்:—

*M*. பரிமணம் பிள்ளை,
உத்தமபாளையம், P. O.

*R*. வெங்கட்டராமய்யர்,
சாளீஸ்வர ரைஸ் மில்ஸ்,
உத்தமபாளையம்.

"பாரதி"

ஓர் தேசிய மாஸிகை.

சந்தா விபரம்.

உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு ... 2—8—0
அல்லது 4 ஷில்லிங்

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எம் மாதத்திலிருந்து சந்தாதாரரானாலும் வருட ஆரம்பமாகிய ஜனவரி மாதத்திலிருந்தே பத்திரிகை அனுப்பப்படும்.

விலாசம்:—

மானேஜர், "பாரதி."
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt.